கோகுலம்

Gokulam

மே '85 ரூ. 2





ராஜா ராம்மோகன் ராய்

பிறந்த நாள் : 22-5-1772 மறைந்த நாள் : 27-9-1833



மலர்—3 இதழ்—4

1985 மே மாத இதழ்

கோகுலம்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

—பாரதியார்

தனிப்பிரதி ரூ 2/-
ஆண்டு சந்தா ரூ 24/-

அருமைச் சிறுவர், சிறுமியரே,

ஆண்டு விடுமுறை வந்ததுமே, அனலைப் போல் வாட்டுகின்ற வெயிலும் வந்து விடுகிறது. வெயிலில் அலைகிறவர்கள் வியர்வையில் குளிக்கின்றனர். உள்ளம் வாடுகிறது; உடல் கறுக்கிறது.

இந்தத் தொல்லைகளிலிருந்து தப்பிக்க உங்களுக்கா வழி தெரியாது? பகல் வேளையில் வீட்டுக்குள்ளோ அல்லது மரத்தடியிலோ அமர்ந்திருப்பீர்கள். வீட்டுக்குள்ளே ஆடும் ஆட்டங்களில் கலந்து கொள்வீர்கள். விடுகதைகள் போட்டுப் பிறரை விழிக்க வைப்பீர்கள். புதிர்கள் போட்டுப் புத்தியைக் கூர்மையாக்குவீர்கள். நல்ல நல்ல புத்தகங்களைத் தேடிப் பிடித்துச் சுவைப்பீர்கள்.


மத்திய அரசு 'பத்மஸ்ரீ' விருது வழங்கிப் பாராட்டிய கல்வித் துறைக் காவலர் நெ. து. சுந்தர வடிவேலு அவர்கள், தமிழகத்தின் பொதுக் கல்வி இயக்குநராகவும், மத்திய அரசின் கல்வி ஆலோசகராகவும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகவும் திகழ்ந்தவர். மதிய உணவுத் திட்டம், சீருடை வழங்கும் திட்டம், பள்ளிச் சீரமைப்பு மாநாடு போன்ற திட்டங்களை வெற்றியுடன் நிறைவேற்ற அரும்பாடு பட்டவர். சின்னஞ் சிறு குழந்தைகளுக்குப் பல புத்தகங்களை எழுதியிருப்பவர். இவரது குழந்தைப் பருவத்தை இந்த இதழில் படிக்கப் போகிறீர்கள்.


புகைப்படம்: எம்.நடராஜன்

—அழ. வள்ளியப்பா



இந்த இதழ் எழுத்தாளர்கள்



ஜே.எம். சாலி


செல்ஷார் கணேசன்


அன்பிற்கினியவன்


சரோஜா ரங்கராஜன்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்


கே. நரசிம்மன்


ப. விஜயகுமார்

பிருந்தாவனக் கவிஞர்கள்


பி. ஆர். ரேணுகா


வெ. கணபதி சுப்பிரமணியன்


எஸ். ராம்குமார்

டி. பாஸ்கர்





யோகீஸ்தாசன்

மால்டோவா சீரணியின் கர்ஞலா கோட்டை விஜயம்

விடுமுறையின் தொடக்கம், மலை பேறும் உல்லாசம்! மால்டோவா சீரணியினர் பம்பாயை அடுத்த கர்ஞலா கோட்டைக்கு பிக்னிக் சென்றனர். டாபுவும் மாலதியும் உணவு வகைகளுடன் மால்டோவாவும் கொணர்ந்தனர் —ஒரு பெரிய ஃப்ளாஸ்க் நிறைய, அருந்தத் தயாராக!

மின்னி எங்கே?

இளங்காலையில் புறப்பட்ட சீரணியினர் காலை உணவு வேளைக்குக் கர்ஞலா பறவைகள் சரணாலயத்தை அடைந்தனர். சூடான மால்டோவாவை விரைந்து பருகியபின் மலையேறத் தொடங்கினர். உல்லாசமாய் ஓடியபடி முன்னே சென்ற மின்னியைத் திடீரெனக் காணவில்லை... அனைவர் முகங்களிலும் கவலை, கலக்கம்....அச்சமயம் மின்னலாய் தோன்றியது சீரணியின் சிறப்பு மெம்பரான மாஜிக் யானை-மின்னியுடன்கூட. அவள் கண்களில் மிரட்சி, பயம். கோபமடைந்த டாபு அவளிடம் ''மின்னி நீ இது போல் இனியும் செய்தால் அடுத்த முறை பிக்னிக்கிற்கு அழைத்துவர மாட்டோம்'' என்றான். ''அவள் நல்ல பாடம் கற்றுக்கொண்டு விட்டாள். நாம் போகலாம். வா'' என்றனர் வேணுவும் சலீமும்.

அந்த நாள் ஒரு மகிழ்ச்சியான நன்னாள்!

சீரணியினர் விரைந்து கோட்டையை அடைந்தனர் நெடுநேர ''போலீஸ்-திருடன்'' விளையாட்டு முடிந்து வீடு திரும்பு முன் சுவையான மால்டோவாவை அனைவரும் களிப்புடன் பருகினர். மனக்களிப்புடன் பாடியபடியே களைப்பின் சுவடே இல்லாமல் மலை திரும்பினர்.

களைப்பில்லை, காரணம் மால்டோவா.

மால்டோவா பருகும் குழந்தைகள் வாழ்வின் சுவை மிக்க காட்சிகளை கண்டு அனுபவிக்கிறார்கள். காரணம்...பொன் வண்ண கோதுமை, பார்லி, தூய பால், செழுமையான கோகோ இவைகளின் சங்கமமான மால்டோவா பாலுக்குச் சுவைகூட்டி பன்மடங்கு பலனையும் தருகிறது. மால்டோவா உங்கள் குழந்தைகளை ஆர்வக் களிப்புடன் இயங்கச் செய்கிறது.

மால்டோவா 'க்ளப்'ல் சேருங்கள்

மிகவும் சுலபமாக சேரலாம். மூன்று 500 கிராம் ஜாடியின் லேபிள்களுடன் அதன் உட்புற லீல்களையும் சேர்த்தோ அல்லது மூன்று காலியான 500-கிராம் ரீஃபில் பேக்கின் மேலுறைகளையோ கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்புங்கள்.

மால்டோவா க்ளப்,
4-வது மாடி, பண்டாரி ஹவுஸ்,
91, நேரு ப்ளேஸ்,
புது டில்லி 110 019.

அவ்வளவுதான் நீங்கள் இப்போது மால்டோவா 'க்ளப்' மெம்பர்.




JIL ஜுகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

வைட்டமின்கள் கூடிய மால்டோவா: ஆரோக்கியம் பலம் மற்றும் சக்திக்கு

SIMDES/JIL/001/84 TAM/R



மாலியும் ஜூலியும்
14
கருத்து: எம்.ஆர்.ராஜன்
டேய் நீலு, எங்க ஜூலி ரொம்ப புத்திசாலிடா! எங்க வீட்டுப் பொருளையெல்லாம் கேட்டுக் கிட்டே வா. எங்கே இருக்குன்னு காட்டிடும்!
ஓ, அப்படியா, இப்பவே பார்த்திடலாம்!
ஏ ஜூலி! சோபா எங்கே இருக்கு காட்டு
பார்த்தியா கரெக்டா காட்டிடுச்சு!
டீ.வி. எங்கே இருக்குன்னேன். அதையும் காட்டிடுச்சு!
மாலியுடைய புத்தகப்பை எங்கே?... அடே, அதையும் கண்டு பிடிச்சுடுச்சே!
சரி, மாலியுடைய போட்டோ எங்கே?
அதையும் சரியா காட்டிடும் பாரேன்.
இது என்னடா! உன் போட்டோவைக் கேட்டால், வாசலிலே இருக்கிற திருஷ்டிப் படம்... மீசையும் முடியுமா.. அதைக் காட்டுது!



சுருட்டும் திருட்டும்

ஓர் ஊரிலே சுருட்டு வியாபாரிகள் இருவர். அவர்களுக்குள் போட்டி அதிகமாக இருந்தது.

போட்டி போட்டு ஒருவருக்கொருவர் சுருட்டு விலையைக் குறைத்து விற்றுக் கொண்டிருந்தார்கள்.

தன் போட்டி ஆசாமி அசலுக்கும் குறைவாக விற்பதைக் கண்டு, மற்றவரால் அதைச் சமாளித்துப் போட்டி போட முடியவில்லை. எப்படிக் குறைந்த விலைக்கு விற்கிறார் என்பது விளங்கவில்லை.

இரவு கடையைப் பூட்டியதும், இவர், அவர் (போட்டி வியாபாரி) வரும் வழியையே — எதிர்பார்த்துக் கொண்டு நின்றார். அவரும் கடையைச் சாத்திவிட்டு வருகிறார்.

அவரை நோக்கி, ''ஐயா, நான் புகையிலையைத் திருடிக் கொண்டு வந்து விற்கிறேன்; எனக்கே இந்த விலை கட்டுப்படி ஆகவில்லையே? உங்களுக்கு எப்படிக் கட்டுகிறது?'' — என்று கேட்டார்.

அதற்கு அவர், ''உன்னைப் போல முட்டாள் அல்ல நான். சுருட்டையே திருடிக் கொண்டு வந்து விற்கிறேன்'' என்றார்!

எப்படி இந்த வணிகம்?

'சுருட்டும், திருட்டும் அது கலந்த உருட்டும்' எப்படி?

பல்லக்கும் கன்றுக்குட்டியும்

ஒரு மடத்திற்குச் சொந்தமான கன்றுக் குட்டியைக் காணாமல் தவித்த அந்த மடாதிபதி, தம் பல்லக்குத் தூக்கும்' ஆட்கள் நால்வரையும் அழைத்து, கன்றுக்குட்டியைத் தேடி வரும்படி ஏவினார். அவர்கள் நால்வருமாகச் சேர்ந்து,

''சாமி, பல்லக்குத் தூக்குவதுதான் எங்கள் வேலை; கன்றுக்குட்டியைத் தேடுவது எங்கள் வேலையல்ல,'' என்று சொல்லிவிட்டனர்.

உடனே மடாதிபதி, ''சரி, நானே கன்றுக் குட்டியைத் தேடப்புறப்படுகிறேன். பல்லக்குத் தயாராகட்டும்'' என்றார். வெற்றிக் களிப்புடன் பல்லக்கைக் கொண்டு வந்தனர்.

மடாதிபதி அதில் ஏறி அமர்ந்து, ஊர் முழுவதும் பெரிய சாலைகள் எல்லாம் அலைந்து, பிறகு, சந்து, பொந்து மூலை முடுக்குகளில் எல்லாம் பல்லக்கைக் கொண்டு போகச் சொன்னார். மிகக் குறுகிய, நெருக்கடியான சந்துகளில் 'எல்லாம் போக முடியாமல் கஷ்டப்பட்ட அந்த நால்வரும், பல்லக்கைக் கீழே இறக்கி வைத்து,

மின்மினிக் கதைகள்



''சாமி, தாங்கள் இங்கேயே இருங்கள். நாங்களே போய்க் கன்றுக் குட்டியைத் தேடிவருகிறோம்'' என்றனர்.

உடனே மடாதிபதி, புன்னகையுடன் அவர்களைப் பார்த்து, ''இவ்வளவு தூரம் நீங்கள் பல்லக்கையும், என்னையும் சுமந்து வந்து இங்கே இறக்கி விட்டு, இப்போது தேடுவதை அப்போதே தேடியிருக்கலாமே!'' என்றார்.

அவர்கள் வெட்கித் தலைகுனிந்து கன்றைத் தேடப் புறப்படலாயினர்.

ஊர்வலம்

திண்டுக்கல்லில் பெரிய இடத்துத் திருமணம்; பூப்பல்லக்கு அலங்காரம்; ஊர்வலம் வருகிறது.

மதுரை பொன்னுசாமிப் பிள்ளை நாயனம். பைரவி ராகம் ஆலாபனம் பண்ணிக் கொண்டிருக்கிறார். பெருங் கூட்டம் கூடி விட்டது. எல்லோரும் அந்த இசையின்பத்திலே தோய்ந்து திளைக்கின்றனர்.


அந்நேரம் அந்தக் கும்பலை விலக்கிக் கையிலே பூமாலையை எடுத்துக் கொண்டு ஒருவர் வேகமாக உள்ளே நுழைந்தார். ஒத்து ஊதிக் கொண்டு பக்கத்தில் நின்றவருக்கு மாலையைப் போட்டார். எல்லாரும் 'என்னங்க, யாருக்கு மாலையைப் போட்டீங்க?' என்று கேட்க,

அவர், 'மதுரை பொன்னுசாமிக்கு'த்தான் என்றார். அவர்கள், 'அவரல்ல; இவர்தான் பொன்னுசாமி' என்று சுட்டிக் காட்டிச் சொன்னதும், வந்தவர், 'இவரைவிட அவர் நல்லா வாசித்தாரே' என்றார்.

'எப்படி ஐயா கண்டீர்கள்?' என வியந்து கேட்க, மாலை போட்டவர், 'இவர் விட்டு விட்டு ஊதுகிறார். அவர் விடாமல் ஊதுகிறாரே' என்று சொன்னார்.

அறுபது ஆண்டுகட்கு முன்பே — நம்மில் சிலர் இசையைச் சுவைத்த அழகு இது!





சிந்தனை செல்லும் வழி

ஏணி மரத்தின் மீது ஏறி சுவரில் ஆணி அடிக்கிறான் ஒருவன். மற்றொருவன் கீழே நின்று ஏணி மரத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

சற்றுநேரம் அதிகமாகவே, கீழே நிற்பவன் அவனை ''ஆணி இறங்கவில்லையா? கான்கிரீட் சுவரா, என்ன?'' என்று கேட்கவே,

''மண் சுவர்தான். விரைவில் அடித்துவிடுகிறேன்'' என்று சொல்லி மீண்டும் வேகமாகச் சுத்தியலால் அடிக்க ஆரம்பித்தான்.

ஏணியைப் பிடித்துக் கொண்டிருந்தவன், நன்றாக மேலே பார்த்துவிட்டு, ''கொண்டையைச் சுவரில் வைத்துக் கூர்ப்பக்கமாகச் சுத்தியால் அடிக்கிறாயே!'' என்று கோபித்தான். அதற்கு அவன், சிந்தித்துவிட்டுச் சொன்னான்: ''என் மேல் தப்பில்லை. ஆணிக் கம்பெனிக்காரன் கூர் இருக்க வேண்டிய இடத்தில் கொண்டையையும், கொண்டை இருக்க வேண்டிய இடத்தில் கூர்மையையும் சிந்திக்காமல் வைத்துவிட்டான். இது எப்படி இறங்கும்?'' என்றான்.

அதற்குக் கீழே இருப்பவன் சொன்னான்: ''ஆணிக் கம்பெனிக்காரன் மீதும் தப்பில்லை. ''இந்த ஆணி எதிர்ச் சுவரில் அடிக்கிற ஆணி'' என்று கடைக்காரனிடம் கொடுத்துவிட்டு, இந்தச் சுவருக்கான ஆணியை வாங்கிக் கொண்டு வா'' என்று அனுப்பினான்.

எப்படி? குறுக்கு வழிச் சிந்தனைகள் பலவற்றுக்கு இது ஒன்று போதுமானது.

ஒற்றுமைக்காக

ஒரு தென்னந்தோப்பைக் குத்தகைக்கு எடுத்தவன், ஒருமுறை நிறையத் தேங்காய்களைப் பறித்தான்; மட்டையை உரித்தான். உரித்த மட்டைகளை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, தேங்காய்களை விற்பனைக்காகச் சந்தைக்கு அனுப்பினான்.



தோப்பிலே எங்கு பார்த்தாலும் ஒரே தேங்காய் நார்த் தூசியாகக் கிடந்தது.

மேல்தூசி, கீழ்தூசி, இரண்டும் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டன. நாம் தேங்காயோடு இணைந்திருக்கும் போது துன்பமில்லை. இப்போது நம்மைப் பிரித்துவிட்டார்கள். இப்படிச் சிதறிக் கிடக்கின்றோம்,'' என்றது கீழ்தூசி.

அதற்கு மேல்தூசி, ''இது தோப்புக்காரன் தப்புமல்ல; குத்தகைக்காரன் தப்பும் அல்ல; நம் தப்புத்தான். நாம் சேர்ந்து வாழக் கற்றுக் கொண்டால் எல்லாம் சரியாகிவிடும்'' என்றது.

''நாம் சேர்ந்து இழைந்து வாழ்ந்துவருகிற சிறு கயிறாகி, மணிக் கயிறாகி, பந்தல் கயிறாகி, வால் கயிறாகி, தேர்வடக் கயிறாகி ஒன்றாக இணைந்து ஒற்றுமையாக இருந்தால், நம்மை விட்டுப் பிரிந்த நமது எதிரிகளான தேங்காய்கள்கூட நம்மேல் மோதி, தானாகவே 'டாண், டாண்' என்று உடைபடும்'' என்றது.

அப்படியே, தேங்காய் நார்த் தூசிகளின் ஒற்றுமை வலுவினால் உண்டான தேர்வடக் கயிற்றால் மோதித் தேங்காய்களே உடைபடுகின்றன.

ஒற்றுமைக்கு இவ்வளவு பலம் உண்டு என்று அறிந்த நாமும் இனி சேர்ந்து வாழக் கற்றுக் கொள்வோமா?

—முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் 'அறிவுக் கவிதைகள் தொண்ணூறு' என்ற புத்தகத்திலிருந்து.

குன்றக்குடியானுக்குக் குழந்தை இலக்கியப் பரிசு!



'கோகுலம் மீண்டும் மலரப் போகிறது!' என்ற செய்தியை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு படித்து மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தீர்கள். 1983 பிப்ரவரி மாதம் முதல் இதழ் வந்தது.

முதல் இதழிலே முதற் பாடலாக 'பிள்ளையாரே!' என்று ஒரு பாட்டு. அதற்குப் பக்கத்திலே 'கண்ணன் வருகிறான்' என்று ஒரு பாட்டு. இந்தப் பாடல்களை எழுதிய இரு கவிஞர்களும் பெரிய சிறப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

'கண்ணன் வருகிறான்' பாடலை எழுதிய குன்றக்குடியான் புதுடில்லியிலுள்ள தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் (N.C.E.R.T.) நடத்திய குழந்தை இலக்கியப் போட்டியில் இந்த ஆண்டு ரூ. 5000/— பரிசு பெற்றிருக்கிறார்! 5 வயது முதல் 8 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான நூல்களில் குன்றக்குடியான் எழுதிய 'பொன் மயில்' என்ற நூலுக்கு இப்பரிசு கிடைத்திருக்கிறது.

'கண்ணன் வருகிறான்' பாடலை எழுதிய கவிஞர் திருச்சி பாரதன் சென்ற ஆண்டு தமிழக அரசின் 'கலைமாமணி' விருது பெற்றார்.

அரசு குற்றவியல் துறை வழக்கறிஞராகப் பணிபுரியும் கவிஞர் குன்றக்குடியானின் இயற்பெயர் முத்து வயிரவன். காரைக்குடிக் குழந்தை இலக்கியச் சங்கத் தலைவரான இவர், ஒரு முறை ராஜாஜியைச் சந்தித்து ஆசி கோரிய போது, ''முத்து வயிரவன் கவிதைகளிலே முத்தையும் வைரத்தையும் எதிர்பார்க்கிறேன்,'' என்று கூறி வாழ்த்தினார். ராஜாஜியின் வாழ்த்து பலித்து வருகிறது!

—ஜோசப் ஸ்டாலின்.



குமரிக் குழந்தைகள் கோகுல இலக்கிய சங்கம்

அருந்தமிழ் வளர்த்த அகஸ்திய மாமுனிவர் ஈசுவரனை வணங்கிய இடம் அகஸ்தீஸ்வரம். இது கன்னியாகுமரிக்கு அருகில் உள்ள அழகிய நகரம். அந்த நகரில் 'குமரிக் குழந்தைகள் கோகுல இலக்கியச் சங்கம்' கடந்த மார்ச் மாதம் தொடங்கப் பெற்றது.

நாகர்கோயில் வானொலி வட்டார இயக்குனர் திரு. ப. யூ. அயூப் சங்கத்தைத் துவக்கி வைத்தார். திரு. குன்றக்குடிப் பெரிய பெருமாள் தலைமை தாங்கினார். வாழ்த்துரை வழங்கிய கவிஞர்கள் ரா. பொன்ராசன், ஆ. ஜோசப் ஸ்டாலின், புலவர் ஏ. எம். டி. செல்லத்துரை, புலவர் எம். டி. பெரியவன், திருமதி லிங்கம்மாள் ஆகியோரைச் சங்கக் குழந்தைகளுடன் காணலாம்.

குழந்தைகள் காஸெட்




குழந்தைகளுக்கென்று பிரத்யேகமாய் கோகுலம் பத்திரிகை இருக்கிறதல்லவா, அதே மாதிரி குழந்தைகளுக்கென்றே தயாரிக்கப்பட்ட காஸெட்டுகளை வெளியிட்டுள்ளது கீதாஞ்சலி நிறுவனம். இந்த காஸட்டுகளில் உங்களுக்குப் பிடித்த, தெரிந்த பாடல்கள் இருக்கின்றன. பாரதியாரின் ஓடி விளையாடு பாப்பா, கவிமணியின் தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு, குழந்தைக் கவிஞரின் மியாவ் மியாவ் போன்ற பிரபலமான சில பாட்டுக்களைக் கேட்கலாம். இன்னும் உங்களுக்குத் தெரியாத புதுப் பாடல்கள் சிலவும் இருக்கின்றன.

இந்த இரண்டு காஸெட்டுகளை டி. எம். சௌந்தரராஜன் அவர்கள் ஒன்றும் பி. சுசீலா அவர்கள் ஒன்றுமாகப் பாடியிருக்கிறார்கள். டி. எம். எஸ். தாமே ஒரு காஸெட்டுக்கு இசை அமைத்திருக்கிறார். இன்னொன்றுக்கு வி. குமார் இசை அமைத்திருக்கிறார். இத்தனை பிரபலமானவர்களெல்லாம் குழந்தைகளுக்கென ஆசையாக நேரம் ஒதுக்கி, முயற்சி எடுத்துக் கொண்டது பாராட்ட வேண்டிய விஷயம் இல்லையா?

குழந்தைகள் பாடல்கள், குழந்தைகள் கதைப் பாடல்கள் என்ற இந்த இரண்டு காஸெட்டுகளும் கண்ணைக் கவரும் விதமாக அழகான புத்தகம் போன்ற வண்ணப் பெட்டியில் வருகின்றன. கேட்டு மகிழலாம். கேட்டுக் கொண்டே புத்தகத்தில் அந்தந்தப் பாட்டைப் படித்து வந்தால் சீக்கிரமே நீங்களும் பாட்டைக் கற்றுக்கொண்டு விடுவீர்கள்.

கேலிச் சித்திரங்களுக்கு நூறு ஆண்டு



கார்ட்டூன் படங்களை லட்சக் கணக்கான வாசகர்கள் விரும்பிப் படிக்கிறார்கள். பல கற்பனை கார்ட்டூன் பாத்திரங்களை அமெரிக்க மக்கள் விரும்புகிறார்கள். ஏன், கற்பனைக் கார்ட்டூன் பாத்திரங்களைத் தங்கள் 'ஹீரோ'க்களாகவே கொண்டாடுகிறார்கள்.

முதல் கார்ட்டூன் சித்திரங்கள் 1885—ஆம் வருஷம் அமெரிக்கப் பத்திரிகையில் 'The Yellow Kid' என்ற தலைப்பில் வெளியாகியது. கார்ட்டூன் படங்கள் வந்த பத்திரிகைகளின் விற்பனை கூடியது. 1900—ஆம் ஆண்டில் 'Bringing up Father' என்ற கார்ட்டூன் சித்திரம் மிகவும் பிராபல்யமான ஒன்று. இந்தச் சித்திரங்களின் கதா பாத்திரங்களான மாகியும் ஜிக்ஸூம் மனம் கவர்ந்த நட்சத்திரங்கள்! இந்தக் கதாபாத்திரங்களின் ஹாஸ்யங்கள் 'The Funnies' என்ற புனைபெயரைப் பெற்றன.

1930—ஆம் ஆண்டில் 'Terry and The Pirates', 'Buck Rogers' 'Super man' என்ற பிரபலமான திடுக்கிடும் சாகச வீரர்களின் கதைச் சித்திரங்கள் மனத்தைக் கவர்ந்தன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், 'Pogo,' 'Peanuts' ஆகிய சிறுவர்கள் 'Snappy' என்ற நாயுடன் சிரித்து மகிழ்வித்தனர்.

கார்ட்டூன் கதாபாத்திரங்கள் அமெரிக்க மக்களை ஆட்டிப் படைக்கின்றனர் என்றால் அதில் சிறிதும் பொய்யில்லை. அக்கதாபாத்திரங்கள் விரும்பி ஓர் ஆகாரத்தைச் சாப்பிடுகிறார்கள் என்று அச்சிட்டால், அந்தப் பொருள்களுக்கு அமோக ஆதரவு! கற்பனைக் கதாபாத்திரமான குத்துச் சண்டை வீரர் ஜோ பலூக்கா வெண்ணெயை விரும்பிச் சாப்பிடுவதாக அச்சிட்ட போது அங்குள்ள வெண்ணெயின் விற்பனை பல மடங்கு பெருகியது. இந்தக் கார்ட்டூன் கேலிச் சித்திரங்களுக்கு இப்போது நூறு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன!

—பி. எஸ். எம்.



என் குழந்தைப் பருவம்

'பத்மஸ்ரீ' நெ.து.சுந்தரவடிவேல

நான் பிறந்த சிற்றூரின் பெயர், நெய்யாடுபாக்கம். அது காஞ்சிபுரத்திற்குத் தென்கிழக்கே பன்னிரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பழைமையான எங்கள் ஊரில், சோழர் காலத்துச் சிவன் கோயில் ஒன்று உள்ளது.

என் தந்தையாரின் பெயர் நெ. ச. துரைசாமி. என் தாயார் பெயர், சாரதாம்பாள்.

நான் மூத்த மகன். என் தம்பிகள் நால்வர்; தங்கைகள் இல்லை. கடைசித் தம்பி, ஐந்து வயதுக்குள் இறந்துவிட்டான்.

என் தந்தையைப் பெற்ற பாட்டனார் பெயர் சண்முகம். அவரது படாடோபமில்லாத வாழ்வும் பிறருக்கு உதவும் பண்பும் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

தாத்தாவின் வீடு, தெருக்கோடியில் இருந்தது. காஞ்சிபுரம், திருவண்ணாமலைப் பக்கங்களிலிருந்து பரதேசிகள் வந்தால், தாத்தாவின் வீட்டைத் தாண்டித் தான் வரவேண்டும்.

என் இளமைப் பருவத்தில், சிற்றூர்களில் தெரு விளக்கு கிடையாது. வீட்டு மாடங்களில் அகல் விளக்கு, மினுக் மினுக்கென்றுஎரிந்துகொண்டிருக்கும். இரவுநேரங்களில், பரதேசிகள் வந்தால், என் தாத்தா அவர்களைத் தன் வீட்டண்டையே தங்க வைத்துவிடுவார். முதலில், தன் வீட்டு அடுப்பங்கரைக்குச் செல்வார்; உள்ளதைக் கொண்டு வந்து போடச் செய்வார். உள்ளே ஒன்றுமில்லையென்றால் அடுத்துள்ள உறவினர் வீடுகளுள் உரிமையோடு செல்வார். உறவினர்களில் அவரே மூத்தவர். அவ்வுரிமை பற்றி, எல்லோர் வீடுகளிலும் அடுப்பங்கரை வரை சென்று, ஏதாவது போட ஏற்பாடு செய்துவிட்டு வருவார். எங்கள் ஊருக்குள் நுழைந்தபின், பட்டினி கிடந்த பரதேசியை என் இளமைப் பருவம் கண்டதில்லை. அதற்குப் பெரிதும் காரணம் என் தாத்தா. அவரது உதவும் போக்கு என் இதயத்தில் என்றும் பசுமையாக இருக்கிறது.

தாத்தாவின் பொறுமையும்

என்னைக் கவர்ந்த ஒன்றாகும். சிற்றூர் என்றால், சிறுசிறு சலசலப்புக்கள் இல்லாமல் போகுமா? சலசலப்பு, தடிப்பான சொற்களைக் கொண்டு வருவது சாதாரணம்.

என் தாத்தாவின்மேல்வெகுண்டு, மற்றவர்கள் கடு சொற்கள் வீசியதை நான் சில முறை கேள்விப்பட்டிருக்கிறேன். என் தாத்தா, எவரையும் திருப்பி வைய மாட்டார்.

ஒருமுறை, வசவைக் கேட்டுக்கொண்டிருந்த எனக்குச் சினம் பொங்கிற்று. திருப்பித்திட்டத் தாத்தாவின் அனுமதியை வேண்டினேன்.

'கண்டதைச் சொல்லி உன் வாயும் நாற வேண்டுமா? நீ, பதிலுக்கு வைய வேண்டாம்' என்று என்னைத் தடுத்துவிட்டார்.

என் தாத்தா எவர் பேரிலும் எந்நேரத்திலும் பழிவாங்க முயன்றதில்லை. அவருடைய அந்த நல்லியல்பைப் பின்பற்ற முயன்றுவருகிறேன். இதுவரை வெற்றி பெற்று வந்துள்ளேன்.

என் இளமைப் பருவத்தில், பல சிற்றூர்களில் இப்போதிருப்பதைக் காட்டிலும் அதிகமான தன்னிறைவு நிலவியது. உள்ளூரிலோ, அக்கம்பக்கத்திலோ, நவதானியங்களும் விளைந்து பண்டமாற்றாயின. 'அஸ்கா' சர்க்கரை, மண்ணெண்ணெய், ரவை, உருளைக் கிழங்கு முதலியன வாங்க மட்டுமே சந்தைக்குச் செல்ல நேரிடும்.

எங்கள் ஊர், செய்யாற்றிற்கும் மலையன்குளம் மடுவிற்கும் இடையில்





இருக்கிறது. பழங்காலத்தில் அடிக்கடி வெள்ளம் வரும். எனவே, ஊருக்கு வருவதும் போவதும் பெரும்பாடு. அக்காலத்தில் சரியான மண் பாதை கூடக் கிடையாது. இப்போதோ, ஊருக்குக் கிழக்கிலும், மேற்கிலும் கார், பேருந்து முதலியன செல்லக் கூடிய சாலை உண்டு.

நான் சிறுவனாயிருந்த போது, எங்கள் ஊரில் ஒரு திண்ணைப் பள்ளிக் கூடம் கூட இல்லை. இப்போது, தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆக இரண்டும் இயங்குகின்றன. உயர் நிலைப்பள்ளியின் வெள்ளிவிழா, சென்ற அக்டோபர் 7—ல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சாலை மேம்பாடு, தெருக்களில் மின்விளக்குகள், பாதுகாக்கப்பட்ட குழாய்நீர், கல்வி வளர்ச்சி, இவை யாவும் நம் நாடு விடுதலை பெற்றதன் நேரடி விளைவுகள் ஆகும்.

எனக்கு ஐந்து வயது நிரம்பிய போது, 'எழுத்தறிவிப்பு' விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஊரின் மேற்கிலுள்ள சிவன் கோவிலில் வழிபட்ட பிறகு, என்னைப் பல்லக்கில் உட்கார வைத்து, ஊர் நடுவில் உள்ள பெருமாள் கோவிலண்டை அழைத்துப் போனார்கள். கோயிலுக்கு முன் தனியாகப் போடப்பட்ட பந்தலில், மணலில் எழுதக் கற்றுக் கொடுத்தார். எவர்? இளையனார், வேலூர், கதிர்வேலு வாத்தியார், எழுத்தறிவித்தார்.

ஈராண்டு, உள்ளூரிலேயே படித்



தேன். ஆசிரியர், பக்கத்தூரிலிருந்து வந்து போவார். ஆற்றில் வெள்ளம் வரும் நாட்களில், படிப்பு தடைப்படும். அக்காலத்தில், செய்யாற்றில் பல நாள், வெள்ளம் போகும்.

மூன்றும் வகுப்பிற்காக, நான் காஞ்சிபுரம் சென்றேன். தேவல்ல, இராமசாமி ஐயா நடுநிலைப் பள்ளியில் சேர்ந்தேன். என் அப்பாவைப் பெற்ற பாட்டி, திருமதி நாகம்மாள், எனக்காகக் குடித்தனம் கட்டி, சமைத்துப் போட்டு, உதவினார்.

பள்ளிக்கூடத்திலிருந்து, வீடு திரும்பியதும் நடையிலேயே, உடைகளைக் களைந்துவிட்டு, தீட்டுப்படாத வேறு உடையைப்போட்டுக்கொள்ள வேண்டுமென்பது அக்காலப் பழக்கம். சில நாட்கள் அதைப்பின்பற்றினேன். பின்னர் உடை மாற்றிக் கொள்ள மறுத்தேன். பாட்டிபட்ட வேதனை கொஞ்சமல்ல. பேரன் மனம் மாறவில்லை. பாட்டியே தன்னைத்தானே தேற்றிக் கொண்டார்கள்.

எனது மூன்றும் வகுப்பில் முப்பத்தைந்து மாணவர்கள் இருந்தோம். எங்களில் ஐவர் மட்டுமே, நாட்டுப்புற, முதல் தலைமுறைப் படிப்பாளிகள். எங்களுக்கு வகுப்பறைப் பாட முறையும் பிற சூழலும் திகைப்பூட்டின. படிப்பில் தயங்கினோம்.

வகுப்பாசிரியர் வைத்தியநாத சாமி அய்யர் எங்கள் ஐவரையும் உன்னிப்பாகக் கவனித்து வந்தார். எங்கள் ஐவரையும்தொடர்ந்து மூன்று சனிக்கிழமைகள் தமது வீட்டுக்கு வரச் சொல்லி, கூடுதலாகச் சொல்லிக் கொடுத்தார். பகல் உணவும் அளித்தார். எங்கள் கல்வி, வேரூன்றித் தழைக்க உதவிய ஐயரை மறக்க இயலுமா?

காஞ்சிமாநகரில் இயங்கி வரும் ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளிக்கு நான்காம் வகுப்பிற்கு மாறிவிட்டேன். பதினோராவது வகுப்பு முடிய அதே பள்ளியில் படித்தேன். வைத்தியநாத சாமி ஐயர் போட்ட அடித்தளம் சரியாக இருந்ததால், எவ்வகுப்பிலும் தோல்வி காணவில்லை; கல்லூரியிலும் எல்லா வகுப்புக்களிலும் தேர்வு பெற்றேன்.

என் தந்தையின் விருப்பப்படி 'கிறிஸ்தவ வேதம்' படித்தேன். அப்பாடத்திலும் வேறு சில பாடங்களிலும் முதல் அல்லது இரண்டாவது பரிசு பெறுவேன்.

என்னை, உயர்நிலைப்பள்ளிக்கும் கல்லூரிக்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்னும் அவா, என் அப்பாவிற்கு எப்படி வந்தது? அவரது இளமைப் பருவத்தில், அவர், கும்பகோணம் செல்ல நேர்ந்தது. காவிரி தாலாட்ட அறிவு வளர்த்துக் கொண்டிருந்த, அரசினர் கலைக்கல்லூரி அவருடைய கருத்தைக் கவர்ந்தது. இத்தகைய கல்லூரியில் படிக்கும் வாய்ப்பைத் தம்முடைய மக்களுக்குத் தர விரும்பினார். துடிசைக்கிழார் சிதம்பரனார் என்பவர், அப்பக்கத்தில் காவல் துறை ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்தார். அவர், என் தந்தையின் விருப்பத்திற்கு உரமிட்டார். விளைவு? நால்வ



ரில் மூவர், பல்கலைக் கழகப் பட்டதாரிகள்!

பலசமயத்தவர், பலசாதியினர், என் நண்பர்கள். அவர்கள் வீடுகளில் தின்பண்டங்களைத் தின்பேன். அது என் தந்தைக்குத் தெரியும். அவர் தடுக்க முயன்றதில்லை. பள்ளிப் பருவத்தில் தொடங்கிய நட்புகள், வாழ்நாள் முழுவதும் பசுமையாக இருக்கின்றன. என் நண்பர்களில் ஒருவர், திரு.வி.கே. இராசகோபால் என்பவர். அவருடைய தாயார், என்னைத் தன் பிள்ளைகளில் ஒருவனாகவே நடத்துவார். நண்பர் இராசகோபால், 'இந்து' நாளிதழில், 'லினோ ஆபரேட்டராகப் பணிபுரிந்த பின், ஓய்வுபெற்று, திருவல்லிக்கேணியில் குடியிருக்கிறார்; அவ்வப்போது காண்கிறோம்.

என் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் அனைவருமே நல்லவர்கள்; திறமையானவர்கள்; அன்பானவர்கள்; பொறுப்புணர்ச்சி மிக்கவர்கள்; சமய உணர்வும், சாதிப் பற்றும் உடையவர்கள். ஆனால், கல்விப்பணியில், சமய வேற்றுமையையோ, சாதி வேற்றுமையையோ காட்டாத சான்றோர்கள். அவர்களில் தமிழ்ப் பண்டிதர் திரு. நரசிம்மாச்சாரியாரும் பின்னர், சென்னை மாநிலக்கல்லூரி தமிழ் ஆசிரியர், கா. நமச்சிவாய முதலியாரும் என்னுள் தமிழ்ப் பற்றை விதைத்தவர்கள்.

இந்திய அரசின் நிதி அமைச்சராயிருந்த டாக்டர் சி. சுப்பிரமணியமும், தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியர் பெரியசாமித் தூரனும் ஒரு கால மாணவர்கள் வனமலர்ச்சங்கம் என்று ஒரு சங்கம் அமைத்து என் தமிழ்ப் பற்றுக்கு உரமூட்டியதோடு, நாட்டுப்பற்றையும் வளர்த்தவர்கள் ஆவார்கள்.

நான், ஏழு வயதில், காஞ்சிபுரம் சென்ற போது, அவ்வளவு பெரிய நகரில், மூன்று கார்கள் மட்டுமே இருந்தன; பேருந்து கிடையாது; பெரும்பாலும் ஒற்றை மாட்டு வண்டிகளும் பல குதிரை வண்டிகளும் வாடகைக்கு ஓடின. அப்போது, நகரத் தெரு விளக்குகளும் மண்ணெண்ணெய் விளக்குகளாகவே இருந்தன.

சிறுவனாயிருந்த போது, எனக்கு அடர்ந்த முடி உண்டு. பதின்மூன்றாம் வயதில், அதைக் 'கிராப்பாக' மாற்றிக் கொள்ள, என் தந்தை இசைந்தார். என் பாட்டி பதறினார்.

'கிறிஸ்தவப்பையன் போல், கிராப் போடு வீட்டிற்குள் நுழைய விட மாட்டேன்' என்று சண்டை போட்டார்.

சமரசம் ஏற்பட்டது. முன் பாதியை முழுக்க வழித்துவிட்டு, பின் பாதியை மட்டும் கத்தரித்துக் கொண்டேன். அந்த 'இந்தியக் கிராப்பை'ப் பாட்டி பொறுத்துக் கொண்டார். கல்லூரியில் சேர்ந்த பிறகு, கிராப்புத் தலை வந்தது.

என் மாணவப் பருவத்தில் என்னோடு, உயர்நிலைப்பள்ளியில் படித்தவர்களில் ஆதி திராவிடர் ஒருவர்கூட இல்லை. மாநிலக் கல்லூரியில் என்னோடு படித்த பழங்குடிப் பிரிவினர் மூவரே. இப்போது நிலைமை பெரிதும் மாறிவிட்டது. பெரும்பாலான பிரிவுகளில், தங்கள் மக்கள் எண்ணிக்கை விழுக்காட்டிற்கு இடம் பெற்றுள்ளார்கள். விடுதலை பெறுவதற்காகச் செய்த தியாகங்களும், சமுதாயச் சமத்துவத்திற்குப் பட்ட பாடுகளும் பெறற்கரிய வாய்ப்புக்களைக் கொண்டு வந்துள்ளன.

அதை அவர்கள் சிக்கெனப் பற்றிக் கொண்டால் நன்றாயிருக்கும்; மாணவப் பருவம் வாழ்க்கைக்கு ஆயத்தப் பருவம் என்பதை மனத்தில் பதித்துக் கொண்டு, ஊர் வம்பு தும்புகளில் சிக்கித் தவிக்காது, கல்வியின் பால் கருத்தூன்றிக் கற்றால், வளர்ந்து வாழலாம்; வளர்த்து வாழ்விக்கலாம்.



அடுத்த இதழில்

என் குழந்தைப் பருவம்

தமிழ்த் தென்றல் திரு. வி. க.

வயதுக்கு ஏற்ற தொண்டு



ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

சோமசுந்தரம் வீட்டிற்கு ஒரு தேசத்தொண்டர் வந்திருந்தார். அவர் நீண்ட தாடி வளர்த்திருந்தார். அவரைத் 'தாடி மகாதேவன்' என்பார்கள். காந்தியடிகளின் அகிம்சை வழியைப் பின்பற்றிச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். உண்மையான தியாகி— அதனால் ஊரில் உள்ள பெரியவர்கள் அவரை வந்து பார்த்து வணங்கினார்கள்.

சோமசுந்தரம் ஏழாவது வகுப்பில் படித்துவந்தான். அவனுக்கு அவரைப் பார்த்தவுடன் பயபக்தி வந்துவிட்டது. தெருவில் உள்ள தன்னுடைய நண்பர்களை அழைத்துவந்து அவரைக் காட்டினான். அவர்கள் அனைவரும் அவரை வணங்கினார்கள்.

தாடி மகாதேவன் அவர்களை அன்புடன் பார்த்தார். ஆசிர்வாதம் செய்தார். பிறகு அவர்களை அமரச் சொன்னார். அவர்களை நோக்கி, "நீங்கள் நம் பாரத நாட்டிற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

அவர்களில் ஒருவன், "தங்களைப் போல நாங்களும் போராடப் போகிறோம்," என்றான்.

உடனே, அவர் 'சிவ சிவ' என்று காதைப் பொத்திக் கொண்டார். உடனே அவர்களைப் பார்த்துக் கூறத் தொடங்கினார்:

குழந்தைகளே! நாங்கள் போராட்டம் நடத்திய பொழுது நம் பாரத நாட்டை ஆங்கிலேயர்கள் ஆண்டார்கள். அவர்களுடைய ஆட்சியிலிருந்து விடுதலை பெற நாங்கள் போராடினோம்.

இப்பொழுது நம் பாரத நாட்டில் நம்மால் தேர்ந்து எடுக்கப்பட்ட இந்தியர்கள்தான் ஆளுகிறார்கள். ஆகவே, போராட்டத்திற்கு அவசியமே இல்லை. இப்பொழுது தொண்டுதான் செய்ய வேண்டும்.

ஒழுங்காகப் படித்து எல்லாப் பாடங்களிலும் முதல் மார்க்குகள் வாங்குவது சிறந்த தேசத் தொண்டு. தீமையான செயல்களையும், தெரியாத செயல்களையும் செய்யாதிருப்பதே மிகப் பெரிய தேசத் தொண்டு. நல்ல காரியங்களைச் செய்யாவிட்டாலும், தீய செயல்களைச் செய்யாதிருப்பது நல்லது.

ஆனாலும், உங்கள் வயதிற்கும் வகுப்பிற்கும் தகுந்தாற்போல் சில தொண்டுகளைச் செய்ய முடியும். அவற்றைக் கூடக் கல்விக்கும், கடமைக்கும் இடையூறு இல்லாமல் செய்ய வேண்டும்.

திடீரென்று விபத்தில் அகப்பட்டவர்களுக்கு முதல் உதவி செய்யலாம். முதலுதவி செய்யத் தெரிந்தால் செய்யலாம். செய்யத் தெரியாவிட்டால், உதவி செய்யத் தெரிந்தவர்களை அழைத்து வந்து அவர்களுக்குத் துணையாக இருக்கலாம்.

நீங்கள் ஏழாம் வகுப்பு படிக்கிறீர்



விளையும் பயிர்

ஜப்பானில், 1984—ஆம் ஆண்டு சர்வதேசக் 'குழந்தைகள் ஒவியப் போட்டி' ஒன்று நடந்தது. அப்போட்டியில் 92 நாடுகளிலிருந்து மொத்தம் 40,000 ஒவியங்கள் வந்திருந்தன. அவற்றுள் மிகச் சிறந்த ஒவியத்திற்குத் தங்கப் பதக்கம் வழங்கப்பெற்றது.

அப்பதக்கத்தைப் பெற்ற குழந்தை யார்?

அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, இத்தாலி, ஜப்பான் என்று பல நாட்டுக் குழந்தைகள் கலந்து கொண்ட இப்போட்டியில் நம் தேசத்தை — அதிலும் நம் தமிழ்நாட்டிலுள்ள திருச்சியைச் சேர்ந்த சிறுமி தங்கப்பதக்கத்தைப் பெற்றிருக்கிறாள் என்றால், அது நமக்கெல்லாம் மிகுந்த பெருமையல்லவா?

ஆம், அந்தப் பரிசைப் பெற்ற சிறுமி பெயர் செல்வி சாலை திருவல்லி அம்மை. திருச்சி ஆர். எஸ். கே. மேல்நிலைப்பள்ளியில் 7—வது படிக்கிறாள். ஏற்கெனவே 1983—ஆம் ஆண்டு இந்தோ சோவியத் மையம் நடத்திய ஒவியப் போட்டியிலும், வேறு சில ஒவியப் போட்டிகளிலும் பரிசும் பாராட்டும் பெற்றிருக்கிறாள்.

இச்சிறுமிக்கு ஒவியம் வரையும் திறமை இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, அத்திறமையை நன்முறையில் வளர்த்து வழிகாட்டி வருபவர் இவளது பள்ளியில் ஒவிய ஆசிரியராகப் பணியாற்றும் திரு. கே. கே. சுப்பிரமணியன்தான். அவருக்கும் நமது பாராட்டுக்கள்.

கள். நீங்கள் நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இந்த ஊரில் படிக்கத் தெரியாதவர்கள் உள்ளனர். அவர்களை வற்புறுத்தி அழைத்துப் படிப்புச் சொல்லிக் கொடுக்கலாம். மேலும், அவர்களுக்குக் கடிதம் எழுதித் தரலாம்.

இந்த ஊர் மருத்துவமனையில் வெளியூரிலிருந்து பல நோயாளிகள் மருத்துவத்திற்காக வந்திருக்கலாம். அவர்கள் தனியாகவும் இருக்கலாம். உங்களுக்கு முடிந்த பொழுது மாலையில் அவர்களைப் பார்க்கச் செல்லுங்கள். ஆறுதலாக் நான்கு வார்த்தைகள் பேசுங்கள். அவர்களுடைய உறவினர்களுக்கு அவர்களுடைய நலத்தைப் பற்றிக் கடிதம் எழுதுங்கள். ஆலயப் பிரசாதங்களை வாங்கிவந்து அவர்களுக்குக் கொடுங்கள்.

உங்களூர்த் திருக்கோயில்களில் திருவிழாக்கள் நடக்கும் பொழுது தொண்டர்களாகச் சென்று தொண்டு செய்யுங்கள்.

—இவ்வாறு தாடி மகாதேவன் சோமசுந்தரத்திற்கும், அவனுடைய நண்பர்களுக்கும் தொண்டு செய்வதற்கான வழிகளைக் கூறினார்.

மகாகவி பாரதியார்:

உயிர்களிடத்தில் அன்பு வேணும் தெய்வம்
உண்மை என்று தான் அறிதல் வேணும்.
வயிரமுடைய நெஞ்சு வேணும் — இது
வாழும் முறைமையடி பாப்பா.



தூங்கவைக்கும் புத்தகம்

தணிகை உலகநாதன்

முருகனுக்கு இலக்கணம் என்ருல்வேப்பங்காய். அவன் இலக்கணப் பாடம் நடக்கும் போது வயிற்றுவலி, தலைவலி என்று சாக்குப் போக்குச் சொல்லி எப்படியாவது பள்ளிக் கூடத்துக்குப் போகாமல் மட்டம் போட்டுவிடுவான். சில நாள்களில் பள்ளிக்கூடம் போவது போல் பாசாங்கு செய்து வழியில் உள்ள தோப்பில் விளையாடி விட்டுப் பள்ளிக் கூடம் விடும் நேரமாகப் பார்த்து வீடு திரும்புவான்.

வகுப்பில் உயிர் எழுத்தைக் கற்பதற்குள் அவன் உயிரே போவதுபோலத் துன்பப்படுவான். மெய் எழுத்தைக் கற்க முடியாத போது ஆசிரியரிடம் உடம்பில் (மெய்) அடிபடுவான். அதனால் இந்த எழுத்துக்களுக்கு உயிர் எழுத்து என்றும் மெய் எழுத்து என்றும் பெயர் வைத்தார்களோ என்று தனக்குத்தானே நினைத்துக் கொள்வான்.

ஆசிரியர் அவனை எழுவாய், பயனிலை கேட்டால் எழுந்திருப்பானே தவிர, பதில் சொல்ல மாட்டான்; ஆந்தை போல விழிப்பான். அதனால் அவர் 'முருகா! நீ எழுவாய்; உன்னால் பயனி(ல்)லை' என்று கடிந்து பேசுவார்.

வீட்டில் முருகன் இலக்கணப் புத்தகத்தையே தொட மாட்டான்; தொட்டாலும் படிக்க மாட்டான்; படித்தாலும் தூக்கம் வந்துவிடும். 'கொர், கொர்' என்று குறட்டை விட்டுத்தூங்குவான்.

முருகனுக்கு வாசு என்று ஒருதம்பி இருந்தான். வாசு மிகவும் கெட்டிக் காரன். முருகன் புத்தகத்தை எடுத்துத் தூங்கி விழுவது அவனுக்குப் பிடிக்கவில்லை.

ஒருநாள் அவர்கள் வீட்டில் இருந்த குழந்தை அழ ஆரம்பித்தது. அந்தக் குழந்தையைத் தூங்க வைப்பதற்காகத் தாயார் தாலாட்டுப்பாடினார்; குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. கதை சொல்லிப் பார்த்தார்; அப்போதும் குழந்தையின் அழுகை ஓயவில்லை. தந்தையார் வந்தார்; வானொலிப் பெட்டியை முடுக்கிப் பாட வைத்தார். குழந்தை மேலும் மேலும் அழுதது. பெற்றோர்கள் ஒன்றும் தோன்றாமல் திகைத்தார்கள்.

வாசு ஒரு யோசனை செய்தான். அவன் 'விடு விடு' வென்று முருகனின் படிப்பறைக்கு ஓடினான். முருகன் கையில் இலக்கணப் புத்தகத்தை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். வாசு அதை 'வெடுக்' கென்றுபிடுங்கிக் கொண்டு குழந்தையிடம் வந்தான். முருகனும் அவனைத்துரத்திக்கொண்டு பின்னால் ஓடினான்.

வாசு என்ன செய்தான் தெரியுமா?



ஐஸ் கிரீம் சாப்பிடலாம்

ஐஸ்கிரீம் சாப்பிடுவது என்றால் உங்களுக்கெல்லாம் குஷிதானே?

உங்களில் சில பேர் வீட்டில், அம்மாவுக்கே ஐஸ்கிரீம் செய்யத் தெரிந்திருக்குமே! அப்படியென்றால், அம்மா நிறைய ஐஸ்கிரீம் செய்து கொடுப்பாளே! வீட்டில் குளிர்சாதனப் பெட்டி (ஃப்ரிட்ஜ்) இருந்தால்தான் இது சாத்தியம். இல்லையென்றால், உங்கள் அப்பா கடையில் ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுக்க, நீங்கள் சாப்பிட்டிருப்பீர்களே!

"ஐஸ்கிரீம் சாப்பிடுவது உடம்புக்குக் கெடுதலா?" என்று டாக்டர் வஸந்த் அங்கிளைக் கேட்டோம். அவர் சொன்ன பதில், உங்களையெல்லாம் ரொம்ப சந்தோஷப்படச் செய்யும். அவர் சொன்ன பதில் என்ன என்று தெரிந்து கொள்ள ரொம்ப ஆவலாய் இருக்கிறதா?

அவரது பதில் இதுதான்: "ஐஸ்கிரீம் என்பது பால், சர்க்கரை, க்ரீம் (கொழுப்பு) மூன்றும் கலந்து, தயாரிக்கப்படுறது. ஐஸ்கிரீம் குழந்தைகளுக்கு ரொம்ப நல்லது. உடம்பு நன்றாய் வளர்ச்சியடைய இது உதவும். நல்ல சக்தி தரக் கூடியது ஐஸ்கிரீம். இது சாப்பிட்டால் ஜலதோஷம் பிடித்து விடும் என்பதெல்லாம் சரியில்லை. தினமும் கூடச் சாப்பிடலாம். ஆனால் எதையும் அளவுக்கு மீறிச் சாப்பிடக் கூடாது இல்லையா? ஆனால் ஒரு விஷயம். ஐஸ்கிரீம் சாப்பிட்டு முடித்ததும், வாயை நன்றாய்க் கொப்புளிக்க வேண்டும். இது என்றில்லை. எந்தப் பொருளைச் சாப்பிட்டாலும், வாய் கொப்புளிப்பது நல்ல பழக்கம்.

ஐஸ்கிரீம் கொஞ்சம் விலை அதிகமான ஒன்று.

எனவே, அது உங்கள் உடம்புக்கு ஒரு கெடுதலும் பண்ணாது என்றாலும், உங்கள் அப்பாவின் மணி பர்ஸுக்கு நல்லது இல்லை. இதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள், உங்கள் அப்பாவிடம் ஐஸ்கிரீம் வாங்கித் தரும்படி கேட்கும் போது!

—எஸ். சந்திரமௌலி.

இந்த இதழ் கோகுலம் அட்டையில் ஜாலியாய் கோன் ஐஸ் சாப்பிட்டுக் கொண்டிருக்கிற குழந்தைகள் ஸ்ரீராம், மதுவந்தி.

வண்ணப்படம்: 'யோகா.

அந்தப் புத்தகத்தைக் குழந்தையின் கையில் கொடுத்து, 'தூங்கு, கண்ணே, தூங்கு' என்று பாடினான். பெற்றோர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. முருகன் மிகவும் கோபம் கொண்டான். அவன் வாசுவைப் பார்த்து, 'ஏனடா என் புத்தகத்தைப் பிடுங்கி வந்தாய்? உனக்கு உதை வேண்டுமா?' என்று கேட்டான்.

அதற்கு வாசு, "அண்ணா! நீதான் இந்தப் புத்தகத்தைத் தொட்டாலே தூங்கி விடுகிறாயே, குழந்தையும் உன்னைப் போலத் தூங்கட்டும் என்றுதான் இப்படிச் செய்தேன்' என்றான்

முருகன் வெட்கத்தால் தலைகுனிந்தான். பெற்றோர்கள் வாசுவின் தந்திரத்தைக் கண்டு 'கொல்' என்று சிரித்தார்கள்; அப்போது காற்று 'ஜில்' என்று வீசியது. குழந்தை 'கம்' என்று தூங்கியது.

முருகனுக்குப் புத்தி வந்தது. அன்று முதல் அவன் இலக்கணப் பாடங்களை ஆர்வத்துடன் படித்தான்; வகுப்புக்கும் ஒழுங்காகப் போனான். ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் உதாரணங்களை அக்கறையாகக் கவனித்தான். ஆசையோடு படித்தால் இலக்கணப் பாடம் எளிதாகப் புரியும் என்பதை உணர்ந்து கொண்டான்.

'இன்பம் இன்பம் இலக்கணமே
அன்பாய்க்கற்றின் அரைக்கணமே.

கேளுங்கள்; சொல்லுகிறோம்

* இராமர் பிறந்த அயோத்தி எங்கே இருக்கிறது? —ப. செல்வநாயகம், திருத்தணி.

உத்தரப்பிரதேசத்தில் உள்ள கோக்ரா நதிக் கரையில் இருக்கிறது. ஒவ்வோராண்டும் ஸ்ரீ ராமநவமி இங்கு சிறப்பாக நடைபெறும். சுமார் 5 லட்சம் பேர் வருவார்களாம்!

* நான் ஏதாவது சொல்ல ஆரம்பித்தால், "ஆமாம், நீ பெரிய பிரஹஸ்பதி" என்று என் அப்பா என்னை அடிக்கடி திட்டுகிறார். பிரஹஸ்பதி என்றால்...?

—கே. வி. ராகவன், விழுப்புரம்—2.

அடடே, உன் அப்பா உன்னைத் திட்டுகிறார் என்றா நினைக்கிறாய்? இல்லவே இல்லை. உன்னை 'வாக்கின் ஆட்சியாளன்' என்றுதான் பாராட்டுகிறார். ஆம், பிரஹ் என்றால் வாக்கு என்று பொருள். நவக்கிரக தேவதைகளில் ஒருவரான குரு அல்லது வியாழனைத்தான் பிரஹஸ்பதி என்கிறார்கள்.

* நாங்கள் எழுதும் ஜோக்குகளுக்கு நாங்களே படம் வரைந்து அனுப்பலாமா?


—எஸ். சுனகராஜன், சமத்தூர்.

தாராளமாக அனுப்பலாம். வெள்ளைத் தாளில் இந்தியன் இங்கில், பிசிறு இல்லாமல் வரைந்து அனுப்ப வேண்டும். துணுக்கும் நன்றாக இருந்து, படமும் நன்றாக இருந்தால், வெளியிடுவோம். துணுக்கு நன்றாக இருந்து, படம் நன்றாயில்லாது போனால், நாங்களே ஓர் ஓவியரைக் கொண்டு அத்துணுக்குக்குப் படம் வரையச் சொல்வோம். துணுக்கு அனுப்பும்போது, படமும் அனுப்ப வேண்டுமென்ற கட்டாயமில்லை.

* பாம்பு ஏன் தன் தோலை உரிக்கிறது?

—என். நாகராஜன், லால்குடி.

பாம்பு, தோலை உரித்த பிறகு முன்னைவிட அழகாகவும், பளபளப்பாகவும் இருக்கும். சுறுசுறுப்பும் அதிகமாக இருக்குமாம். இதனால்தான் அது ஆண்டுக்கு ஒரு தடவையல்ல; பல தடவைகள் தோல் உரிக்கிறது.



* சென்னையிலுள்ள இராஜாஜி மண்டபம் மிக அழகாக இருக்கிறது. அது எப்போது கட்டப்பட்டது?

—பி. அருமைதாஸ், சென்னை—4.

1882—ஆம் ஆண்டில் — ராபர்ட் கிளைவ் சென்னை கவர்னராக இருந்த போது. அப்போது அதன் பெயர் **Banqueting Hall.** பெரிய பெரிய விருந்துகளும் கேளிக்கைகளும் நடைபெறும் மண்டபமாக இருந்தது. வெள்ளைக்காரர்களும் பெரிய அதிகாரிகளுமே உள்ளே செல்ல முடியும். இப்போது அந்த மண்டபத்தில் முக்கிய விழாக்கள் நடைபெறுகின்றன. பொது மக்கள் தாராளமாகச் செல்லலாம்.

* மரநாய் என்ற பிராணி தென்னை மரத்தில் ஏறி இளநீர்க் காய்களைப் பொத்துக் குடித்து

விட்டுக் கீழே இறங்கும்போது அதன் மூக்கின் வழியாகக் குடித்த இளநீர் வந்துவிடுமாம். தாகம் அடங்காமல், அது திரும்பவும் ஏறுமாமே. இது எந்த அளவில் உண்மை?

—இரா. சுவாமிநாதன், சீர்காழி.

மரநாய் தென்னை மரத்தில் ஏறி இளநீரைத் துளைத்துக் குடித்துவிடும். தென்னை பனை மரங்களில் கள் இறக்குவதற்காகக் கலயங்களில் சேரும் கள்ளையும் காலி செய்துவிடும் — இது உண்மை. ஆனால் மூக்கின் வழியாகக் குடித்த இளநீர் வெளிவரும் என்பதற்குச் சரியான ஆதாரமில்லை.

* பஞ்சாங்கம் பார்க்கிறோம். அதற்கு அந்தப் பெயர் எப்படி வந்தது?

—பி. ஹம்சா, ஆலங்குடி.

திதி, வாரம் அல்லது கிழமை, நட்சத்திரம், யோகம், கரணம் என்ற பஞ்ச (ஐந்து) அங்கங்களைக் கொண்டிருப்பதால் பஞ்சாங்கம் என்று பெயர்.



* 'காலை எழுந்தவுடன் காபி' என்று இப்போது பலர் சாப்பிடுகிறார்கள். காப்பியில் உணவுச் சத்து இருக்கிறதா?

—எஸ். வேதகிரி, தென்னூர்.

உணவுச் சத்தா? அது சிறிதுகூட இல்லை. உண்ட உணவை ஜீரணம் செய்யக் காப்பி ஓரளவு உதவுகிறது. ஆனால், அதிக அளவில் சாப்பிட்டால் ஜீரணக் கோளாறு ஏற்பட்டு விடும்! ஜாக்கிரதை!

* பிளாஸ்டிக் எப்போது யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

—ஜி. லோகநாதன், தேதியூர்.

1869—இல் ஜான் வெஸ்லிஹையட் (John Wesley Hyatt) என்பவரும் அவருடைய சகோதரராகிய ஐசையா (Isaiah) என்பவரும் சேர்ந்து செலுலாயிட்டைக் கண்டுபிடித்தனர். அதை அடிப்படையாக வைத்து 1898—இல் பிளாஸ்டிக் ஜெர்மனியில் தயாராயிற்று.



* அறுபத்து மூன்று நாயன்மார்கள் என்கிறோர்களே அவர்களில் பல சாதியைச் சேர்ந்தவர்களும் இருந்திருப்பார்களே. அவர்கள் ஒருவரை ஒருவர் வித்தியாசமாகப் பார்த்தார்களா?—பெ. அறிவழகன், திண்டிவனம்.

நாயன்மார்களில் பல சாதியைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். நாவுக்கரசர் — வேளாளர்; சம்பந்தர் — பிராமணர்; திருநீலகண்டர் — பாணர்; கண்ணப்பர் — வேடர்; நந்தனார் — புலைச்சேரியில் இருந்தவர் — இப்படிச் சாதியால் மற்றவர்கள் அவர்களைவேறுபடுத்தினாலும் அவர்களுக்குள் சாதி வேறுபாடே கிடையாது! சாதியைக் காட்டிலும் சமயமே பெரிதென்று நினைத்தார்கள்; ஆண்டவன் படைத்த அனைவரும் சமம் என்று கருதினார்கள்.

* தாமஸ் ஆல்வா எடிசன் ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்ததாய் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள பத்தாவது வகுப்புக்குரிய பொது அறிவியல் புத்தகத்தில் இருக்கிறதே. இது சரிதானா?

—சீனிவாசபாரத், முத்துராமலிங்கபுரம்.

சரி என்று எப்படிக் கூறுவது? எடிசன் தமது 83—வது வயதுக்குள் ஆயிரத்துக்கு மேற்பட்ட கருவிகளைக் கண்டுபிடித்தவர் என்றாலும், ஆர்வில் ரைட், வில்பர் ரைட் சகோதரர்களுக்குச் சேர வேண்டிய பெருமையை எடிசனுக்கு அளித்திருப்பது எப்படிச் சரியாகும்?



பூவண்ணன்

ராஜி

° சென்ற நவம்பர் இதழில் வெளிவந்த 'தங்க மாம்பழம்' கதையை எழுதிய ராஜி என்பவர் யார்? இப்போது அவர் எங்கு இருக்கிறார்?

—கே. சீனிவாசன், திருப்பராய்த்துறை.

சிறுவருக்காக, 'தங்க மாம்பழம்', 'சிறுத்தைச் சீனன்' போன்ற நெடுங் கதைகளையும் நூற்றுக் கணக்கான சிறு கதைகளையும் எழுதிய அவரின் இயற் பெயர் என். நடேசன். அவரது குழந்தை இலக்கியத் தொண்டினைப் பாராட்டி, குழந்தை எழுத்தாளர் சங்கம் வெள்ளிக் கேடயம் வழங்கி யிருக்கிறது. அவர் இப்போது இல்லை. காலமாகிவிட்டார்.

° தாவரங்களுக்கும் உயிர் உண்டு, உணர்ச்சி உண்டு என்று கண்டுபிடித்தாரே ஜெகதீச சந்திர போஸ், அவர் நோபல் பரிசு பெற்ற வரா? —சி. ராஜாமணி, புதுவயல்.

இல்லை. ஆங்கில அரசாங்கம் அவ ரது விஞ்ஞானத் திறமையைப் பாராட்டி 1917—இல் 'சர்' பட்டம் வழங்கியது.

° இந்தக் குடியரசு தினத்திலே வீரச் செய லுக்கான விருது பெற்றவர்களில் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் கூட இல்லையே?

—பி. பரிதி, வேதாரண்யம்.

ஆம், ஒருவருமே இல்லை. ஆனா லும், 1984—ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் வீரச் செயல் புரிந்த ஒன்றி ரண்டு சிறுவர் சிறுமியர் கூடவா இல் லாமல் போயிருப்பார்கள்? நிச்சயம் இருந்திருப்பார்கள். அவர்களைப்பற்றி அக்கம்பக்கத்திலுள்ளவர்கள், உடனே மாவட்டக் கலெக்டருக்குத் தெரிவித்திருந்தால், அவர் தக்க முறை யில் தமிழ்நாடு அரசு மூலம் சம்பந்தப் பட்டவர்களுக்குத் தெரிவித்திருப் பார். விருது கிடைக்கும். இனியாவது அப்படிச் செய்வார்கள் என்று நம்பு வோம்.

° எழுத்தாளர் பூவண்ணனின் முகவரி என்ன? —தா. சிந்துகுமார், திருவட்டாறு.


14, சிந்தாமணி நகர், கே. கே. புதூர், கோவை—641038.

° தங்களது பத்திரிகையிலும் பழம்பெருமை யைப் பேசும் கதைகளாகவே வருகின் றனவே. தற்கால வாழ்விற்கு ஏற்ப மாணவர் களுக்கு அறிவுரை கூறும் கதைகளை ஏன் வெளியிடக் கூடாது?

—எஸ். இராமசாமி, காளாம்பட்டி.

கோகுலத்தைச் சரியாகப் படிக்க வில்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

° ''ஜப்பான்காரர்கள் குள்ளமாக இருந் தாலும் மிகவும் கெட்டிக்காரர்கள்'' என்று என் தாத்தா அடிக்கடி அவர்களைப் புகழ் வார். ஜப்பான்காரர்கள் அவ்வளவு குள் ளமா? —பெ. அன்புதாசன், அரக்கோணம்.



முன்புதான் ஜப்பான் காரர்களைக் குள்ளமானவர்கள் என்பார்கள். ஆனால், கடந்த 25, 30 ஆண்டுகளுக் குள் பிறந்தவர்களில் பலர் மற்ற நாட் டவர்களைப் போல் உயரமாகத்தான் இருக்கிறார்கள். சமீபத்தில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்ட ஜப்பான்காரர்களை டி.வி. யில் பார்த்தோமே, குள்ளமாகவா இருந்தார்கள்?



புதிய புத்தகங்கள்



குழந்தைகள் நகைச்சுவை

"என்னது? L K G பசங்க பட்டி மன்றம் நடத்துறாங்களா? எதைப் பற்றி?"

"குரியானது பலப்பமா, சாக்பீஸா?"

"டெலிவிஷனால் பிள்ளைகள் கெட்டுப் போறதா சொல்றாங்களே! நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"அது தெரியவில்லை. ஆனால் எங்க வீட்டு டெலிவிஷன் கெட்டுப் போனது எங்க பிள்ளைகளால்தான்."

—இப்படி 100 நகைச்சுவைத் துணுக்குகளை இந்நூலில் தொகுத்துத் தந்திருக்கிறார் மு. சாயபு மரைக்காயர். 'உங்கள் கவலைகளுக்கு மருந்து, இந்த நகைச்சுவை விருந்து' என்று முன்னுரையில் கூறுகிறார்.
வெளியிட்டோர்: பாத்திமா பதிப்பகம், 67, காஜியார் வீதி, காரைக்கால். விலை: ரூ. 2/—.

சின்னக் கண்ணன் பிறக்கிறான்

அம்மா என்று சொல்லும் போதே
அன்பு பெருகுதே!
சும்மா சும்மா சொல்லிப் பார்த்தால்,
சொர்க்கம் தெரியுதே!

அம்மாவின் சிறப்பை அருமையாக எடுத்துக் கூறும் இப்பாடலைப் போல், எளிய நடையில் சிறுவர் விரும்பும் வகையில் 33 இனிய பாடல்களைத் தந்திருக்கிறார் எஸ். விஜயலட்சுமி.

'மாமாவின் பை,' 'வெளிச்சம் கிட்டும்,' 'சோலைக் கிளியும் ஜோசியரின் கூண்டுக் கிளியும்' போன்ற பாடல்கள் சிறுவர் உள்ளத்தைப் பெரிதும் கவரக் கூடியவை. வெளியிட்டோர்: வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை—17. விலை: ரூ. 4.00.

எப்படி ஏற்பட்டது?

"ஏண்டா, நீ படிக்கிறது எஸ். எஸ். எல். சி. உனக்கு எப்படிடா காலேஜ் படிக்கிறவங்க ஸ்நேகம் ஏற்பட்டது?"

"அவங்கள்ளாம் ஆரம்பத்தில் என் கூடத்தானே படிச்சாங்க?"

—கிருஷ்ணசங்கர்.



சீதா என்னும் தங்கையைக்
கிட்டு அழைத்துச் செல்கையில்
வாதாங் கொட்டை ஒன்றினை
வழியில் கிட்டு கண்டனன்.

கிட்டு பார்த்துச் சொன்னதும்
சீதா அந்தக் கொட்டையை
எட்டிப் பாய்ந்து கையிலே
எடுத்து வைத்துக் கொண்டனள்.

"சண்டை வேண்டாம், இருவரும்
சமமாய்ப் பங்கை அடையலாம்"
என்று கூறிச் சுந்தரம்
இரண்டாய் உடைத்தான் கொட்டையை.

நடுவி லிருந்த பருப்பினை
'லபக்'கென் றவனும் வாயினுள்
எடுத்துப் போட்டுக் கொண்டபின்
என்ன சொன்னான், தெரியுமா?

பழைய கதை;

சண்டை தேவையா?

குழந்தைக் கவிஞர்





புதிய பாடல்

'இதனை முதலில் எடுத்ததால்
எனக்கே சொந்தம்' என்றுமே,
'இதனை முதலில் கண்டதால்
எனக்கே சொந்தம்' என்றுமே,

தங்கை, அண்ணன் இருவரும்
சண்டை பலமாய்ப் போடவே,
அங்கே வந்தான் சுந்தரம்.
அவனை நியாயம் கேட்டனர்.

"கொட்டை நானும் உடைத்ததில்
கிடைத்த இந்த ஓடுகள்.
இரட்டைக் குழந்தை போலவே
இரண்டும் சமமே பாருங்கள்.

அண்ணன், தங்கை மகிழவே
ஆளுக் கொன்று தருகிறேன்.
இன்னும் சண்டை தேவையா?
இனிதே செல்வீர் இருவரும்."



சடுகுடு - கபாடி

காசு செலவில்லாத விளையாட்டு. ஏழைகள் மைதானத்தில் மண் பரப்பி எந்த உபகரணத்துக்கும் அலையாமல் ஆடக்கூடிய அதிசய ஆட்டம்.

புதுதில்லியில் 1982—ம் வருஷம் நடைபெற்ற ஆசியப் போட்டியில் சடுகுடு — "கபாடி" ஒரு 'டிமான்ஸ்டிரேஷன்' விளையாட்டாகச் சேர்க்கப்பட்டிருந்தது. கபாடி தேசத்துக்குத் தேசம் மாறுபட்டு ஆடப்படும். செலவில்லாத விளையாட்டு ஆதலால் மக்களின் பெருமதிப்பைப் பெற்றுவிட்டது. ஆசிய அமெச்சூர் கபாடி பெடரேஷன் என்ற விளையாட்டு நிர்வாகக் கழகம் ஏற்பட்டது 1978—ஆம் ஆண்டில்தான்! இத்தகைய புராதன விளையாட்டினைத் தேசிய அளவில் நிர்வகிக்க ஏழு வருஷங்களுக்கு முன்புதான் முடிந்திருக்கிறது. கபாடி விளையாட்டில் இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், இலங்கை நாடுகள் அதிக ஈடுபாடு செலுத்துகின்றன. பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் மக்கள் ஆதரவு பெற்றுள்ள இந்த விளையாட்டை 'கபாடி' என்கிறார்கள். பங்களாதேஷின் இந்த விளையாட்டுக்கு பெயர் என்ன தெரியுமா? ஹடூடூ! இலங்கையில் இந்த ஆட்டத்துக்கு 'குடு தீச்சப்' என்ற நாமதேயம் ஏற்பட்டிருக்கிறது. இந்தோனேஷியாவில் 'தீச்சப்' என்று மட்டுமே வழங்கப்பட்டுவருகிறது. நேபாளத்தில் 'டோடு' (Dodo). மலேஷியாவில் 'சிடுகுடு' என்ற பல்வேறு நாமகரணங்களைப் பெற்றிருந்தாலும் விளையாட்டு என்னவோ சடுகுடுதான். கிராமப்புறங்களில் ஆற்றங்கரை உள்ள ஊர்களில் இளைஞர்கள் ஆற்று மணலில் இந்த விளையாட்டை மூச்சு விடாமல் ஆடி, வியர்வை பெருக ஓடிக் களிப்பது தனிச் சிறப்பு.

சடுகுடு — கபாடி ஆட்டம் ஆட்டக்கலைஞருக்குத் தனி நபர் திறமை, தைரியம், உடல்வாகு, தசை ஒத்துழைப்பு, கோஷ்டி எண்ணம், சுவாச சக்தி, புத்திக் கூர்மை ஆகியவற்றைப் பெற்றுத்தருகிறது. கபாடி ஆட்டத்தில் தாக்குபவரும், தடுப்பவரும் சமயோசிதமாக ஆடிக் களிக்கும் அற்புதத்தைக் கண்டு அதிசயிக்கலாம். இந்தப் புராதன விளையாட்டு இன்று ஜப்பானிலும், தாய்லாந்திலும், மலேசியாவிலும் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பிராபல்யமாகி வருகிறது.

வெளிப்புற விளையாட்டுக்களில் கபாடி பன்னெடுங்காலமாக ஆடப்பட்டும், இதன் தோற்றத்தை, ஆதிகாலத்தில் ஆதி மனிதன் ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதற்கு முன் உணவுக்குப் போராடிய நாட்களுக்கு முன் என்று சொல்லலாம். இந்திய இதிகாசம்

மகாபாரதம் பாண்டவ மன்னர்களில் பிரசித்தமான அபிமன்யு ஏழு கௌரவர்களுடன் எதிரி முனையில் போரிட்டதை விவரிக்கிறது. எதிரி கோட்டையில் ஏழு பேர்களைச் சமாளித்த விதத்தை மூச்சுவிடாமல் தாக்கியதைக் கபாடியின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். இறுதி மூச்சுவரை அபிமன்யுவின் அதிசய சாகசங்கள் வியக்கத் தக்கவை. தாமரபத்ரவில் கிருஷ்ண பரமாத்மா கபாடி போன்ற ஓர் ஆட்டத்தை ஆடிக் களித்திருக்கிறார். கபாடி ஆட்டத்துக்கான சட்ட திட்டங்கள் 1923–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்திய தேசியக் கபாடி பெடரேஷன் 1950–ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு, விஞ்ஞான ரீதியில் ஒருவகைப்பட்ட சட்டதிட்டங்கள் ஒழுங்கு படுத்தப் பட்டன.

கபாடி ஆட்டம் ஒரு சிறிய மைதானத்தில் சமன் செய்யப்பட்ட இடத்தில் விளையாடப்படுகிறது. இந்த எளிய விளையாட்டுக்கு எந்தவித உபகரணமும் தேவையில்லை. ஒவ்வொரு கபாடி குழுவிலும் பன்னிரண்டு விளையாட்டுக் கலைஞர்கள் இருப்பார்கள். ஆட்டம் நடக்கும் தருணத்தில் மைதானத்தில் ஏழு விளையாட்டு வீரர்கள் பங்கேற்பார்கள். ஐந்து கலைஞர்கள் 'ரிஸர்வ்' ஆக இருப்பார்கள். ஆட்டம் இரு பகுதிகளாக இருபது நிமிஷங்கள் நடைபெறும். மூன்று இடைவேளைகள் ஐந்து நிமிஷத்துக்குத் தரப்படும்.

குண்டுமணி

அதோடு ஆட்டக்காரர்கள் மைதானத்தில் பகுதி மாற்றங்களுக்கும் ஓய்வுக்கும் இந்த நேரம் ஒதுக்கப்படும். ஒவ்வொரு ஆட்டக்காரர் வீழ்ச்சிக்கும், தம் குழுவில் முன்பு 'அவுட்' ஆகி உட்கார்த்தி வைக்கப்பட்டவருக்குப் புத்துயிர்கிட்டும். அதோடு ஒவ்வொரு 'அவுட்'டுக்கும் பாயிண்ட் உண்டு. எந்தக்குழு அதிக 'அவுட்'களைச் செய்து பெருமளவு எதிரிகளை மடக்குகிறதோ அந்தக் குழு வெற்றியடைந்ததாகக் கருதப்படும். இந்தக் கபாடி ஆட்டத்தினை ஒரு ரிபரியும் இரண்டு அம்பயர்களும் நிர்வகிப்பார்கள்.

ஆட்ட மைதானத்தில், நான்கு புறங்களும் 'எல்லைகள்' என்று வர்ணிக்கப்படும். மைதானத்தில் ஆட்டக்காரர்கள் எதிர் முனையில் செல்லுவதற்குரிய 'டிரிப்'களை 'லாபி' (Lobby) என்று சொல்கிறார்கள். மத்தியக் கோடு இந்தச் செஞ்சதுர மைதானத்தைப் பிரித்து, விளையாட்டுப் பரப்பளவு பதிமூன்று மீட்டர் X பத்து மீட்டர் இருப்பதைக் காணலாம். பெண்கள் ஆட்டப் பரப்பளவு 11 மீட்டர் X 8 மீட்டர் அளவுதான்.

மைதானத்தின் நடுக்கோட்டிலிருந்து இருபக்கங்களில் 2.5 மீட்டர் தூரத்தில் போடப்படும் கோட்டுக்கு



பால்க் கோடு என்று குறிப்பிடுகிறார்கள்.

கபாடி மைதானம் களிமண்பூமியில் மரத்தூள் பரப்பி உருவாக்கப்படுகிறது.

கடைசிவரை ஏழு ஆட்டக்காரர்களும் கபாடி ஆட்டத்தில் 'அவுட்' ஆகாமல் இருந்தால் வெற்றிதான். 'ரைட்—இன், சென்டர், லெஃப்ட் இன்' என்று அணி ஆட்டக்காரர்கள் பகுதிவாரியாக அழைக்கப்படுவார்கள். மூலை கண்காணிப்பாளர்கள் ரைட் அவுட், லெஃப்ட் அவுட் உதவியோடு குழுவின் பலத்துக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

மூலை கண்காணிப்பாளர்கள் தற்காப்பு ஆட்டத்துக்கு உதவுவார்கள். தற்காப்பு ஆட்டக்காரரும் சமயத்தில் எதிரிக் குழுவில் புகுந்து எதிரிகளைத் தாக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு.

எதிரியின் கோட்டையில் புகுந்து தொட 'கபாடி, கபாடி' என்று மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டே செல்வார்கள். எதிரி களத்தில் புகுந்த ஆட்டக்காரர் எத்தனை ஆட்டக்காரர்களைத் தொட முடியுமோ, அவர்களைத் தொட்டுவிட்டு, அவர்கள் பிடியில் சிக்காமல் தம் சொந்தப் பாதுகாப்பு எல்லைக்கு வந்து சேருவார். இந்த எதிரியை வளைத்துப் பிடிக்க எதிர்க் கோஷ்டியினர் வலையும் வீசுவார்கள். ஒவ்வொரு கோஷ்டியினரும் எதிரியை 'அவுட்' ஆக்கி, பாயிண்ட் சேகரிப்பார்கள். எந்தக் குழு எதிரி கோஷ்டியிலுள்ள அனைவரையும் 'அவுட்' ஆக்கி வெளியேற்றுகிறதோ அதை 'லோனா' என்று குறிப்பிடுவார்கள்.


ஒரு கபாடி ஆட்டக்காரர் 'அவுட்' என்று கருதப்பட்டால் அவர் மைதானத்தை விட்டு வெளியேறிச் சென்று அமர்ந்து கொள்வார். எதிரிக் குழுவில் 'அவுட்' ஆனால் இவர் மறுபடி ஆடச் சேர்ந்து கொள்ளலாம்.

ஒரு இன்னிங் முடிவில் ஐந்து நிமிஷ இடைவேளை உண்டு. இரண்டாவது இன்னிங்கும் தொடரும். எந்தக் குழு அதிக பாயிண்ட்களைக் குவிக்கிறதோ அதுவே வெற்றிக்குழு என்று அறிவிக்கப்படும்.

ஒரு தடவை மூச்சில் 'கபாடி' கபாடி' சொல்லி மறுதடவைக்கு வருவதை 'Cant' என்று சொல்கிறார்கள். 'கபாடி' சொல்வதில் தயக்கம் கூடாது.

எதிரி கோட்டையில், 'கபாடி, கபாடி' என்று சொல்லி நுழையும் ஆட்டக்காரரை 'ரைடர்' என்றும், எதிரிக் குழுவினை 'Anti' என்றும் குறிப்பிடுகிறார்கள். ரைடர் தன் எதிரியிடம் சிக்காமல் சொந்த மைதானத்தினைத் தன் உடலின் எந்த உறுப்பினாலாவது தொட்டுவிட்டால், சட்டதிட்டங்களைப் புறக்கணிக்காமலிருந்தால் 'பாதுகாப்பு' இடத்தை அடைந்துவிட்டார் என்று அர்த்தம்.

கபாடி ஆட்டம் எளியது; எளியோரின் ஆட்டம்; பல்லாயிரக்கணக்கில் மக்களின் ஆதரவைப் பெற வேண்டிய புராதன விளையாட்டு ஆகும்.



புதுமைப் போட்டி-2

முதல் பரிசு ரூ 50/-
இரண்டாம் பரிசு ரூ 25/-

விடுமுறையை நீங்கள் எத்தனையோ நல்ல வழிகளில் பயன்படுத்தப் போகிறீர்கள். அந்த நல்ல வழிகளில் இதோ இந்தப் போட்டிக்கு விடை கண்டுபிடிப்பதையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

1984 ஜனவரி முதல் டிசம்பர் முடிய கோகுலத்தில் சிறுகதை, தொடர் கதை, குட்டிக் கதை, உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை என்று ஏராளமான கதைகள் வெளிவந்திருக்கின்றன. அப்படி வெளிவந்த கதைகளிலே 12 கதைகளில் காணப்படும் சில வரிகளைக் கீழே கொடுத்திருக்கிறோம். இந்த வரிகள் எல்லாமே அந்தந்தக் கதையில் வரும் ஒரு பாத்திரத்தின் உரையாடலாகவே இருக்கிறது.

கதையின் பெயர், அதை எழுதியவர் பெயர், கதை வெளிவந்த மாதம் — இந்த மூன்றையும் நீங்கள் கண்டுபிடித்துக் கீழ்க்கண்ட முறையில் எழுதி அனுப்ப வேண்டும்.

வரிசை	கதையின் பெயர்	எழுதியவர்	வெளிவந்த மாதம்

1. "ஐயா, நீங்க ஆலமரம். உங்க நிழலில் இளைப்பாறும் சிறு குருவி நான்."
2. "மென்மையான தண்ணீர் கரடுமுரடான சற்களின் உருவத்தைக் கூட மாற்றிவிடுகிறது."
3. "அடுத்தவர் எழுதியதைப் பார்த்து நீ எழுதுவதில் உனக்குப் பெருமை ஏது? அது திருட்டுக்குச் சமம்."
4. "கழுதை மீது அந்தரத்தில் செய்த சவாரி எப்படி இருந்தது?"
5. "நீ இடது கையாலே கொடுக்கறியே — எனக்கு வேண்டாம்."
6. "குட்டிப் பயல். ஆனாலும் கெட்டிப் பயல்."
7. "ஒரு குதிரை சுமக்கிற அளவுக்குத் தங்கம் தருவீர்களா?"
8. "இன்னும் கொஞ்சம் போனால், பரீட்சையே கூட வேண்டாம் என்று சொல்லிவிடுவீர்கள் போலிருக்கே!"
9. "அம்மா, உன் உடலெங்கும் கீறலும் ரத்தமுமாயிருக்கிறதே! எப்படி ஏற்பட்டது?"
10. "மயிலுக்கு நீந்த வராது. மீன் தோகை விரிச்சு ஆடாது. அதுக்காக மயிலையோ, மீனையோ யாரும் இளப்பமாப் பேசுறதில்லையே!"
11. "காண்டாவும் வேண்டாம். போண்டாவும் வேண்டாம். என் திட்டம் முட்டாள்தனமானது என்று இந்தப் பொடியன்கள் காட்டிவிட்டார்கள்."
12. "ஏங்க... நீங்க... படிச்சவங்க... நீங்களெல்லாம் வேற்று நாட்டுக்குப் போயிட்டா... நம்ம கிராமங்களை யாருங்க கவனிப்பாங்க...?"

இப்போட்டியில் 15 வயதுக்குட்பட்டவர்களே கலந்து கொள்ளலாம். 'கோகுலம்' சிறுவர் சங்க உறுப்பினராக இருந்தால், பெயருக்குப் பக்கத்தில் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுவது நல்லது.

மொத்தம் உள்ள பன்னிரண்டுக்கும் சரியான விடை கண்டுபிடித்து யார் எழுதுகிறார்களோ அவர்களுக்கு முதல் பரிசு ரூ. **50/-** வழங்கப் பெறும். ஒரு தவறு மட்டுமே இருந்தால், அதை எழுதியவருக்கு இரண்டாவது பரிசு ரூ. **25/-** வழங்கப்பெறும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் வந்தால், அவற்றைக் குலுக்கிப் போட்டு முதலில் வரும் விடைக்கு முதல் பரிசு எனவும்; 2—வது வரும் விடைக்கு 2—வது பரிசு எனவும் முடிவு செய்யப்படும்.

உறையின்மேல் 'புதுமைப் போட்டி—2' என்று குறிப்பிடவும்.

முதல் பரிசு, 2—வது பரிசு பெறுவோரின் புகைப்படங்களும் கோகுலத்தில் வெளியிடப் பெறும்.

விடை அனுப்பக் கடைசித் தேதி: 30.5.'85

அடுத்த இதழில்



அப்பாவுடன் போனேன் கப்பல் ஏறி நானே!

கப்பல் கேப்டனின் மகன் **சுஜித்**, தன் கப்பல் பயண அனுபவத்தைக் கூறுகிறான்



ராஜாராம் மோகன்ராய்

கணவன் இறந்துவிட்டால், மனைவியையும் ஒன்றாக வைத்து எரித்து விடும் வழக்கம் வங்காளம் போன்ற சில இடங்களில் இருந்து வந்தது. 'சதி' என்னும் உடன்கட்டை ஏறும், இந்த வழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்று ராம்மோகன் ராய் விரும்பினார். கட்டுரைகள் எழுதியும் புத்தகங்கள் வெளியிட்டும் இந்தப் பழக்கத்தைத் தீவிரமாக எதிர்த்தார். இவரது பெருமுயற்சியால், இந்த வழக்கம் அடியோடு ஒழிக்கப்பட்டது.

பெண்கள் சொத்துரிமை பெறுவது போன்ற பல சீர்திருத்தங்களைக் கொண்டு வர இவர் அரும்பாடுபட்டார்.

சமூகச் சீர்திருத்தவாதிகளில் இவர் முதன்மையானவர் என்ற பெயரைப் பெற்றார்.

மேற்கு வங்காளத்தில் ராதாநகர் என்ற இடத்தில் பிறந்த இவருக்குப் பல மொழிகள் தெரியும். தாய்மொழியாகிய வங்காளியுடன் ஆங்கிலம், பாரசீகம், அரபு, சம்ஸ்கிருதம், பாலி ஆகிய மொழிகளிலும் நல்ல புலமை பெற்றார்.

அப்பொழுது டில்லியிலிருந்த மொகலாய மன்னர், இவருக்கு 'ராஜா' என்ற பட்டத்தை வழங்கினார். அவருடைய தூதுவராக இவர் இங்கிலாந்து சென்று, இந்திய மக்களுக்கு ஆங்கிலேயர் எந்த எந்த வகைகளில் நன்மை செய்யலாம் என்று பல இடங்களில் பேசினார். இங்கிலாந்தில் இருந்த போது நோய்வாய்ப்பட்டு அங்கேயே காலமாகிவிட்டார்.



எட்வர்டு ஜென்னர்

அந்தக் காலத்தில் ஒருவருக்கு அம்மை நோய் கண்டால், அவர் பிழைப்பது அரிது. அப்படியே பிழைத்தாலும், அம்மைத் தழும்புகளினால் அவருடைய அழகு பாதிக்கப்படும். இதனால் ஓர் ஊரில் ஒருவருக்கு அம்மை நோய் கண்டிருக்கிறது என்றால், அந்த ஊரே நடுநடுங்கும். பலர் அந்த ஊரை விட்டே ஓடிவிடுவர்.

ஆயிரக்கணக்கான மக்கள் அம்மை நோயால் ஆண்டுதோறும் உயிர் இழந்து வந்தார்கள். ஆனால், இப்போது அம்மை நோயைக் காண்பதே அரிதாக இருக்கிறது!

இந்த நோய் வராமல் தடுக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் எட்வர்டு ஜென்னர். இங்கிலாந்தில் பிறந்த இவருடைய தந்தை ஒரு பாதிரியார். இவர் மருத்துவக் கல்வி கற்றுப் பட்டம் பெற்றார்.

பட்டம் பெற்ற பிறகு தம் சொந்த ஊருக்கே திரும்பி வந்து அங்கிருந்த மக்களுக்குத் தொண்டு செய்தார். அவருடைய ஊரில் மாடு வளர்ப்பவர்கள் நிறைய இருந்தார்கள். அவர்களுக்கு மாட்டம்மை என்ற நோய் அடிக்கடி வரும், உடனே குணமாகிவிடும். மாட்டம்மை கண்டவர்களுக்குப் பெரியம்மை வராது என்று கூறினார்கள். ஜென்னர் இதை நன்றாக ஆராய்ந்தார்; உண்மைதான் என்று கண்டுகொண்டார். உலகத்துக்குப் பல சோதனைகள் மூலம் அறிவித்தார்.

ஜென்னர் மிக நன்றாகப் பாடுவார். கவிதை இயற்றுவார். பறவைகளைப் பற்றியும் இவர் பல ஆராய்ச்சிகள் நடத்தினார்.



நாடும் நாணயமும்

"உங்களுடைய மாதச் சம்பளம் எவ்வளவு?" என்று அர்ஜன்டைனாக்காரர் ஒருவரைப் பார்த்து ஓர் இந்தியர் கேட்டார்.

"25 லட்சம்" என்று பதில் வந்தது. இந்தியருக்குத் தூக்கிவாரிப் போட்டது! ஆனால், அர்ஜன்டைனாக்காரர் 25 லட்சம் ரூபாய் என்று சொன்னார்? இல்லையே! இந்திய ரூபாய் 100 கொடுத்தால், அர்ஜன்டைனா நாணயமான பெசோ 10 லட்சம் கிடைக்கும். இதைப் போலத் தான் ஒவ்வொரு நாட்டு நாணயத்திற்கும் ஒரு மதிப்பு உண்டு. வேறு பெயரும் உண்டு. இதோ பாருங்களேன்:

எண்	நாடு	நாணயம்	இந்திய ரூபாய்	சமமான அந்நிய நாணயம்
1.	ஆப்கானிஸ்தானம்	ஆஃப்கனி	100	625.00
2.	அர்ஜன்டைனா	பெசோ	100	10,00,000.00
3.	ஆஸ்திரேலியா	டாலர்	100	11.47
4.	பஹரீன்	தினார்	100	3.74
5.	பங்களாதேஷ்	டாகா	100	243.90
6.	பெல்ஜியம்	பிராங்க்	100	500.00
7.	பிரேசில்	குருசிரோ	100	5,000.00
8.	பர்மா	கியாட்	100	79.37
9.	கானடா	டாலர்	100	12.17
10.	சிலி	எஸ்கூடோ	100	714.29
11.	சைனா	யுவன்	100	19.57
12.	செக்கோஸ்லோவேகியா	கொருனா	100	96.15
13.	டென்மார்க்	குரோன்	100	86.96
14.	பிரான்ஸ்	பிராங்க்	100	72.99
15.	கிழக்கு ஜெர்மனி	ஆஸ்ட் மார்க்	100	53.19
16.	மேற்கு ஜெர்மனி	டியூஷ் மார்க்	100	25.00
17.	இந்தோனேஷியா	ருபியா	100	10,000.00
18.	ஈரான்	ரியால்	100	833.33
19.	இஸ்ரேல்	பவுண்டு	100	400.00
20.	இதாலி	லிரா	100	14,285.71
21.	ஜப்பான்	யென்	100	2,000.00
22.	மலேசியா	டாலர்	100	22.94
23.	மால்டிவ் தீவுகள்	ரூபாய்	100	50.51
24.	மரிஷஸ்	ரூபாய்	100	111.11
25.	மெக்ஸிகோ	பெசோ	100	1,111.11
26	நேபாளம்	ரூபாய்	100	131.58
27.	நார்வே	குரோன்	100	71.43
28.	பாகிஸ்தான்	ரூபாய்	100	126.58
29.	பிலிப்பைன்ஸ்	பெசோ	100	96.15
30.	போலந்து	ஜ்லோடி	100	53.19
31.	போர்த்துகல்	எஸ்கூடோ	100	1,000.00
32.	ரஷியா (U.S.S.R.)	ரூபிள்	100	9.98
33.	சவூதி அரேபியா	ரியால்	100	34.36
34.	சிங்கப்பூர்	டாலர்	100	20.88
35.	தென் ஆப்பிரிக்கா	ராண்ட்	100	10.89
36.	ஸ்பெயின்	பெசடா	100	1,428.57
37.	ஸ்ரீலங்கா	ரூபாய்	100	227.27
38.	ஸ்விட்ஜர்லாந்து	பிராங்க்	100	20.92
39.	இங்கிலாந்து (U.K.)	பவுண்டு	100	6.70
40.	அமெரிக்கா (U.S.A.)	டாலர்	100	7.80
41.	வெனிஜுலா	பொலிவர்	100	42.74
42.	ஜாம்பியா	குவாச்சா	100	11.71

ரிசர்வ் வங்கியின் அறிவிப்பின்படி அவ்வப்போது அந்நிய நாணய மதிப்பு மாறும்.

கே. ரவீந்திரன்

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி
உறுப்பினர் எண், பெயர், முகவரி

2513. ச. சதீஸ்குமார், S/619, 'R,' திருச்சி ரோடு, எல். ஜி. பி. காலனி, கோவை—45.
2514. கே. இலட்சுமணன், 1, சோழன் தெரு, உள்ளகரம், சென்னை—61.
2515. எஸ். வெங்கடேசவரலு, 1/38, பஜனை கோயில் தெரு, காட்டாங்குளத்தூர், செங்கை மாவட்டம்.
2516. ஆர். என். கண்ணன், S/o. எம். ஆர். நடனம், கல்லாலங்குடி, ஆலங்குடி—622301.
2517. ஆர். சுஜாதா, 63, அய்யர் குளம், வடகரை, மச்சுவாடி, புதுக்கோட்டை.
2518. ஏ. கே. பொன்சுகந்தி, புதுப்பாடி—632503.
2519. க. சரவணன், 12, இரத்தினசபாபதி தெரு, சென்னை—21.
2520. அ. கி. பொன் பெருமாள் பத்தர், பொன்வேலை, புதுப்பாடி—632503.
2521. க. முத்துக்குமரன், 12, இரத்தின சபாபதி தெரு, சென்னை—21.
2522. சி. குணசேகர், S/o. சின்னசாமி, டைலர், மீனாட்சி நிலையம், திருப்பத்தூர்—635601.
2523. **Sujatha Vaidyanathan, C D—311/III-E, P. O. Dhurwa, Ranchi—834004.**
2524. ஆர். ராஜ பாலாஜி, S/o. Dr. G. R. ராஜன், அரிமளம்—622201.
2525. இரா. சீனிவாச விஜய், 9, முத்துசாமி கவுண்டர் வீதி, சீனிவாசநகர், கோவை—30
2526. கோ. தீபா, 17/13, பீட்டர்ஸ் ரோடு காலனி, சென்னை—14.
2527. வே. சுதாகர், 3, நரசிம்மபுரம், வடக்கு, கரூர்.
2528. எஸ். ஜெயசங்கர், 7, முத்துசாமி சந்து, பாளையங்கோட்டை—627002.
2529. இர. இராசகோபாலன், 5, S.I.S.I. காலனி, கிருஷ்ணா நகர், உள்ளகரம், சென்னை—91.
2530. இரா. கணேஷ், 16, ராமசாமி செட்டி தெரு, கிச்சிப்பாளையம், சேலம்—1.
2531. க. கார்த்திகேயன், 20/4, வீட்டு வசதி வாரியம், கும்பகோணம்—1.
2532. இரா. பிரகாஷ், 34—A, பெரிய கம்மாளத் தெரு, மன்னார்குடி.
2533. க. ந. கிருஷ்ணன், 46, பிள்ளையார் கோயில் தெரு, சாத்தூர்—3.
2534. ச. ஆனந்தன், 56, நாகையன் தோட்டம் வீதி, ஒண்டிப்புதூர், கோவை—15.
2535. த. தேன்மொழி, 107—B, ரயில்வே ரோடு, தென்காசி.
2536. எஸ். நீரஜா, 38, கிராமத்தெரு, சென்னை—19.
2537. ரா. நாராயணந்தி, 48, ஆறுமுகம் வீதி, வடக்குவாசல், ஸ்ரீரங்கம்.
2538. ப. சுமதி, E—3/458, கைலாசபுரம், திருச்சி—14.
2539. ந. சிதம்பரம், 147—ஏ, பி. கே. செட்டி வீதி, கோவை—1.
2540. வி. இராமகிருஷ்ணன், 59, சௌந்திரம் இல்லம், வ. உ. சி. ரோடு, காரைக்குடி—1.
2541. க. அர. வெங்கடாசலபதி, S/o. எம். ரங்கசாமி, கள்ளிப்பாளையம்—638057.
2542. பி. செந்தில், C/o. செந்தில் ஆண்டவர் எண்ணெய் ஆலை, மலையடிப்பாளையம்—638669.
2543. ஏம். ராஜகுமார், 42, வி. பி. சி. தெரு, சக்தி ரோடு, ஈரோடு—1.
2544. ஆ. நாகேஸ்வரன், 61, சந்திக் கூடத் தெரு, விருதுநகர்—1.
2545. பழ. வள்ளியமயில், வி. எஸ். டி. வீடு, வலம்புரி No 5 ரோடு, வலையப்பட்டி—622411.
2546. எஸ். பத்மநாபன், 49/33, கிழக்கு ஆரோக்கிய மாதா தெரு, திண்டுக்கல்—3.
2547. இரா. இராஜலட்சுமி, B—3, நூல் தெரு, வட்டம் 10, நெய்வேலி—1.
2548. ஜெ. ஜோதீஸ்வரி, III 60/10, நடுவூர், தாணுமாலயன்புதூர், ஆரல் வாய்மொழி.
2549. ஜெ. வெங்கடேஷ், III 60/10, நடுவூர், தாணுமாலயன்புதூர், ஆரல்வாய்மொழி.
2550. எஸ். காயத்ரி, 22, இரண்டாவது மெயின் ரோடு, புருஷோத்தம் நகர், சென்னை—44.
2551. ச. துர்காதேவி, 91, கிழக்குத் தெரு, கிருஷ்ணராயபுரம், திருச்சி மாவட்டம்.
2552. ச. பானுரேகா, 91, கிழக்குத் தெரு, கிருஷ்ணராயபுரம், திருச்சி மாவட்டம்.
2553. எஸ். மகேஷ், 29—B, மேலப் பொன்னகரம், 6—வது தெரு, மதுரை—10.
2554. ஆர். வெங்கடவரத லெட்சுமி, 54—A, நாயக்கர் புதுத் தெரு, மதுரை—1.
2555. டி. விஜயகுமார், 15—E (1), ஆரம்ப பாட சாலை முதல் வீதி, கருவம்பாளையம், திருப்பூர்—638604.
2556. ம. சம்பத்குமார், 33, குருநாத கவுண்டர் வீதி, திருப்பூர்—638604.
2557. இரா. சிரேயாங்குமார், S/o. ப. இராமசாமி, ஆசிரியர், சோமாசிபாடி—606611.
2558. இரா. மாலா, C/o. R. சந்திரலட்சுமி, நியூஸ் ஏஜெண்ட், சோமாசிபாடி—606611.
2559. ம. பேரின்பராஜன், 4—E, S.I. குடியிருப்புப் பகுதி, சவுரிபாளையம், கோவை—28.
2560. பி. கே. முத்துவேலப்பன், பணிக்கம்பட்டி, கோவை மாவட்டம்.
2561. ச. முகமது சபுருல்லா, 66—B, முகமதியர் தெரு, செங்கம்—606701.
2562. ஆர். உமாசுதன், 8, ராஜாஜி தெரு, செங்கம்—606701.
2563. எம். வெங்கடேஸ், 1, கிழக்கு கொங்கலம்மன் கோவில் வீதி, ஈரோடு—1.
2564. கி. ஸ்ரீனிவாசன், 29, அக்கிரஹாரம், திம்மராஜபுரம், நெல்லை மாவட்டம்.
2565. பி. சந்திரநாராயணன், B—2/555—F, திருச்சி—14.

2566. வி. கே. சிவகுமார், 15, பேரா நாயுடு லே அவுட், கோவை–11.
2567. வெ. ஹேமா, 59, சௌந்திரம் இல்லம், வ. உ. சி. ரோடு, காரைக்குடி.
2568. டி. எஸ். அம்பிகா, C–14, காவேரிநகர், மயிலாடுதுறை–609003.
2569. என். தியாகராஜன், 9, பி. எஸ். கே. காலனி, லட்சுமி தெரு, சேலம்–4.
2570. ஜெ. சார்லஸ் அலெக்ஸாண்டர், S/o. ஜி. ஜோசப், S.C. Bk. 14/1, ஸ்டோன் ஹவுஸ் ஹில் அஞ்சல், உதகமண்டலம்–643002.
2571. க. தமீஸ், 9–A, 5–வது தெரு, பென்ஷன் லேன், சேலம்–6.
2572. ஞானசச்சிதானந்தன், C 3/2, N.G.O. காலனி, சிங்கம்புணரி–624 502.
2573. கே. புவனேஸ்வரி, 4–A, சக்தி விகார், டாடா பாட், 9–வது தெரு, கோவை–12.
2574. வி. வெங்கடேசன், 138, கிருஷ்ணன் கோயில் தெரு, சேலம்–1.
2575. பொ. இரா. தேவராசன், 86, கரசங்கால், படப்பை–601 301.
2576. பி. டினேஷ்குமார் சிங், பாக்கமுடையான் பட்டு, ஜனதா இரும்பு தொழிலகம், பாண்டிச்சேரி–8.
2577. ப. பிரபாகர், L.A.I மாரியம்மன் கோயில் தெரு, அரியலூர்.
2578. வே. ஆனந்த், H–253, ரயில்வே காலனி, ஈரோடு–2.
2579. வி. ஸ்ரீநிவாசன் தீபக், C/o. ரோஹிணி விஸ்வநாதன், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, சத்தியமங்கலம்–638 401.
2580. இ. அரவிந்தன், 247, காமராஜனூர் ரோடு, ஆத்தூர்–636.102.
2581. இ. மான்விழி, 247, காமராஜனூர் ரோடு, ஆத்தூர்–636 102.
2582. இரா. சத்தியமூர்த்தி, 75/7, பிள்ளையார் கோவில் வீதி, சிங்காரப்பேட்டை–635 307.
2583. டி. மகாலக்ஷ்மி, 14, ஜெயராம் பிள்ளை தெரு, மேட்டுப்பாளையம், சென்னை–33.
2584. பி. பாலசுப்ரமணியன், 32, பாலசுந்தரம் வீதி, கிருஷ்ணராயபுரம், கோவை–6.
2585. வி. ரமேஷ், 4/189, ஆசிரியர் குடியிருப்பு, ஈரோடு–9.
2586. வி. ரமேஷ், 196, செயிண்ட் மேரிஸ் ரோடு, சென்னை–18.
2587. பி. எஸ். முத்துராமகிருஷ்ணன், 56, தேனப்பபுரம், 2–ம் தெரு, சங்கரன் கோயில், திருநெல்வேலி மாவட்டம்.
2588. ஆர். எஸ். வாசுதேவன், 14, வசந்த நகர், ஸ்ரீரங்கம்.
2589. இரா. இளங்கோவன், B–3, நூல் தெரு, வட்டம் 10, நெய்வேலி–1.
2590. பி. எஸ். சந்திரசேகர், C 3/3F, கைலாசபுரம், திருச்சி–14.
2591. கோ. ஆராவமுதன், 19, கோமளீஸ்வரன் வடக்கு வீதி, கீழக்கொட்டையூர், மேலக்காவேரி–612 002.
2592. பி. கிருஷ்ணகுமார், S/o. டி. கே. பாலசுப்பிரமணியன், உதவி கோட்டப் பொறியாளர், பெரியாறு லோயர் கேம்ப்–626 525.
2593. சி. பூர்ணிமா, D/o. எஸ். செல்லப்பன், விஜயா லாட்ஜ், போடி நாயக்கனூர்.
2594. வி. மீனாட்சி, 80–I, சிங்காரத் தோப்பு, திருச்சி–8.
2595. ஆர். சி. ரவி குருநாதன், 772, அன்பழகர் தெரு, கே. கே. நகர், திருச்சி–21.
2596. ஜ. ஜவன், T.E.L.C. பள்ளி, நக்கலிப்பட்டி, மதுரை மாவட்டம்.
2597. இரா. சாந்தி, 108, கங்காதீஸ்வரர் கோயில் தெரு, சென்னை–84.
2598. அ. இராமசுப்பிரமணியன், 33–6, புது அக்ரஹாரம், திண்டுக்கல்–7.
2599. பி. எம். அன்புச்செழியன், S/o. எஸ். முத்துசாமி, வருவாய்ப் பிரிவு, மின் வாரியம், உசிலம்பட்டி–626 532.
2600. ஆர். சாந்தி, 108, கங்காதீஸ்வரர் கோவில் தெரு, சென்னை–84.
2601. ப. ஜெயா, 3–D, வடக்குத் தெற்கு வீதி, 2, முத்துசாமி காலனி, குமாரபாளையம்–641026.
2602. சத்யராஜ், 21, லட்சுமி காலனி, சென்னை–17.
2603. டி. ஆர். நடராஜன், 3, ஆனந்தவல்லி கணபதி காலனி, திருவானைக்காவல்–5.
2604. தி. விஜயலட்சுமி, 8/15, தி. மா. வீதி, ராணிப்பேட்டை, (வ. ஆ.)
2605. ச. என். சுதர்சனன், 146, வடக்கு உத்திர வீதி, ஸ்ரீரங்கம், திருச்சி–6.
2606. என. எஸ். முரளி, 111, N.G.G.O. நகர், செங்கற்பட்டு.
2607. வி. முத்துக்குமாரசுவாமி, 18, கந்தசாமி தெரு, எல். ஆர். பாளையம், பண்ருட்டி.
2608. சி. வெங்கடேஸ்வரன், 81, கிழக்கு ரத வீதி, திண்டுக்கல்.
2609. டி. மகேஷ், 21, கமலாலயம் வடகரை, திருவாரூர்.
2610. ராஜேஷ், 4, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.
2611. எஸ். லட்சுமி வித்யா, B–3, வேலூர் சர்க்கரை ஆலை – 632519.
2612. க. ப. குணசீலன், 39–B, தேரு வீதி, உடுமலைப்பேட்டை.

(இன்னும் வரும்)

பாருக்குள்ளே நல்ல நாடு...

ஜி.ஆர். இராஜசியாமளா



அன்று அந்தப் பள்ளிக் கூடம் முழுதும் ஒரே சுவாரஸ்யமான பேச்சு. எல்லா வகுப்புகளிலும், எல்லா மாணவர்களும்கூட்டம் கூட்டமாகநின்று இதைப்பற்றியேபேசினர்கள். அது உணவு இடைவேளையாதலால், கை கழுவும் இடத்திலும் கூட மாணவர்கள் இதைப் பற்றியே பேசினார்கள்.

அவர்கள் பேச்சின் நாயகன் திலீப்! இந்தியாவின் புகழ் பெற்ற விஞ்ஞானியும், சிறந்த கிரிக்கெட் வீரருமான திலீப்பின் பேட்டி அன்று இரவு தொலைக்காட்சியில் இடம் பெற இருப்பதே அவர்கள் பேச்சின் முக்கியத்துவம்.

"இன்னைக்கு டி. வி. பார்ப்பதில் சில மணிநேரங்கள் வீணாயிடும். படிப்பிற்காக ஒரு சிறந்த விஞ்ஞானியோட பேட்டியை மிஸ் பண்ணிவிட முடியாது. அதனாலே இப்பவே கொஞ்சம் மணி அடிக்கும் வரை படிக்கப் போகிறேன். நீ வேண்டுமானால் விளையாடு" என்று புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டான் ஸ்ரீநாத்.

ஹரி அவனை முறைத்துப் பார்த்தான். 'இப்போது கூடவா படிப்பு?' என்று மனத்தில் நினைத்துக்கொண்டான். "ஏண்டா, எல்லோரும் திலீப்பைப் பற்றிப் பேசிக்கிட்டு இருக்காங்க. நீ புத்தகத்தைக் கட்டிக்கிட்டு அழறையே!"

"அவரோட நிகழ்ச்சியைப் பார்க்கத்தானே, நான் இப்பவே படிச்சுக்கறேன்!"

"நான் எங்க வீட்டுக்குப் புதுசா வந்திருக்கிற கலர் டி. வி.யில பார்க்கப் போகிற முதல் நிகழ்ச்சி இது. நாலு மாதங்களுக்கு முன்னாடியே எங்க ஜப்பான் அத்தை அனுப்பி இருக்க வேண்டிய டி. வி. ஏனோ லேட்டாயிடுச்சு. நீயும் எங்க வீட்டுக்குக் கலர் டி. வி. பார்க்க வாயேன். எனக்கும் குஷியாயிருக்கும்..." ஹரி பேச்சை வளர்த்தினான்.

"ஆமாம், பெரிய ஜப்பான் கலர் டி. வி! இப்போ இங்கேயே கலர் டி. வி. வர ஆரம்பித்து விட்டது." ஹரி பேச்சை வளர்ப்பதிலும், அவன் தன் மேல்நாட்டு மோகத்தை வழக்கம் போல் வெளிப்படுத்துவதிலும், ஸ்ரீநாத்திற்கு ஏக எரிச்சல். அதை வார்த்தைகளில் வெளிப்படுத்தினான்.

ஹரியின் முகம் சி வ ந் த து. "போடா... பெரிசா இந்தியா, இந்தியான்னு சொல்றியே. இந்தியா மேல்நாட்டுக் கண்டுபிடிப்புக்களைக் காப்பியடிக்கத்தான் லாயக்கு." ஹரி கோபமாக வார்த்தைகளை வீசவும், மணியடிக்கவும் சரியாக இருந்தது. இவனுடன் விவாதித்தால், வகுப்பைக் கவனிக்க முடியாது என முடிவு செய்த ஸ்ரீநாத் வாயை மூடிக் கொண்டு புஸ்தகத்துடன் வகுப்பிற்குள் நுழைந்தான்.

என்றுமே ஹரி இப்படித்தான்! 'வெளி நாடுகள்தான் சிறந்தவை. அவற்றின் பொருட்களைப் போல் இந்தியாவில் இல்லை' என்றெல்லாம் தான் பேசுவான். ஆனால், அது

அவனைச் சொல்லிக் குற்றமில்லை. அவன் தந்தை, தந்தையின் உடன் பிறந்தோர் என எல்லோருமே பெரிய பெரிய படிப்புப் படித்து விட்டு, உலகின் பல்வேறு பாகங்களில் இருந்து கொண்டு அவற்றிற்குத் தங்களின் திறமைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். மேல் நாடுகளில் குழந்தைகளைச் சரியாக வளர்க்க முடியாது என்ற காரணத்தால், தந்தையின் உத்தரவுப் படி, அவன் தன் தாத்தாவுடன் இங்கு இருக்க வேண்டியதாகிவிட்டது.

இதுவே ஸ்ரீநாத்திற்கு ஒரு பலம். பேச்சில் ஹரியை மடக்க இந்தக் கேள்வியைப் பயன்படுத்துவான்.

"ஏன் ஹரி, மேலைநாடு, மேல்நாடுன்னு சொல்றியே! நீ ஏன் அங்கே வளராமல், இந்தியாவில் உன் தாத்தாவுடன் இருக்கிறாய்? ஒழுக்கமான, பண்புள்ளவனாய் நம் நாட்டில்தான் வளர முடியும். புரிஞ்சுக்க."

"போடா. அப்போ மற்ற நாடுகளில் பண்பானவர்கள் இல்லையா? பண்பாட்டுக்கு இங்கிலாந்து பேர் போனது இல்லையா?... ஏதோ, எங்க தாத்தாவின் ஆசைக்காக இங்கே இருக்கேன். என் கல்லூரிப் படிப்பெல்லாம் வெளி நாட்டில்தான் புரிஞ்சுதா?" நுனி உதட்டைக் கடித்த படி சிரிக்கும் ஹரியை — இப்படிப் பேசும் ஹரியை ஸ்ரீநாத்தினால் என்ன செய்ய முடியும்?

* * * * *

டீ. வியின் முன் ஆர்வமாய் அமரும் பேரனைப் பார்த்துத் தாத்தா சிரித்துக் கொண்டார்.

"கலர் டீ. வி., கலர் டீ. வி.தான் தாத்தா". அதைச் சுற்றிச் சுற்றி வந்தான் ஹரி. நிகழ்ச்சி தொடங்க பத்து நிமிடங்களே இருப்பதால், டீ. வியின் முன் அமர்ந்தான்.

"ஏம்பா, அப்படி என்ன நல்ல நிகழ்ச்சி டீ. வி. யிலே?" பேரனை வம்பிற்கிழுத்தார் கிழவனார்.

"தெரியாதா? பெரிய 'சயன்டிஸ்ட்' திலீப்போட பேட்டி. அவர் எவ்வளவு பெரிய மேதை தெரியுமா? "இந்தியாவின் மைக்கேல் பேரடேன்னு அவரைச் சொல்லுவாங்க... உனக்கு அவரைத் தெரியாதா? பொய்... என்னை ஏமாற்றாதே! சின்னக் குழந்தைகூட அவரைப் பற்றிச் சொல்லிடுமே! அவரோட மேதாவித் தனத்துக்கு அவர் எங்கேயோ இருக்க வேண்டியவர்... இங்கே, இந்தியாவில் இருக்கார்."

நிகழ்ச்சி ஆரம்பிக்கவே சட்டென்று பேச்சினை நிறுத்திக் கொண்டான். ஸ்ரீநாத்தும் கரெக்டாக, ஹரியின் வரவேற்பை ஏற்று கலர் டீ. வி. பார்க்க வந்துவிட்டான். திலீப் பற்றிய அறிமுகத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது.

அடுக்கடுக்கான கேள்விகள், ஆழமான பதில்கள்!

கேள்வி: நீங்க ஒரு சிறந்த விஞ்ஞானி. அதே சமயம் ஒரு கிரிக்கெட் ஆட்டக்காரரும்கூட. எப்படி உங்களால் இரண்டிலும், கவனம் செலுத்த முடிகிறது?

பதில்: நான் பொழுது போக்காகத்தான் ஆடுகிறேன். விளையாடும் நேரத்தில் விளையாடு. வேலை செய்யும் நேரத்தில் வேலை செய். **(Play while you play. Work while you work)** அவ்வளவுதான்!

அழைப்பது எப்படி?

"கால் போகிறபடி நடந்தால், அவனை எப்படி அழைப்போம்?"


"வழிப் போக்கன்."

"பார்வை போகிறபடி நடந்தால், அவனை எப்படி அழைப்போம்?"

"விழிப்போக்கன்."

— I.G. ஜம்பு





எல்லாவற்றையும்கவனமாகத்தன் டு—இன்—ஒன்னில் பதிவு செய்தான் ஹரி. நிகழ்ச்சியை உன்னிப்பாகக் கவனித்தான். மறுநாள் பள்ளியில் முன்னின்று எல்லாவற்றையும் கூறிப் பெருமைப்பட வேண்டுமே!

கேள்வி: இப்போ கம்ப்யூட்டரினால் வேலை இல்லாத் திண்டாட்டம் பெருகுவதாகப் பேசிக்கறாங்க. நீங்க என்ன சொல்றீங்க மிஸ்டர் திலீப்? இதை ஒப்புக் கொள்றீங்களா?

பதில்: நிச்சயம் மாட்டேன். கம்ப்யூட்டரினால் நேரம், வேலை, பணம் எல்லாம் மிச்சமாகுது. நம் நாட்டில் தொழில் தெரிந்த வேலைக்கு ஆட்கள் இல்லையே தவிர, ஆட்களுக்கு வேலைப் பஞ்சம் கிடையாது.

ஹரி பெரிதாகக் கைகளைத் தட்டினான்.

கேள்வி கேட்டவர் சிரித்துக் கொண்டு அடுத்த கேள்விக்குச் சென்றார்.

கேள்வி: எத்தனையோ நாடுகளுக்குப் போயிருக்கீங்க. அவர்கள் முன்னேற்றத்திற்கும், நம்ம முன்னேற்றத்திற்கும் என்ன வித்தியாசம்? உதாரணத்திற்கு ஜப்பான் நாட்டை எடுத்துக் கொள்ளலாம். உலகப் போரினால், மிகவும் பாதிக்கப்பட்டு, நகரங்களை இழந்து திரும்ப முன்னேறி இருக்காங்க. நாம் இன்னும் முன்னேற வேண்டிய நாடாகவே இருக்கோமே! என்ன சொல்றீங்க?'

ப: நம்ம பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சொல்வது போல் நாம் சுதந்திரம் அடைந்த பிறகுதான் ஒரு குண்டூசித் தொழிற்சாலைகூடக் கட்டினோம். நம்மைச் சுற்றி இருக்கும் நாடுகள் பற்றியோ நான் சொல்லவே வேண்டாம். சுதந்திரத்திற்குப் பின் எத்தனையோ சண்டைகள்... ஆலைகள் நிறுவப் பணம், நம்மை நாமே காத்துக் கொள்ள இராணுவச் செலவு_இப்படிப் பல செலவுகள். ஆனால் ஒன்று. ஜப்பானியரிடம் உள்ள ஒற்றுமை, நாட்டுப் பற்று, உழைக்கும் தன்மை இவை நம்மிடம் தேய் பிறையாகிக் கொண்டு வருகிறது. இதுவே வளர் பிறையானால் உலக அரங்கில் மிகச் சிறந்த, பணக்கார நாடாய் இந்தியா உருவாகலாம்.

இதற்கு முக்கிய அடிப்படைத் தேவை நாட்டுப் பற்றுத்தான்!

கேள்வி: ஒரு விஞ்ஞானியிடம் இத்தனை நாட்டுப்பற்று இருக்கலாமா? ஒரு விஞ்ஞானி பொதுச் சொத்து இல்லையா?

பதில்: அப்படியென்றால், நான் பாரதத்திற்காகவிளையாடாமல்,வேறு ஒரு நாட்டிற்காக அதாவது வேறு ஒரு நாட்டுக் குழுவுக்காக விளையாடினால், நீங்கள் சும்மா இருப்பீர்களா?... நான் எல்லா 'விஞ்ஞானிகளுமே விளையாட்டு வீரராக இருப்பார்களென்று கூறவில்லை. ஆனால், ஒவ்வொரு விஞ்ஞானியும் 'மனிதன்' என்றுதான் கூறுகின்றேன்.

ஒரு விஞ்ஞானியினுடைய கண்டுபிடிப்புக்கள்தாம் பொதுச் சொத்தேயன்றி, அவன் தனி மனிதன் என்ற முறையில், முதலில் தன் நாட்டிற்குத் தான் சொந்தம். பிறகுதான் உலகிற்கு. அவ்வுணர்வுகள் இருந்தால்தான் நாடுகளிடையே போட்டி ஏற்படும். அதுவே, கண்டுபிடிப்புக்களின் முதல்படி. ஆனால், அது பொறாமையாக மாறும் வேளையில்தான் உலகமே கலங்கும் அளவு விஞ்ஞானம் பயமுறுத்துகின்றது. அவ்வாறில்லாமல் ஆரோக்கியமான போட்டி ஏற்பட்டால் மனிதகுலமே சிறப்படையும் வகையில் பல விஞ்ஞான முன்னேற்றங்கள் ஏற்படுகின்றன!

கேள்வி: நல்ல விளக்கம்! சரி... நீங்கள் அமெரிக்கா போகப் போவதாகக் கேள்வி. அங்கேயே தங்கி விடுவீர்களா?

பதில்: "அதெப்படி? கடலிலிருந்து சோழி எடுக்கிறோம். காதில் வைத்துக் கேட்டால், கடலின் ராகம் (Song of sea) கேட்கும். ஒரு ஜடப் பொருள் கூடத் தன் தாயகத்தை மறப்பதில்லையே! ஒரு பொருளை மேலே எறியும்போது,புவியீர்ப்புச்சக்தியால் கீழே விழுகிறது. ஒரு பொருளுக்கு மண் மேல் இருக்கும் பாசம் எனக்கிருக்காதா?

நான் அமெரிக்கா போவது, அங்கே இருக்கும் ஒரு அமெரிக்க நண்பருடன் சேர்ந்து ஒரு புதுப் பயிற்சியை மேற்கொள்ளவே; அதை இந்தியாவில் பரிசோதனை செய்து பார்க்கப் போகிறேன். இது போன்ற கண்டுபிடிப்புக்கள் இரு நாடுகளுக்கிடையே ஒரு நல்ல தொடர்பை ஏற்படுத்த உதவும். கடவுள் அருளால் எனக்கு வெற்றி கிட்டினால் நம் நாட்டிற்கே நல்ல பெயர் கிடைக்கும்.

கேள்வி கேட்பவர் நன்றி கூற, நிகழ்ச்சி முடிவடைந்தது. திலீப், "இளைஞர்கள் என் கருத்துக்களை மனத்தில் கொண்டு, நாடு முன்னேற வழி வகுக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டு விடைபெற்றார்.

மனித குலத்திற்காகப் பாடுபடும் ஒரு விஞ்ஞானிக்கே இத்தனை நாட்டுப் பற்று என்றால், தனக்கு எத்தனை நாட்டுப் பற்று இருக்க வேண்டும்? ஹரியின் நினைவுக் கிளிகள் கூடு கட்டின. டி. வி. "அடுத்த நிகழ்ச்சி சில நொடிகளில்" என்றது.

"என்னப்பா, டேப்பைக்கூட அணைக்காமல் அப்படி என்ன யோசனை?" கேட்டவாறு தாத்தா டேப்பை அணைத்தார். டேப் சுழற்சி நின்றது. அவன் மனத்திலும் மேலோட்டு மோகச் சுழற்சி நின்றது. "திலீப்பை உன்னால அடிக்க முடியலேன்னு கோபமா?" ஹரியை கேலி பேசினான், ஸ்ரீநாத்.

டி. வியிலோ நிகழ்ச்சி தொடர்ந்தது. "சேர்ந்திசை — பாரதியின் 'பாருக்குள்ளே நல்ல நாடு பாரதம்' என்ற பாடலைப் பாடுபவர்கள்...."

பாடல் தேனருவியாகக் காதில் பாய்ந்தது. ஸ்ரீநாத்தின் கைகளை ஹரியின் கைகள் பற்றின. கண்களோ கலங்கின. 'நான் பழைய ஹரி இல்லை. இந்தியாவை நேசிக்கும் இந்தியக் குடி மகன்' என்று அவன் கூற நினைக்கிறானோ? இருக்கலாம்!

சித்திரப் புதிர்! 3


ஆழி




1 இது பிரசித்தி பெற்ற சிற்பங்களின் ஒரு பகுதி. இது எங்கே இருக்கிறது?



2 இந்த விண்வெளி வீரரை நினைவு வைத்திருக்கிறீர்களா? யார் இவர்?



3 இங்கே உள்ள ஐந்து மீன்களில் ஒன்று மட்டும் வித்தியாசமானது. அது எந்த மீன்?



4 இங்கே எத்தனை பொருள்கள் இருக்கின்றன? என்னென்ன?

5 இது எந்த நாட்டுக் குழந்தை?



—— விடை வேறு பக்கம்



இன்னும் ஒரு மணி நேரம்தான் இருக்கிறது. இண்டர்வியூவிற்கு.

டவுன் பஸ்சுக்காக நின்றுகொண்டிருந்தான் பரந்தாமன். அவசரத்துக்கு இந்த பஸ் சனியன் வந்து தொலைய மாட்டேனென்கிறதே!

எத்தனையோ இண்டர்வியூக்களுக்குப் போய் வந்தும் அவனுக்கு இன்னும் வேலை கிடைத்தபாடில்லை!

வேறொரு எண் உள்ள டவுன் பஸ் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய பலரில் —

ஆனந்தனைக் கண்டுவிட்டான் பரந்தாமன்.

ஐந்து வருடம் ஆகிவிட்டதே அவனைப் பிரிந்து! எவ்வளவு நெருங்கிய நண்பர்கள் இருவரும். ஒருவரின் முகவரி மற்றவருக்குத் தெரியாததால், கடிதத் தொடர்பே இல்லாமல் போய்விட்டது!

பரந்தாமனைக் கண்ட ஆனந்தனும் பெரிதும் மகிழ்ந்தான். தான் அவசரமாக ஒரு திருமணத்துக்குச் சென்றுகொண்டிருப்பதாகக் கூறினான்.

தூரத்தில் ஒரு பஸ் வந்துகொண்டிருப்பது தெரிந்தது.

பரந்தாமன் பரபரத்தான். "ஆனந்த்! நாம் சாவகாசமாகப் பேசிக் கொண்டிருக்க இப்போது நேரமில்லை. எனக்குரிய பஸ் வந்துவிட்டது. உன் முகவரியைச் சீக்கிரம் எழுதிக் கொடு. கடிதம் பரிமாறிக் கொள்ளலாம்,"

"என்னிடம் பேப்பர் ஒன்றும் இல்லையே!" என்று உதட்டைப் பிதுக்கினான் ஆனந்தன்.

"என்னிடம் கூட சர்டிபிகேட்டுகள் மட்டும்தான் இருக்கின்றன!"

ஆனந்தனின் பார்வை சாலையை அங்குமிங்கும் பார்க்க, காலியான ஒரு சிகரெட் பாக்கெட் பாதி திறந்தபடி கிடப்பது தெரிந்தது.

"இதோ!" என்றவாறு அதை வேகமாகக் குனிந்து எடுத்து, அதன் உட்பக்கமுள்ள வெள்ளை அட்டையில் தன் முகவரியை அவசரமாக ஆனந்தன் எழுதி முடிப்பதற்கும், அதைப் படித்துக் கூடப் பார்க்க முடியாத அவசரத்தில் வாங்கி, தன் சட்டைப் பையில் பரந்தாமன் வைத்துக் கொள்வதற்கும் —

பஸ் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது

அன்பிற்கினியவன்

கும்பலில் முண்டியடித்து பஸ்சில் நின்று கொண்டான் பரந்தாமன். 'டாடா' சொல்லக் கூட முடியவில்லை.

இண்டர்வியூ முடிந்தது.

பரந்தாமனுக்கு முழுத் திருப்தி.

அவனது சான்றிதழ்களும், பதில்களும் தேர்வுக் குழுவினரைத் திருப்திப்படுத்திவிட்டதை, குழுவினரின் முகங்களே அவனுக்குத் தெளிவாக்கிவிட்டன.

எனவே இங்கு அவனுக்கு வேலை நிச்சயம்தான்!

ஊர் திரும்பினான்.

ஒரு வாரம் கழித்து அவனுக்கு அந்த அலுவலகத்திலிருந்து கடிதம் வந்தது.

உடைத்தான்.

படித்தான்.

"... தங்கள் படிப்பும், பதிலளித்த விதமும் எங்களுக்கு நிறைவாக இருப்பினும், தங்களுக்கு வேலை தர இயலாமைக்காக வருந்துகிறோம். காரணம், தாங்கள் எங்கள் அனைவருக்கும் தெரியும்படியாகத் தங்கள் சட்டைப் பையில் வைத்திருந்த சிகரெட் பாக்கெட்! சிகரெட் குடிக்கக் கூடாது என்று உங்களைச் சொல்ல எங்களுக்கு உரிமையில்லை. ஆனால் பெரியவர்களிடமும், உயர் அதிகாரிகளிடமும் நீங்கள் அலட்சியமாகவும், அகம்பாவமாகவும், மரியாதைக் குறைவாகவும்தான் நடந்து கொள்வீர்கள் என்பதை அது உணர்த்துகிறதே...!"

சிகரெட் குடிக்கும் பழக்கமே இல்லாத பரந்தாமனுக்குத் தலையைச் சுற்றியது!

செய்து பாருங்கள்


தேவை: தடித்த அட்டை, பென்சில், கோப்பை, கத்தரி, வர்ணங்கள்.

படம்—1. அட்டையின் மேல் கோப்பையை வைத்து வட்டம் வரைந்து கொள்ளுங்கள். வட்டத்தை வெட்டி எடுக்கவும். வட்டத்தின் நடுவில் துளை செய்யவும்.

படம்—2. துளையில் சின்ன பென்சிலை நுழைத்துக் கோந்து போட்டுத் துளையில் இருந்து நழுவி விடாமல் பென்சிலை ஒட்டிவிடவும்.

படம்—3. பம்பரத்தின் மேல் பகுதியில் வர்ண டிசைனைப் போடவும். இப்பொழுது பம்பரத்தைச் சுழலவிடவும்.

—உதல்.



உயிர்களிடத்தில்



புகைப்படம்:
எஸ்.ஜி.சேஷகிரி




அன்பு வேணும்





புகைப்படங்கள்:
எம். நடராஜன்

பட்டால்தான் தெரியும்



சி.வி. அரிகிருஷ்ணன்

எந்த வேலையையும் நேரத்தோடு செய்துவிட்டு நிம்மதியாக இருக்கும் பழக்கமே கிடையாது, மாலாவுக்கு. அப்படியே செய்தாலும், அதை ஒழுங்காகச் செய்வதும் இல்லை.

விடுமுறை நாட்களில் வீட்டுப் பாடங்களைச் செய்துவிட்டு, பிறகு கவலையின்றி விளையாடலாமே என்று நினைக்க மாட்டாள். அதற்குப் பதிலாக விளையாடிக் கொண்டே, 'ஐயோ, வீட்டுப் பாடங்களை வேறு எழுதியாக வேண்டுமே!' என்று கலவரப்பட்டு, விளையாட்டிலும் முழுமனதாகக் கவனம் செலுத்த முடியாமல் தவிப்பாள். எத்தனை முறை தவித்தால்தான் என்ன? தன் பழக்கத்தை மட்டும் அவள் மாற்றிக்கொள்ளவேயில்லை—மாற்றிக் கொள்ள முயற்சி செய்யவும் இல்லை!

மாலாவின் அப்பாவும், அம்மாவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாகி விட்டது. இருந்தாலும், மாலாவுக்குத் தன்னை மாற்றிக் கொள்ள முடியவில்லை. ஏன், வகுப்பிலே சக மாணவிகளுக்கு எதிரே ஆசிரியர்களிடம் திட்டு வாங்கி, தலை குனிந்து பெஞ்சி மேல் ஏறி நின்றும்கூட அவள் திருந்தவில்லை!

ஒரு சமயம், எதிரே உட்கார்ந்திருக்கும் மாலாவை விட்டுவிட்டு, மற்ற மாணவிகள் அனைவரையும் கேள்வி கேட்டு வந்தார் தமிழாசிரியை. இது மற்ற மாணவிகளுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. கடைசியாக, மாலாவின் முறைவந்தபோது, கேள்வி கேட்பதற்குப் பதிலாக, "ஏன் மாலா, வழக்கம் போல் பெஞ்சி மீது ஏறி நின்று விடுவதுதானே! எனக்கும் கேள்வி கேட்கிற வேலை குறையுமல்லவா?" என்று தமிழாசிரியை மாலாவிடம் கேட்டார். மாலாவும் உடனே பெஞ்சி மீது ஏறினாள்.



"டேய், தரையில் ஏன் வெங்காயத்தை வச்சுத் தேய்க்கிறே?"

"தேள் கடிச்ச இடத்திலே வெங்காயத்தைத் தேய்ச்சா வலி குறையுமாம். என் அண்ணா இந்த இடத்திலே நின்றபோது தான் தேள் கடிச்சுது."

—லலிதா செல்லப்பா.

"ஆரம்பத்திலேயிருந்து பெஞ்சி மேல் நின்றால், உனக்குக் கால் வலிக்குமேன்னுதான் உன்னைக் கடைசியாகக் கேள்வி கேட்டேன்; புரியுதா?" என்று அனுதாபத்துடன் ஆசிரியை கேட்டு முடித்ததும் அதை ரசித்து மற்ற மாணவிகள் புன்முறுவல் செய்தனர். இருந்தாலும், வழக்கமாகிவிட்ட காரணத்தால், மாலாவுக்கு அந்தச் சம்பவம்வேதனையாகத்தெரியவில்லை. அதற்காகத் தன்னை மாற்றிக் கொள்ளவுமில்லை!

ஒரு சமயம், பள்ளிக்கு கல்வி அதிகாரிகள் வருவதாக இருந்தது. ஆனால், அதற்கு முன்தினம் மாலையே உறவினர் வீட்டிற்குச் சென்றவள் அங்கேயே தங்கிவிட்டாள். மறுநாள் அங்கிருந்தே பள்ளிக்கு வர வேண்டி நேர்ந்ததால், முக்கியமான கேள்விகளுக்கு விடைகளைப் படிப்பதற்கு வசதிப்படவில்லை. அதே கலவரத்தோடு பஸ்ஸில் ஏறி உட்கார்ந்ததும், பையிலிருந்த புத்தகங்களையும் நோட்டுக்களையும் எடுத்துப் பரபரப்புடன் புரட்டிக் கொண்டிருந்தாள். அந்த நேரம் பார்த்து, குழந்தையோடு வண்டியில் ஏறிய ஓர் அம்மாள், தன் கையில் வைத்திருந்த அட்டைப் பெட்டியை மாலாவிடம் நீட்டி, "இந்தாம்மா, இதைக் கொஞ்சம் பிடி நிற்கவே முடியல்லே" என்றாள்.

"சரியான தொல்லைடா" என்று தனக்குள் முணு முணுத்துக் கொண்டே, அந்த அம்மாளிடமிருந்து பெட்டியை வாங்கிக் கொண்டாள் மாலா. பெட்டியின் மூடியைச் சிறிது நீக்கிப் பார்த்த போது, அதில் அழகான பட்டுப் பாவாடை இருக்கவே, அதில் தன் கவனத்தைச் செலுத்தினாள். அப்பொழுது வண்டியில் கூட்டம் அதிகமாகிவிட்டவே, குழந்தையோடு வசதியாக நிற்பதற்காகச் சிறிது உள்ளே தள்ளி நின்று கொண்டாள், மாலாவிடம் அட்டைப் பெட்டியைக் கொடுத்த அம்மாள்.

பஸ் வேகமாகப் போய்க் கொண்டிருந்த போது தலை நிமிர்ந்து வெளியில் பார்த்ததும் 'பகீ'ரென்றது மாலாவுக்கு. "அட, பஸ் பள்ளிக் கூடத்துக்கெதிரில் நின்றதைக் கூடக் கவனிக்காமல் போனேனே!" என்று நினைத்தவள், பரபரப்புடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக வைத்திருந்த புத்தகங்களை வாரி எடுத்துக் கொண்டே 'ஓல்டான், ஓல்டான்' என்று கத்தினாள். 'பள்ளிக் கூடத்திலே நிறுத்தினப்போ பாடம் படிச்சுக்கினு இருந்தே, இப்போ 'ஓல்டான், ஓல்டான்'னு கத்தறே!' — என்று எரிச்சலோடு சொல்லிவிட்டு பஸ்ஸைக் கண்டக்டர் நிறுத்துவதற்குள் அடுத்த 'ஸ்டாப்பிங்' வந்துவிட்டது.

அனைவரையும் இடித்துக் கொண்டு கீழே இறங்கி வேகமாகப் பள்ளிக் கூடத்தைநோக்கிவிரைந்தாள், மாலா. அதே சமயம், வண்டிக்குள்ளிருந்து, "ஐயோ!, ஐயோ!, என் பட்டுப் பாவாடையை எடுத்துக்கிட்டுப் போறா அந்தப் பொண்ணு!" என்ற குரல் கேட்டதும், அனைவரும் திகைத்தனர். "அதோ ஓடுறாளே அந்தப் பெண்ணைப் பிடியுங்கோ, என் பட்டுப் பாவாடையைத் தூக்கிக்கிட்டு ஓடுறா" என்று மேலும் கத்தினாள் பெட்டியை மாலாவிடம் கொடுத்தவள்.

படிக்கட்டில் தொங்கிக் கொண்டிருந்த இருவர் ஓடிப் போய் அந்தச் சிறுமியைத் தடுத்து நிறுத்தினார்கள். குழந்தையோடு அவர்களைப் பின் தொடர்ந்து சென்ற அந்த அம்மாள், 'ஏய் பொண்ணு, பாவாடை எங் கேடி?' என்றாள் மாலாவிடம்.

'அதிகாரிகள் பள்ளிக் கூடத்திற்கு வருகிற நேரத்தில் இப்படித் தாமதமாகி விட்டதே! அதுவும், பஸ் நிற்பதைக் கவனித்து இறங்காமல் போனதால் மேலும் தாமதமாகிவிட்டதே! பள்ளியில் இன்று கேள்வி கேட்பார்களே, அதற்காகக் கூட சிறிது படிக்க முடியவில்லையே!' என்று பலவித கலவரத்தோடு சென்று கொண்டிருந்த மாலா திடுக்கிட்டு, 'பாவாடையா!' என்று திகைப்புடன் கேட்டுவிட்டு, அதே நொடியில் நினைவும் வரவே, பரபரப்புடன் கையிலிருந்த புத்தகங்களையும், பையையும் துழாவினாள். ஆம், உண்மையிலேயே அந்த அம்மாளிடமிருந்து வாங்கி வைத்த அட்டைப் பெட்டியை அவள் மறந்தே போய் விட்டாள். ஆனால், அவளுக்கு நினைவு வந்து என்ன பிரயோஜனம்? அதற்குள் பையிலிருந்தபாவாடைப்பெட்டியைச் சுட்டிக் காட்டி, 'இதோ, இதுதான்!' என்று அந்த அம்மாள் கூக்குரலிட்டு விட்டாளே!


உடனே,'சின்னப்பொண்ணாஇருக்கே எவ்வளவு சாமர்த்தியம், பார்' என்றார் ஒருத்தர்.

'விழிக்கிறதைப் பாரு. ஆளுக்கு ரெண்டு போட்டு போலீஸ் ஸ்டேஷன்லே தள்ளணும். திருட்டுக் கழுதை' என்றார் மற்றொருவர்.

'சொன்னாப் போதாது சார், இப்படி ஆளுக்கு ரெண்டு தட்டுத் தட்டுங்கோ' என்று மாலாவின் தலையில் 'டக், டக்'கென்று பலமாகக் குட்டியே காட்டிவிட்டான் ஒரு வாலிபன்.

அந்தச் சமயம் அவ்வழியே வந்த பள்ளிச் சேவகன் முன்வந்து, அனைவருக்கும் சமாதானம் சொல்லி, அழுது கொண்டிருந்த மாலாவை அவர்களிடமிருந்து விடுவித்துப் பள்ளிக்கு அழைத்துச் சென்றான்.

'திருடி', 'சோம்பேறி கழுதை' என்ற பட்டங்களும், 'டக், டக்' என்ற குட்டுக்களும் ஏன், எதனால், யாருடைய தவறால்? இக் கேள்விகள் மாலாவுக்குள் எழுந்தன.



அவனும் இவனும்

ரா. பொன்ராசன்







கால்முடம் ஆகிக் கலங்கிய நாயைக்
கல்லால் அடித்தான் ஒரு முரடன் — அதன்
கதறலைக் கேட்டுக் கலங்கி அந்நாயைக்
காக்க முனைந்தான் ஒரு சிறுவன்.

கண்தெரி யாத பெரியவர் கையின்
கம்பினைப் பறித்தான் அம்முரடன் — அங்கு
கலங்கிய முதியவர் கையினைப் பற்றிக்
கலக்கம் தீர்த்தான் அச்சிறுவன்.

வேலியில் கிடந்த முள்ளினை எடுத்து
வீதியில் போட்டான் வன்முரடன் — அங்கு
வீதியில் கிடந்த முள்ளினை எடுத்து
வேலியில் சேர்த்தான் நம்சிறுவன்.

இருவர் செயல்களில் எவரது செயலை
எல்லாஉயிரும் மிக வெறுக்கும்? — இவ்
விருவர் செயல்களில் எவரது செயலை
எல்லா உள்ளமும் மிக மதிக்கும்?



பஸ்ஸில் ஏறும் போது டிக்கெட் வாங்க வேண்டுமே, இறங்குமிடம் வருகிறதாவென்று கவனிக்க வேண்டுமே, கூட்ட நெரிசலில் சிரமமின்றி இறங்க, தான் கொண்டு வந்த சாமான்களை ஒழுங்கு செய்து கொண்டு முன்னதாகவே எழுந்து கொள்ள வேண்டுமே என்றெல்லாமில்லாமல், பரபரப்புடன் படிப்பதிலும், வீணைகப் பாவாடையில் சிந்தனையைச் செலுத்துவதிலும் ஈடுபட்டுவிட்டோமே! எல்லாப் புத்தகங்களையும் பொறுமையாகப் பையில் அடுக்கியிருந்தால், அந்த அம்மாள் கொடுத்த பாவாடைப் பெட்டியைக் கவனித்து, அதை அவளிடம் பத்திரமாகத் திருப்பிக் கொடுத்திருக்கலாமே! 'நன்றி' சொல்லியிருக்க வேண்டிய அதே அம்மாள், 'திருடி', 'சோம்பேறி' என்று பட்டங்கள் சூட்டி ஏசிவிட்டாளே! இதெல்லாம் ஏன்? எதற்காக?' அவள் உள்ளத்தில் எழுந்த கேள்விகள் அவள் தலையில் சம்மட்டியால் அடித்தாற் போலிருந்தன!

'பெரியவர்கள் கண்டித்த போது ஆத்திரம் கொண்ட நான், இன்று காரணமின்றிப் பலபேருக்கெதிரில் அவமானம் அடைந்தேனே! என்னுடைய நிதானமின்மையும், எதையும் பொறுப்போடு, நேரத்தோடு செய்யாத ஒழுக்கமின்மையும் தானே இவ்வளவிற்கும் காரணம்!

'ஆம், நானே குட்டுப் பட்ட பிறகு தானே என்னால் என் குறையைப் புரிந்து கொள்ள முடிந்தது?' என்று தனக்குத்தானே பதில் கூறிக் கொண்டே மாலா மனத் தெளிவுடன் நடந்தாள்!



நாடோடிப் பாடல்கள்

பாட்டியின் காது

பாட்டி, பாட்டி, வெத்திலே பாக்கு
வேணுமா?

சத்தமா சொல்லுடா பேராண்டி,
காது கொஞ்சம் கேக்கல்லே.

பாட்டி, பாட்டி, போயிலே கொஞ்சம்
வேணுமா?
சத்தமா சொல்லுடா பேராண்டி,
காது கொஞ்சம் கேக்கல்லே.

பாட்டி, பாட்டி, தங்கநகை வேணுமா?
மெதுவாச் சொல்லுடா பேராண்டி,
காது நல்லாக் கேக்குது!

—பி. பத்மநாபன் (5039), ஈரோடு—2.



அத்தை வீடு

அத்தை வீட்டுக்குப் போனேன்
அரிசியும் பழமும் தந்தாங்க.

வேண்டாம்னு சொன்னேன்.
வெளியே வந்து நின்னேன்.

வெளியெல்லாம் பாம்பு!

பாம்பு அடிக்கக் குச்சி எடுத்தேன்
குச்சியெல்லாம் சேறு!

சேறு கழுவ ஆத்துக்குப் போனேன்.
ஆறெல்லாம் மீனு!

மீனைப் புடிக்க வலே எடுத்தேன்
வலே யெல்லாம் ஓட்டை!


ஓட்டையைத் தைக்க ஊசி எடுத்தேன்.
ஊசியெல்லாம் சொய்ங்! சொய்ங்! சொய்ங்!

—பி. ராதா (5037), செங்கற்பட்டு.

இட்ட முட்டை

கோழி முட்டை இட்டதுவாம்
கும்ப கோணம் மூலேயிலே!

வாத்து முட்டை இட்டதுவாம்
வள்ளியூரு மூலேயிலே!





குருவி முட்டை இட்டதுவாம்
குடவாசல் மூலேயிலே!

கொக்கு முட்டை இட்டதுவாம்
கோவனூரு மூலேயிலே!

—சித்தாலத்தூர் — ஷேனி ஜோதி, சித்தாடி.

தஞ்சாவூர்ப் பொம்மை

உருட்டுச் சட்டிப் பொம்மை இது.
உருண்டு உருண்டு ஆடும் இது.

தஞ்சாவூர் ரயில் வழியில்
தம்பிப் பாப்பா அழுத போது

சின்ன அத்தான் வாங்கித் தந்த
சீரான பொம்மை இது.

—பா. சிவக்குமார் (5251), கோபிநாயக்
கன்பட்டி.





வளையல்

வளையலோ வளையல்.
கண்ணாடி வளையல்.
செல்ல மக்கள் வாருங்கள்.
செல்லக் கையை நீட்டுங்கள்.
கை நிறைய அடுக்கலாம்.
குலுக்கிக் குலுக்கி நடக்கலாம்.

—இரா. பாபு (4798), சென்னை—94.

மாமா, மாமா

மாமா, மாமா, மாமரச் சோலை
நீங்க வந்த நேரம், நீலக்கண்ணாடி

சந்தனப் பொட்டு, சரிகைத் தலைப்பா.
சம்மங்கு சோறு, கத்தரிக்காய் சாம்பார்.

இன்னுபாரு மாமா, தேரு பார்க்கப் போக
லாம்.
காசு கொடு மாமா, கடலை வாங்கித் தின்ன
லாம்.

—ப. பார்த்தசாரதி (109), தேனி.





என்ன செய்வீர்கள்?

புத்தர் பெருமான் தம்முடைய கொள்கைகளை மக்களிடம் எடுத்துக் கூறிவந்தார்.

சிலர் அதை ஆதரித்தார்கள். சிலர் அதைத் தீவிரமாகத் தாக்கிப் பேசினார்கள். கொள்கைகளைத் தாக்குவதோடு மட்டும் நில்லாமல், புத்தர் பெருமானையே தாக்கிப் பேசவும் தொடங்கினர்.

ஒருமுறை ஒரு மனிதன் புத்தர் பெருமானை வாயில் வந்தபடி ஏசினான். அவன் பேசிய சொற்களையெல்லாம் கேட்ட புத்தர், முதலில் புன்முறுவல் பூத்தார். பிறகு தம்மை ஏசிய அந்த மனிதனை நோக்கி, ''நண்பரே!'' என்று கூறி அருகில் அழைத்தார்.

அவன் அருகே சென்றான். ''நண்பரே! உட்காருங்கள்!'' என்று சொன்னார். அந்த மனிதன் உட்கார்ந்தான். ''நண்பரே, தாங்கள் யாரையாவது பார்க்கச் செல்லும்போது, கையில் ஏதாவது எடுத்துச்செல்வது உண்டா?'' என்று கேட்டார்.

''ஆம், பழங்கள் எடுத்துச் செல்வேன்'' என்று அந்த மனிதன் சொன்னான்.

''நீங்கள் கொடுக்கும் பழங்களை, தாங்கள் காணச் சென்றவர் ஏற்க மறுத்தால், நீங்கள் அந்தப் பழங்களை என்ன செய்வீர்கள்?''

''திரும்ப அந்தப் பழங்களை எடுத்துக் கொண்டு வீடு திரும்புவேன்.''

''அதே போலத்தான் நீங்கள் பேசிய பேச்சுக்களை நான் இப்போது ஏற்றுக் கொள்ளவில்லை. பழங்கள் எடுத்துச் செல்வது போல, ஏச்சுக்களையும் நீங்களே எடுத்துச் செல்லுங்கள்'' என்று புத்தர் கூறியதைக் கேட்டதும், தனது தவற்றை உணர்ந்த அந்த மனிதன் மன்னிப்புக் கோரினான். அவருடைய திருவடிகளில் வீழ்ந்து, தன்னையும் சீடனாக அங்கீகரிக்குமாறு வேண்டினான்.

—கு.பாஸ்கர்



பிரெஞ்சுப் பழமொழிகள்

✲ அண்டை வீட்டுக்காரன் நல்லவனாயிருந்தால் பொழுது நன்றாக விடியும்.

✲ விரும்பியது கிடைக்காவிட்டால், கிடைத்ததை விரும்ப வேண்டும்.

✲ ஏழைகளுக்கு உதவி செய்பவன் கடவுளுக்குக் கடன் கொடுக்கிறான்.

✲ நிரம்பிய பாத்திரம் வழிய ஒரு துளி போதும்.

✲ முட்டைகள் வேண்டுமென்றால், கோழிகளின் இரைச்சலைப் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

✲ அனுபவம் அறிவை வெல்லும்.

✲ பேசுபவன் விதைக்கிறான். கேட்பவன் அறுக்கிறான்.

✲ இலைகளின் சத்தத்துக்கு அஞ்சுபவன் காட்டுக்குப் போகக் கூடாது.

✲ இன்று முட்டையைத் திருடுபவன் நாளை மாட்டைத் திருடுவான்.


✲ பூனை போய் விட்டால் எலிகள் கூத்தாடும்.

✲ இரண்டு யோசனைகள் ஒரு யோசனையை விட மேலானது.


✲ நடு ஆற்றில் குதிரையை மாற்றக் கூடாது.

✲ தாமதமாய்க் கொடுப்பது மறுப்பதற்கு ஒப்பானது.

—புதுச்சேரி சாரதானந்தன்



விபீஷணர் கோரிக்கைக்கு இணங்கி ஜாம்பவான் பேசினார்:






ஜாம்பவான் கூறிய வரலாறு தொடர்கிறது....
ராவணனுக்கு மந்திரி பிரகஸ்தன் ஆறுதல் கூறுகிறான்...
ஐயோ! இந்திரஜித்தும் இறந்தானே! மகனைப் பறி கொடுத்து நான் ஏன் வாழ்கிறேன்?
பழி வாங்கத்தான் அரசே! தங்கள் அருமைத் தம்பி மயில் ராவணனை அழைத்தால் நமக்கு வெற்றி!
அண்ணன் அழைப்பை ஏற்றுப் பாதாள இலங்கையிலிருந்து பாய்ந்து வந்தான் மயில் ராவணன். விவரமறிந்ததும்...
அண்ணா! எதிரி சேனைகளை அழித்து ராம லக்ஷ்மணர்களைத் தூக்கிச் சென்று பாதாள லங்கையிலே காளி தேவிக்குப் பலி கொடுப்பேன், சத்தியம்!
மயில் ராவணன் சபதம் வாய் வார்த்தையாகப் பரவியது. அசோக வனத்தில் விபீஷணர் மகள் திரிஜடை இதைக் கேள்விப் பட்டுக் கலங்கினாள்.
வாயு பகவானைப் பிரார்த்திப்பது தவிர வேறு வழி தோன்றவில்லை...
திரிஜடையின் பிரார்த்தனைக்கு வாயு பகவான் இரங்கினார்.
சுவாமி! தாங்கள் உடனே என் தந்தையிடம் போய் மயில் ராவணன் சபதம் பற்றித் தெரிவிக்க வேண்டும்.


திரிஜடையின் கோரிக்கையை நிறைவேற்றினார் வாயு.
விபீஷணா! இன்றிரவே பாதாளலங்கையில் ராமலக்ஷ்மணர்களைப் பலியிடப் போகிறான் மயில் ராவணன்!
ஆ!
விவரமறிந்த ராமபிரான்...
அனுமனே! மயில் ராவணன் மாயைகளை வெல்வதற்கு உன்னால் தான் முடியும்...
பிரபோ! அண்ணனும் தம்பியும் கண்ணயர்ந்து களைப்பாறுங்கள். காவலுக்கு நான் இருக்கிறேன்!
விபீஷணர் யோசனை கூறினார்:
இன்றிரவு மட்டும் ராம லக்ஷ்மணர்களைச் சுற்றி ஒரு கோட்டை எழுப்பிப் பாதுகாத்து விட்டால் போதும். விடிந்து விட்டால் பயமில்லை...
கவலைப்படாதீர்கள்! என் வால் எதற்கு இருக்கிறது....!


ராமலக்ஷ்மணர் உறங்கிய குடிலைச் சுற்றி வானளாவிய கோட்டை எழுப்பினர் அனுமார்.
கோட்டைக் காவலர்களை விபீஷணர் எச்சரித்தார்.
கோட்டைக்குள் செல்ல வேண்டுமானால் அனுமனின் வாய்க்குள் நுழைந்து செவி வழியே உட்புறம் இறங்கினால்தான் உண்டு.
ஆனால் மயில் ராவணன் மாயாஜாலம் செய்து அதற்குக் கூட உபாயம் கண்டு பிடித்து விடலாம்! ஜாக்கிரதை!
மயில் ராவணன் சபதத்தை நிறைவேற்றக் கிளம்பியபோது மனைவி வர்ணமாலிகை ஓடி வந்து...
பிரபோ! ஸ்ரீராமர் மகாவிஷ்ணுவின் அவதாரம் என்று கேள்வி... தயவு செய்து அதர்மத்துக்குத் துணை போகாதீர்கள்!
அசடே என்னால் ஆகாததும் உண்டா? வீரதிலகம் இட்டு வழியனுப்பி வை!
சாந்தியன், சதுரன் என்று இரு மாவீரர்களை முதலில் அனுப்பினான் மயில் ராவணன். அவர்கள் கோட்டைக்குள் புக முயன்று....


அனுமன் வால் சுருள்களின் இடையில் சிக்கி நசுக்குண்டு, தப்பினோம் பிழைத்தோம் என்று திரும்பி ஓடி வந்தனர்.
பிரபோ. மன்னியுங்கள்!
ஹூம் கேவலம் ஒரு குரங்கு உங்களை வென்று விட்டதே.. சரி, நானே புறப்படுகிறேன்...
தன் மாயையினால் விபீஷணரைப் போல் உருமாறினான் மயில் ராவணன்!
மாருதி! கோட்டைக்குள் ராம லக்ஷ்மணர்களுக்கு எல்லாம் வசதியாக இருக்கிறதா, பார்த்து விட்டு வருகிறேன்..
உம்!
கோட்டைக் கதவுபோல் அனுமார் வாயைத் திறக்க மயில் ராவணன் உள்ளே புகுந்து விட்டான்.
அனுமாரின் காதுத் துவாரம் கோட்டையின் உட்புற வாசலாய் விளங்குவது...
ஆ! அதோ அந்தக் குடிசைக்குள் தான் ராம லக்ஷ்மணர்கள் இருக்க வேண்டும்!
குடிசைக்குள் கண்ணயர்ந்திருந்த ராமலக்ஷ்மணர்களை மந்திரத்தால் கட்டி மயக்கி....
மாயையால் ஒரு சிறு பெட்டிக்குள் அடக்கி எடுத்துக் கொண்டான் மயில் ராவணன்!
ஹி.. ஹி.. ஹி.. ஹி.. இன்றிரவே இரண்டு பேரும் காளிமாதாவுக்குப் பலி...! ஹஹ்ஹ் ஹா...
கோட்டைக்கு வெளியே வந்தான் மயில் ராவணன்- விபீஷணன் உருவில்!
அனுமானே! ராம லக்ஷ்மணர்கள் நிம்மதியாய்த் தூங்குகிறார்கள். ..நானும் போய்ப் படுக்கிறேன்.


ஜாக்கிரதை! மயில் ராவணன் பொல்லாதவன். மாயையால் என்னைப் போலவே உரு மாறி வந்தாலும் வருவான்!
மயில் ராவணன் பாதாள இலங்கை திரும்பினான். ராம லக்ஷ்மணர்கள் அடங்கிய பெட்டியைப் பத்திரப் படுத்தினான். அன்றிரவு... அசரீரி ஒலித்தது!
மயில் ராவணா! உனக்கு அழிவு நெருங்கி விட்டது. அனுமார் உன் தலைகொய்து பின்னர் சித்திரசேனனுக்கு முடி சூட்டுவார்!
அசரீரிகேட்டு அதிர்ந்தான் மயில் ராவணன்...
யார் அங்கே! சித்திரசேனனைச் சிறையில் அடையுங்கள்!
இதற்கிடையில் அனுமன் கோட்டை அருகே விபீஷணர் வர...
விபீஷணரே, சற்று முன் தூங்கப்போவதாய்க் கூறிச் சென்றீர்... தூக்கம் வரவில்லையா?
என்னது...? நான் அப்படி சொல்லவில்லையே... இங்கு வரவேயில்லையே... ஐயோ! மோசம் போய் விட்டோமா?
கோட்டையைக் கலைத்தார் அனுமார். ராம லக்ஷ்மணர்கள் குடிலுக்குள் இல்லை எனக் கண்டார்.
கவலை வேண்டாம். நான் அவர்களை மீட்டு வருவேன் வழி சொல்லுங்கள்!



கிருஷ்ணர் கூறியபடி நடுக் கடலில் கடல் தாமரைக் கொடிகள் படர்ந்த பிரதேசத்தை அடைந் தார் அனுமார்.
உள்ளதிலேயே பெரிய தாமரையைத் தேடிக்கண்டு பிடித்து அதன் மத்தியில் இருந்த துவாரத்தில் புகைபோல நுழைந்து சென்று...
அக்கினிக் கோட்டையை அடைந்தார். அதனைக் காவல் காத்த மாவீரன் மச்சவல்லபன்...
...அனுமாரை எதிர்த்து துவந்த யுத்தம் நடந்தது.
ஆ! இவன் மகாபலசாலி...! என் உடல் சோர்ந்து வருகிறது!
வீரனே...! இவ்வளவு பலசாலியான நீ யாருடைய குமாரன்?
என் தந்தை வாயு புத்திரன். அனுமன் என்ற பெயர் கொண்டவன்.
திகைத்தார் மாருதி.
இதென்ன வேடிக்கை? அனுமார்தான் நித்திய பிரம்மச்சாரியாயிற்றே...?
மச்சவல்லபன் கூறினான்:
மாருதி கடலைத் தாண்டி பறக்கும் போது வியர்வை சிந்தியது. அது ஒரு மீன் வயிற்றில் புக... நாளடைவில் நான் பிறந்தேன்...


... என் பாட்டனர் வாயு பகவான் என்னை எடுத்து வளர்த்தார்...
குழந்தாய்...! உன் தந்தையை விடப் பலசாலியாக விளங்குவாய்! மீன் வயிற்றில் பிறந்ததால் மச்சவல்லபன் என்று பெயர் சூட்டுகிறேன்!
கதையைக் கேட்டு அனுமார் அக மகிழ்ந்தார்.
குழந்தாய்! நான்தான் உன் தந்தை மாருதி!
சுவாமி தங்களைக் காணும் பாக்கியம் கிட்டியதே!
தான் வந்த காரியத்தைக் கூறினர் அனுமார்.
ராம லக்ஷ்மணர்களை நான் மீட்ட ஆகவேண்டும்!
சுவாமி! மயில் ராவணனுக்கு அவன் கோட்டையைக் காப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறேனே... என்ன செய்யுங்கள்!
தனது பலவீனம் பற்றிய ரகசியத்தை வெளியிட்டான் மச்சவல்லபன்.
என்னுடன் சண்டை போடும் போது நக மார்பில் குத்தினீர்களானல் மூர்ச்சை அடைந்து விடுவேன். பிறகு நீங்கள் உள்ளே போகலாம்!
அனுமாருக்கு வெட்கமாகவும் வேதனையாகவும் இருந்தது. ஆனல் நிலைமையின் நிர்பந்தத்தை எண்ணி...
மச்சவல்லபன் மயங்கி விழுந்தான்...
குமாரா! என்னை மன்னித்து விடு. உண்மையில் வெற்றி உன்னுடையதே...

அக்கினிக் கோட்டையைத் தாண்டியதும், செங்கல்கோட்டை! பிறகு பித்தளைக் கோட்டை, செப்புக்கோட்டை, வெண்கலக்கோட்டை தங்கக்கோட்டை அனைத்தையும் கடந்தார் அனுமார்!






பெண்ணே! கவலைப் படாதே! உன் மகனுக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. நான் தான் அனுமார்!
நீங்களா! எப்படி நம்புவது?
இதோ பார்! இப்போது நம்புகிறாயா? என்னை உன் குடத்துக்குள் ஒளித்து, கோட்டை வாசலைக் கடந்து கோவிலுக்குள் கொண்டு போ!
உங்களைக் குடத்துக்குள் ஒளிப்பதா...? நடக்கிற காரியமா?
இப்போ என்ன சொல்கிறாய்?
சுவாமி! தங்கள் விருப்பப் படியே செய்கிறேன். சித்திரசேனனைக் காப்பாற்றுங்கள்!
தாரகன்டிகை உதவியுடன் கோவிலுக்குள் புகுந்த அனுமார்...
ஆ! இந்தப் பெட்டியில் தான் ராம லக்ஷ்மணர்கள் இருக்க வேண்டும்!



அந்தப் பெட்டியுடன் பறந்து சென்று ஒரு மலைக்குகையில் மறைவாக வைத்துப் பத்திரப் படுத்தினார் அனுமார்.
பூமாதேவியே! திக்பாலர்களே! ராம லக்ஷ்மணர்களைப் பாது காப்பீர்களாக!


இதற்கிடையில் மயில் ராவணன் காளி சந்நிதியை அடைந்து...
அன்னை மனம் குளிர பலி கொடுப்போம்!


பெட்டியைக் காணாமல் திடுக்கிட்டான் மயில் ராவணன்.
ஆ! இது தார தண்டிகையின் வேலையாகத் தான் இருக்கும். இழுத்து வாருங்கள் அவனையும் சித்திரசேனனையும்!


ககன மார்க்கமாகத் திரும்பிய அனுமார் அரக்க வீரர்கள் அம்மாவையும் மகனையும் கட்டி இழுத்துப் போவதைப் பார்த்து விட்டார்.


அரக்கர்களுடன் போரிட்டு அவர்களை அழித்தார்.
ஆ!
செத்தேன்!
ஐயோ!
சித்திரசேனனையும் தாரதண்டிகையையும் விடுவித்துக் குளக் கரையில் ஒளிந்திருக்குமாறு கூறினார் அனுமார்.
உங்களுக்கு எவ்வாறு நன்றி சொல்வோம்?
இதற்குள் விஷயமறிந்த மயில் ராவணன் தானே பத்துக்கைகளிலும் ஆயுதங்கள் ஏந்தி அனுமாரைச் சந்திக்க வந்தான்.
ஏ! வானரனே! சித்திரசேனனை விடுவித்த உன்னைத் தண்டிப்பேன்! என் அசுர வீரர்களை வென்றது போல் என்னையும் ஜெயிக்கலாம் என்று எண்ணாதே!
மயில் ராவணனை அனுமாரால் வெல்ல முடியவில்லை.
இதென்ன அதிசயம்! எத்தனை தடவை வெட்டிப் போட்டாலும் மறுபடி முழுமையாக எழுந்து வருகிறாயே!
ஹா ஹ் ஹா! ஹா ஹா.


இதன் காரணமறிய அனுமார் மாயமாய் மறைந்து தாரதண்டிகை இருக்குமிடத்தில் தோன்றினார்.
சுவாமி! மயில் ராவணன் கடுந்தவம் செய்து வரம் பெற்றுள்ளான்.
அந்த வரம்...
பிரும்ம தேவனே! என் உடலில் உள்ள பஞ்ச பூதங்களும் ஐந்து வண்டுகளாய் விந்திய மலைக் குகைகளில் இருக்க வேண்டும். அவற்றுள் ஒன்று உயிருடன் இருந்தாலும் நான் சாகக் கூடாது!
அப்படியே ஆகுக, மயில் ராவணா!
வரத்தை விளக்கிய தூரதண்டிகை தொடர்ந்தாள்..
இப்போது என் தமையன் சங்குக் கோட்டைக்கும் முத்துக்கோட்டைக்கும் இடையே உள்ள ஆலமரத்தின் கீழ், பூமியின் அடிவாரத்தில் விரதயாகம் செய்து கொண்டிருப்பான்!
அசுரனின் யாகசாலையில்...
... யாக குண்டத்திலிருந்து ஒரு பூதம் கிளம்பியது! மயில் ராவணன் உத்தரவிட்டான்.
பூதமே! அனுமானைக் கொன்று ராம லக்ஷ்மணர்களைக் கொண்டு வா!


பூதத்தின் வாயிலிருந்து கிளம்பிய நெருப்பு ஜ்வாலை அனுமாரைச் சூழ்ந்தது...
அக்னி பகவானே! சீதா பிராட்டி கொடுத்த வரத்தின் படி எனக்குத் தாங்கள் குளிர்ந்திருக்க வேண்டும்.
நெருப்பினால் பாதிக்கப் படாத அனுமார் ஆலமரத்தை வேரோடு பிடுங்க முயன்றார். பூதம் முதுகில் தாக்கவே அதை வாலினால் கட்டிப் போட்டார்.
ஆலமரத்தைப் பெயர்த் தெறிந்து விட்டு அதன டியில் இருந்த யாக சாலைக்குள் அனுமார் நுழைந்தார். மயில் ராவணன் முதல் தடவையாகப் பயந்தான்...
நீ... நீ... எப்படி உள்ளே நுழைந்தாய்... ...!?
அனுமன் ஆற்றலை உணர்ந்து அவனி டமிருந்து தப்ப, யாக சாலையிலிருந்து மறைந்த மயில் ராவணன் வெள்ளி மலையாகி நின்றான்.
பூதத்தை வாலினாலேயே சுழற்றி அடித்தார் அனுமார். யாக சாலை யிலிருந்தோர் சிதறி ஓடினர்.
அனுமாரே! யாகம் கலைந்ததாலே என் சக்தியும் போய் விட்டது. ராம காரியமாக வந்த நீர் மயில் ராவணனை வென்று கீர்த்தி அடைவீர்!


பூதம் மறைய
மயில் ராவண
னைத் தேடினார்
அனுமார். பின்
அடைந்து
மயில் ராவணன்
தாமரைத் தண்டின்
வழியே புகுந்து...
புகை ரூபத்தில்
தப்பிச் சென்று விடலாம்.
...!
ஆனால் வாயு
பகவான்
விடவில்லை.
ஆ! பயங்கரப்
புயல்; கடல்
கொந்தளிப்பு!
புகை ரூபத்தில்
வெளியேறினால்
சிதறிப்போவேன்.
மயில்
ராவணன்
யானை
வடிவம்
எடுத்து
ஓடினான்.
அனுமார்
துரத்திச்
சென்று
...
முஷ்டியால்
குத்த, மயில்
ராவணன்
வெளிப்
பட்டான்.
பற்பல அஸ்திரங்களை
ஏவி இருவரும் துவந்த
யுத்தம் செய்ய...
கடைசியில் மயில்ராவணன்
மார்பில் ஒரு காலும்
விந்திய மலையில் ஒரு
காலுமாக ஊன்றி
நின்றார் அனுமார்.


விந்திய மலைக் குகைகளிலிருந்து இந்த
வண்டுகளையும் ஒன்றன் பின் ஒன்றாய்
எடுத்து நசுக்கிக் கொல்ல...
மயில் ராவணன்
துடிப்பு அடங்கி...
மாருதி என்னை மன்னித்து விடு!
... மாண்டு போனான்.
அப்பனே! வரம் பெற்ற மாயா வீரனாக இருந்தும் ஆற்றலையெல்லாம் தீமைக்கே பயன் படுத்திய தால் அழிந்தாய்...!
சித்திரசேனனுக்குப்பட்டாபிஷேகம்.
நீடூழி வாழ்க! நான் போய் வருகிறேன்!
பெட்டியுடன் திரும்பினார் அனுமார். சூரியோதயம் ஆயிற்று. ராம லக்ஷ்ம ணர்கள் மாயை நீங்கி எழுந்தனர்.
விபீஷணரும் வானர வீரர்களும் வணங்கி நின்றனர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.
சுபம்

எஸ்தோனிய நாட்டுக்கதை

போர்த்தூதன்

தமிழில்:
எச். கிருஷ்ணமூர்த்தி



எஸ்தோனிய நாட்டு அரசனுக்குப் போர் என்றால் மிகவும் பிடிக்கும். பக்கத்து நாடுகளோடு அடிக்கடி போரிட்டான். தன்னுடைய ஆட்சியை விரிவுபடுத்திக் கொண்டே வந்தான். சில நாட்கள் அமைதியாக இருந்தாலே போதும். உடனே அவனுடைய தோள்கள் போரிடத் துடிக்கும்.

வழக்கம் போல அந்த அரசன் போருக்கு ஏற்பாடுகள் செய்தான். இந்த முறை பின்லாந்து நாட்டைத் தாக்கத் திட்டமிட்டான். நான்கு தூதர்களை அழைத்து, அவர்களிடம் ரகசிய ஆணையைக் கொடுத்தான். ''பன்னிரண்டு நாட்களுக்குள் உடலில் வலுவுள்ள எல்லா ஆண்களும் தகுந்த ஆயுதங்களோடு திரள வேண்டும். பின்லாந்தைத் தாக்குவதற்குப் புறப்பட வேண்டும்,'' என்பது ரகசிய ஆணை.

அந்த நான்கு தூதர்களையும் பார்த்து, ''நீ கிழக்கே போ! நீ மேற்கே போ! நீ தெற்கே போ! நீ வடக்கே பின்லாந்து பாலம் வரையில் போ! நாம் இந்த யுத்தத்தில் ஜெயிப்பது உங்கள் கையில்தான் இருக்கிறது. எல்லா மக்களிடமும் இந்த ரகசிய ஆணையைத் தவறாமல் காட்டுங்கள் மின்னல் வேகத்தில் செயல்படுங்கள்! முழு பலத்தோடு போய்த் திடீரென்று தாக்கினால்தான் நாம் அந்தப் பின்லாந்து மக்களைத் தோற்கடிக்க முடியும்!'' என்று அரசன் கட்டளையிட்டான்.

நான்கு தூதர்களும் நல்ல குதிரைகளின் மீதேறித் தத்தம் திசைகளில் காற்றாய்ப் பறந்தனர். கிழக்கு, மேற்கு, தெற்குத் தூதர்கள் அரசனுடைய கட்டளைப் படியே கிராமம் கிராமமாக, ஊர், ஊராக, பண்ணை பண்ணையாகச் சென்றனர். வழியில் சந்தித்த மக்களுக்கெல்லாம் மன்னனுடைய ஆணையைக் காட்டினர். உடனே தக்க ஆயுதங்களுடன் ம்க்கள் போருக்குத் தயாராயினர்.

பின்லாந்து பாலம் வரைக்கும் போக வேண்டிய வடக்குத் தூதன் இரண்டாம் நாளே வழியில் நிறுத்தப்பட்டான். தன்னுடைய குதிரை ஒரு மரத்தை நெருங்கியதுமே வயதான பெரிய காகம் ஒன்று அவனுக்கு எதிரே சாலையில் இறங்கியது.

''நில்லு! நில்லு!'' என்று காகம் கரைந்தது.

''நிற்க எனக்கு நேரமில்லை!''

''போர் வருகிறதா? போர் வருகிறதா?'' என்று காகம் ஆவலோடு கேட்டது.

''முட்டாள்தனமாகப் பேசாதே! வழிவிடு!'' என்று அதட்டினான் தூதன்.

''உன்னிடம் ரத்த வாடை அடிக்கிறது! நீயும், நானும் கூட்டாளிகள் தான்!'' என்று கரகரத்த குரலில் காகம் கரைந்தது.

தூதன் குதிரையில் விரைந்தான் காகம் அவனைத் தொடர்ந்து போயிற்று. ''காகம் சொல்லுவது சரி தான். போரில் அநேகம் பேர் சாவார்களே!'' என்று தூதன் மனத்திற்குள் எண்ணிக் கொண்டான்.

சிறிது நேரம் ஆனதும், ''உன்னிடம் ரத்த வாடை அடிக்கிறது! பிணங்களின் வாடை அடிக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே ஒரு கழுகு அவனுடைய வழியை மறித்தது.

''விலகிப் போ!'' என்று தூதன் கூச்சலிட்டான்

''நாம் எங்கே சந்திக்க வேண்டும் என்று சொன்னால் போதும். எனக்கும் தான் அழைப்பு உண்டு!'' கழுகு கூறியது.

''வழியை விடப் போகிறாயா, இல்லையா?'' என்று மிரட்டிக் கொண்டே தூதன் குதிரையைத் தட்டிவிட்டான். குதிரை பறந்தது. கழுகு தொடர்ந்தது.

''கழுகு சொல்லுவது உண்மை தான். வாளும், வேலும் சூலமும் போதும், அம்பும், கோடரியும் மனித உடலைப் பிளக்கும் போதும் கழுகுகளுக்குக் களிப்பான விருந்து படைக்கப்படுகிறது!'' என்று தூதன் சிந்தித்தான்.

எதிரே ஓர் ஓநாய் வந்தது. 'உன்னிடம் ரத்த வாடை அடிக்கிறது! பிணங்களின் வாடை அடிக்கிறது! உன் சட்டைப் பையில் எனக்கு அழைப்பு வைத்திருக்கிறாயா, என்ன? நாம் இருவரும் கூட்டாளிகளாயிற்றே?'' என்று ஓநாய் நயமாகக் கேட்டது.

தூதன் வாயைத்திறக்கவில்லை. குதிரையைக் குத்தி விரட்டினான். குதிரை பாய்ந்தது. ஓநாயும் தொடர்ந்து பாய்ந்தது.

''ஓநாய் உரைப்பது சரிதான். நான் கொடுக்கப் போகும் இந்த ரகசிய ஆணையால் அநேக மனிதர்கள் உயிர் இழக்கப் போகின்றனர்,'' என்று தூதன் மறுபடியும் நினைத்தான்.

சாலை ஓரத்தில் முக்காடிட்ட ஒரு கரிய உருவம் குனிந்து உட்கார்ந்திருந்தது. திடீரென அதைக் கண்டு, குதிரை மிரண்டது.

''யார் நீ? என்ன வேண்டும்?'' தூதன் கேட்டான்.

கரிய உருவம் நிமிர்ந்தது. அது ஒரு பெண். அவள் குதிரையை விட உயரமாக இருந்தாள்.

''என் பெயர் பஞ்சம். நீ எனக்கும் ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறாய் இல்லையா? உன்னிடம் ரத்தவாடை அடிக்கிறது! பிணங்களின் வாடை அடிக்கிறது! நானும் யுத்தகளத்தைச் சேர்ந்தவள்தான். ஆண்கள் போரிட்டு மடிகின்றனர். அப்போது பெண்களும், குழந்தைகளும் கொல்லப்படுகின்றனர். வயல்கள் அழிக்கப்படுகின்றன. தானியக் களஞ்சியங்கள் எரிக்கப்படுகின்றன. மக்கள் உண்ண உணவில்லாமல் பசியால் துடித்து இறக்கின்றனர்,'' என்று அந்தப் பெண் பேசினாள்.

தூதன் பேசவில்லை. மௌனமாகக் குதிரையை ஓட்டினான். தற்செயலாக அவன் திரும்பிப் பார்த்தான். இடுக்கிட்டான். பயங்கரமான நீண்ட கால்களுடன் பஞ்சம் அவன் பின்னால் விரைந்து வந்து கொண்டிருந்தாள்.,

பின்லார்ந்து பாலத்தைத் தூதன் நெருங்குவதற்குள் ஐந்தாம் முறையாக நிறுத்தப்பட்டான். அருவருப்பான உருவம் கொண்ட ஒரு கிழவி தள்ளாடித் தள்ளாடி அவன் முன்னே வந்தாள். ''நான்தான் 'தொத்து நோய்'! நானும் யுத்த பூமியைச் சேர்ந்தவள் தான்! ரகசிய ஆணையை நீ கொடுக்கப் போகிறாயே — அந்த வீரர்கள் கொல்லுவதைவிட நான் அதிக ஆட்களைக் கொல்லுகிறேன். உன்னுடைய கூட்டணியிலேயே நான்தான் அதிக வல்லமை படைத்தவள்!'' என்று அந்தக் கொடிய கிழவி கூறினாள். மேலும், ''தூதனே! விரைந்து போவோம், வா! நாங்கள் எல்லோரும் யுத்த களத்தைச் சேர்ந்தவர்களே! உன்னுடைய ரகசிய ஆணையில் எங்களுக்கும் அழைப்பு இருக்கிறது!'' என்று தொத்துநோய்க் கிழவி பயங்கரமாகப் பேசினாள்.



அதைக் கேட்டதுமே தூதனை அச்சம் ஆட்கொண்டது. அவன் குதிரையைத் திருப்பினான். பின்லாந்துப் பாலத்திற்குப் போகும் பாதையைத் துறந்தான். ஊர் ஊராகப் போய் வீரர்களைத் திரட்டும் பணியை மறந்தான். கடற்கரைக்குச் செல்லும் பாதையில் நேராகக் குதிரையை ஓட்டினான். அலைமோதும் கடல் வந்தது, குதிரையை நிறுத்தினான். சட்டைப் பையிலிருந்து ரகசிய ஆணையை வெளியே எடுத்தான். அதைச் சுக்கல் சுக்கல்களாகக் கிழித்துக் கடலில் வீசி எறிந்தான்.

கடலில் மீன்கள் கூட்டம் கூட்டமாக நீந்திக் கொண்டிருந்தன. ரக்சிய ஆணைச் சுக்கல்களின் மீது மோதியதும், மீன்கள் பயந்து போய், நாலா புறங்களிலும் சிதறி மறைந்தன.

துரத்திக் கொண்டு வந்த ஐவரும் தூதனைச் சூழ்ந்து கொண்டனர். தூதன் தன் கடமையைச் செய்து முடிக்காததால் அவர்களுக்கு ஒரே கோபம். ஐவரும் ஏக காலத்தில் அவன் மீது சீறிப் பாய்ந்தனர்.

கோபமாகக் கரைந்தது காகம்!

கடுமையாகத் தாக்கியது கழுகு!

உக்கிரமாக உறுமித் தள்ளியது ஓநாய்!

"எங்களை ஏமாற்றி விட்டாயே!" என்று குற்றம் சாட்டினாள் 'பஞ்சம்' என்னும் பெண்!

"நீ ஒரு துரோகி!" என்று வைதாள் 'தொத்துநோய்' என்னும் கிழவி!

ஆனால் அவர்களுடைய பேச்சுக்களையும், ஏச்சுக்களையும் தூதன் லட்சியம் செய்யவே இல்லை. குதிரையை வேறு திசையில் திருப்பினான். வேகமாகச் சென்று அடுத்த நாட்டை அடைந்தான்.

மற்றமூன்று திசைகளுக்கும்போன தூதர்கள் வீரர்களைத் திரட்டி வந்தனர். ஆனால் வெற்றி பெறுவதற்கு அந்த வீரர்களின் எண்ணிக்கை போதாது என்று எஸ்தோனிய நாட்டு அரசன் நினைத்தான். ஆகவே, வடக்குத் திசையில் போன அந்தத் தூதனுக்காகவும், அவன் அழைத்துவரப்போகும் பெரிய சேனைக்காகவும் அரசன் காத்துக் காத்துக் கண்கள் பூத்துப் போனான். அந்தத் தூதனும் வரவில்லை. சேனையும் வரவில்லை.

ஆகவே, யுத்தமும் நடைபெறவில்லை!

பொங்கி எழும் சிங்கங்கள் : 7

ஸ்வதந்திரானந்தர்

கங்கா ராமமூர்த்தி

வகுப்பிலே கணிதம் நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் கற்றுக் கொடுக்கும் பொழுது ஒரு மாணவன் குறும்புகள் செய்து கொண்டே இருந்தான். ஆசிரியருக்குக் கோபம் வந்தது.

நேராக மாணவனிடம் வந்து கையை நீட்டச் சொன்னார். பிரம்பினால் ஓங்கி அடித்தார். மூன்று அடிகளைப் பெற்றுக் கொண்ட மாணவன் நாலாவது அடியை ஆசிரியர் அடித்த போது, 'லபக்'கென்று பிரம்பைப் பிடித்துக் கொண்டான்.

எங்கே அவன் தம்மைத் திருப்பி அடித்து விடுவானோ என்று பயந்து ஆசிரியர் ஓடியே போய்விட்டார் வகுப்பறையை விட்டு.

அந்தத் துணிவுள்ள குறும்புக்கார மாணவர்தாம் வெள்ளையரைக் கதி கலங்கச் செய்த சுப்ரமண்ய சிவா ஆவார்.

வளர்ந்து பெரியவர் ஆனதும் உடற்பயிற்சியிலே மிகுந்த அக்கறை கொண்டார். எந்த வேலையுமின்றி இருந்த வேளையிலேதான் நாட்டை உலுக்கிய 1905—ஆம் ஆண்டின் வங்கப் பிரிவினை சிவத்தைக் கவர்ந்தது. அவரது கவனம் தேசிய இயக்கமென்ற திசையிலே சென்றது.

விபினசந்திர பாலரின் வீராவேசமான பேச்சுக்கள் சிவத்தை ஆகர்ஷித்தன. சுப்ரமண்ய சிவா அரசியல் கூட்டங்களுக்குப் போக ஆரம்பித்தார். பத்திரிகைகளையெல்லாம் தவறாமல் படிப்பார். அவருக்கும் அரசியல் பேச்சுக்கள் பேச ரொம்ப ஆவல். தமது சகோதரிக்கும் மற்ற சிறுமிகளுக்கும் தேசிய கீதத்தைச் சொல்லிக் கொடுத்தார். தேசியப் பாடல்களைப் பாடிய படியே சிறுமிகளைக் கும்மியடிக்கச் செய்வார்.

பாவாடை, சித்தாடைகள் ஓரங்களில் "வந்தே மாதரம்" என்று பல வண்ண நூல்களால் பின்னச் செய்து அணியச் சொல்லுவார்.

கால்நடையாகவே நடந்து பல கிராமங்களுக்குச் செல்வார். பொதுமக்களுக்கு நாடு இருக்கும் நிலையை எடுத்துக் கூறி அவர்களின் மனத்திலே உணர்ச்சியை ஊட்டுவார்.

திருநெல்வேலி ஜில்லாவில் சிவத்தின் தேசியப் பிரசாரம் நடந்து கொண்டிருந்த வேளையில், தூத்துக்குடியில் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் கப்பல் ஓட்டிப் புரட்சி செய்தார். இந்தப் புரட்சியைக் கேள்விப் பட்ட சிவம் தூத்துக்குடி நோக்கிப் பயணமானார்.

திரு. பிள்ளையவர்களோடு சுப்ரமண்ய சிவாவும் சேர்ந்து கொண்டு அரசியல் முழக்கமிட்டார். மக்களிடையே 'அன்னியத் துணிகளை அணியாதீர்' என்றார். அவரது அறைகூவலைக் கேட்ட மக்கள் சுதேசித் துணிகளையே அணிந்தனர். தூத்துக்குடி கடற்கரை மணலிலே 'மலை மலையாக' மக்கள் அன்னியத் துணிகளைக் கொண்டு வந்து குவித்தனர். மக்களின் சுதந்திர உணர்ச்சி சிவத்தின் பேச்சாலும், செயலாலும் அதிகரித்தது.

ஆங்கிலக் கல்வியை விடுத்து நாட்டுக் கல்வி கற்க வேண்டும் என்றும் கர்ஜனை செய்தார் சுப்ரமண்ய சிவா. சுதேசி இயக்கம் மக்களிடையே வெகு வேகமாகப் பரவியது.

நெருப்போடு சேர்ந்த காற்று வேகமாகப் பரவுவது போல அரசியல் கூட்டங்களிலே வ. உ. சி. யும், சிவாவும்

அனல் பறக்கப் பேசினார்கள். இவர்களோடு சில சமயம் பாரதியாரும் சென்னையிலிருந்து வந்து சேர்ந்து கொள்வார். பாரதியார் சுப்ரமண்ய சிவாவின் வீர முழக்கங்களையும் தேசியப் பற்றையும் கண்டு 'சிவாஜி' என்று கூறி அணைத்துக் கொள்வார்.

மக்கள் எங்கும் 'வந்தே மாதரம்' என்று கோஷித்தனர். சுதேசித் துணிகளையே அணிந்தனர். ஆங்கிலேய அரசு சிவா, வ. உ. சி. இருவரது செல்வாக்கை அறிந்து நடுங்கியது.

சிவாவை மக்கள் எங்கே கண்டாலும் 'வந்தே மாதரம்' என்ற கோஷமிடுவார்கள். தூத்துக்குடி மில் தொழிலாளர்களும் தலைவர்களை ஆதரித்தனர்.

விபின சந்திரபாலர் வங்காளத்திலே விடுதலைசெய்யப்பட்ட அன்று தூத்துக்குடியிலே இந்த இரு தலைவர்களும் ஆர்ப்பாட்டம் செய்வார்கள் என்று ஆங்கில அரசு எதிர்பார்த்தது. எனவே, சுப்ரமண்ய சிவாவும், வ. உ. சி.யும் கடற்கரையில் தொழிலாளர் கூட்டத்திலே பேச வரும் பொழுது அதிகாரிகள் கைது செய்தனர்.

மக்கள் சும்மா இருப்பார்களா? இதைவன்மையாகக்கண்டிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் கடைகளை மூடினார்கள். தொழிலாளர்களோ வேலை நிறுத்தம் செய்தார்கள்.

அதிகாரிகள், தூத்துக்குடியில் அரசியல், மதச்சார்புக் கூட்டங்கள் போடக்கூடாது என்று தடை விதித்தார்கள்.

மக்கள் அதற்கு எதிராக, விபின சந்திர பாலரின் படத்தை எடுத்துக் கொண்டு உற்சாகமாக வந்தேமாதர முழக்கமிட்டுக் கொண்டு சென்றார்கள். எவ்வளவு தடை போட்டாலும், எத்தனை பேரைச் சிறையில் தள்ளினாலும் கூட்டம் கூட்டியே தீருவது என்று உறுதி பூண்டனர்.

திருநெல்வேலியில் ஹிந்து காலேஜில் ஒரு பேராசிரியர் கல்லூரியை மூடச் சொன்னார். பிரின்ஸிபால் ஆங்கிலேயர். அவர் ஒரு தேசாபிமானிக்காகக் கல்லூரியை மூடச் சம்மதிக்கவில்லை. பேராசிரியர் வகுப்பிற்குச்



சென்று, மாணவர்களே, இன்று நமக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டது. இன்று கல்லூரி விடுமுறை'' என்று அறிவித்தார். உடனே மாணவர்களும் தலைவர்களை விடுதலை செய்யும் கிளர்ச்சிக் கூட்டத்துக்குப் போனார்கள். இப்படி எங்கு நோக்கினும் வ. உ. சிதம்பரம் பிள்ளையும், சுப்ரமண்ய சிவாவும் பற்ற வைத்த சுதந்திரக் கனல் மூண்டெழுந்தது. மக்கள் எல்லோரும் ஒரே குரலில் 'வந்தே மாதரம்' என்று முழங்கினார்கள். தேசத்தைக் காப்பதற்காக எத்தனையோ நிரபராதிகள் தங்கள் உயிரைத் தியாகம் செய்தார்கள்; சிறை சென்றார்கள்; செக்கிழுத்தார்கள்.

சிவாவின் மேல் வழக்கு நடந்தது. தேசத்தை நேசித்த அந்த வீரருக்குப் பத்தாண்டு கடுங்காவல் தண்டனை அளித்தது ஆங்கில அரசு. பின்பு அது ஆறு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. கம்பளி மயிர் வெட்டினார்; கல்லுடைத்தார்; மாவரைத்தார். உழைத்து, உழைத்து, உடல் மெலிந்து வியாதி பற்றியது சிவாவை.


தண்டனைக் காலம் முடிந்ததும் சென்னையிலே தங்கினார் சிவம். 'ஞானபானு' என்ற பத்திரிகை மூலம் பல பெரியவர்களின் கட்டுரைகளை வெளியிட்டு அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். சிறு வயது முதலே வேதாந்தத்தில் ஈடுபட்டவர் சிவம். அவர் முப்பதுக்கும் மேற்பட்ட வேத நூல்களும், சரித்திர நூல்களும் எழுதினார். ஒரு வாரப் பத்திரிகை துவக்கினார்.

1921—ல் சுப்ரமண்ய சிவா 'ஸ்வதந்திரானந்தர்' என்ற பெயர் தரித்த சன்யாசியானார். ஆனாலும், அவர் அரசியலை விடவில்லை. இந்தியாவில், ஒரே ஜாதியாக, பாரத ஜாதிதான் இருக்க வேண்டும் என்றார். ஒரே தெய்வம் பாரததேவிதான் என்றார்.

பாப்பாரப்பட்டி என்ற ஊரிலே ஸ்ரீபாரதபுரம்' என்று ஒரிடத்துக்குப் பெயர் சூட்டினார். பாரததேவிக்குக் கோவில் கட்டவும் நினைத்துப் பல திட்டங்கள் தீட்டினார்.

ஆங்கிலேய அரசு அவரைப் பல விதமான வழிகளிலே கட்டிப் போட்டது. அவர் ரயில் ஏறி மற்றோர் இடத்திற்குச் செல்லக் கூடாது என்று தடை விதித்தார்கள். சிவம் இதற்கா பயப்படுவார்? அஞ்சவே மாட்டார். கைது செய்தால் செய்யட்டும் என்று ஊர் ஊராகச் செல்வார். மக்களோடு பேசுவார். அரசியல் உணர்ச்சி பொங்கக் கூட்டங்களில் பேசுவார்.

ஓய்வில்லாத அந்தப் பெரும் உழைப்பாளர் தமது 41—ஆம் வயதிலே பூரண ஓய்வு பெற்றார். நாட்டு நலனே தம் நலமாகக் கொண்ட சுப்ரமண்ய சிவா பிறந்து இப்போது நூறாண்டுகள் ஆகிறது. வாழும் காலம் சிறிதெனினும் வாழ்ந்த விதம் பெரிது என நாம் நினைத்துப் போற்றும் வகையில் வாழ்ந்தவர் தியாகி சிவம் ஆவார்.



பூதத்தீவு

ஜே.எம்.சாலி

இந்திர காஞ்சனபுரி இளவரசன் ஷா ஆசம் ஒரு முடிவுக்கு வந்திருந்தான். அரண்மனை வாழ்க்கை அவனுக்குப் பிடிக்கவில்லை. அறிஞனாகப் பெயர் எடுக்க வேண்டும் என்பதே அவன் ஆசை. பல நாடுகளுக்குச் சென்று கல்விமான்களைச் சந்தித்து அறிவைப்பெருக்கிக்கொள்ளவேண்டும் என்பதே அவன் செய்த முடிவு.

அரசனாக விளங்கிய தன் அண்ணனிடம் சென்று தன் பயணத்திற்கு அனுமதி கேட்டான்.

தம்பியைப்பிரிய அரசனுக்குமனம் இல்லை. என்றாலும் அறிஞனாகத்துடிக்கும் தன் தம்பியின் ஆசைக்குத் தடை போட அரசன் விரும்பவில்லை.

மறுநாள் பயணம் புறப்பட அனுமதி கிடைத்தது.

பத்திரமாகத் தேச சஞ்சாரம் செய்துவிட்டு விரைவிலேயே நாடு திரும்பும்படி அரசன் கேட்டுக்கொண்டான்.

அடுத்த நாள் காலையில் இளவரசனின் நண்பர்களும் உறவினர்களும் படகுத் துறையில் திரண்டிருந்தனர். அங்கிருந்துதான் ஷா ஆசம் புறப்பட வேண்டும்.

''இளவரசரே, தாங்கள் செல்லும் இடத்தை நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?'' என்று நண்பர்கள் ஆவலோடு கேட்டார்கள்.

''தொலை தூரத்தில் ஏரி இருக்கிறது. அந்த ஏரியின் நடுவில் உள்ள தீவில் கல்விமான் ஒருவர் இருக்கிறார். அவரிடம் கொஞ்ச நாள் சீடனாக இருந்து கல்வி கற்கப் போகிறேன்'' என்றான் இளவரசன்.

சற்று நேரத்தில் ஆற்றுப் படகுத் துறையிலிருந்து இளவரசன் தனியே படகில் புறப்பட்டுச் சென்றான்.

பல நாள் பயணத்திற்குப் பிறகு ஷா ஆசம் ஏரித் தீவுக்கு வந்து சேர்ந்தான். அவன் கரையில் இறங்கிய போது மிகப் பெரிய சுறுமீன் அங்கு ஒதுங்கிக் கிடப்பதைக் கண்டான். அலையினால் ஒதுக்கப்பட்டிருந்த அந்தச் சுறுமீனின் நிலை பரிதாபமாக இருந்தது. தண்ணீருக்குத் திரும்பாவிட்டால் அது கரையிலேயே மடிந்து போக வேண்டியதுதான்.

இளவரசன் ஷா ஆசம் அந்தச் சுறுமீனைக் காப்பாற்ற முன்வந்தான். அதன் வாலில் கயிற்றைக் கட்டி ஏரியில் இழுத்துத் தள்ளினான். அப்பொழுது ஆச்சரியம் அவனுக்குக் காத்திருந்தது.

சுறு மீன் பேசியது.

''என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி... இதோ என் வாயிலுள்ள முத்தை என் அன்பளிப்பாக எடுத்துக் கொள்....'' என்றது.

இளவரசனுக்கு வியப்பு. சுறுமீனின் வாயில் மிகப் பெரிய முத்து காணப்பட்டது.

''இது சாதாரண முத்து அல்ல. ஆபத்தான நேரத்தில் இதை நீ தேய்த்தால் நான் உதவிக்கு வருவேன்!'' என்று கூறிவிட்டு நீரில் மறைந்துவிட்டது சுறுமீன்.

ஷா ஆசம்தன் படகைக்கரையோரமாக அணைய வைத்துவிட்டுத் தீவில் நடந்தான். பல கல் தூரம் நடந்த பிறகு மாளிகை போன்ற ஒரு பெரிய வீடு தெரிந்தது. சூரிய வெளிச்சத்தில் தங்க மாளிகையாக அது தகதகத்து மின்னியது. மனிதர்களால் அது போன்ற வீட்டைக் கட்ட முடியாது. பூதம்தான் கட்டியிருக்க வேண்டும் என்று இளவரசன் நினைத்தான்.

வழியில் ஒரு மரம் விழுந்து கிடந்தது. அதை அப்புறப்படுத்த இளவரசன் நினைத்தான். அப்பொழுது ஓர்

இடிச் சிரிப்புக் கேட்டது.

''இங்கே என்ன செய்கிறாய்? நீ யார்?'' என்ற குரல் அதிர்ந்தது. அது பூதத்தின் குரல்தான் என்பது இளவரசனுக்குப் புரிந்து விட்டது.

''ஐயா, உங்களுக்குப் பணிபுரியவே நான் இந்தத் தீவுக்கு வந்திருக்கிறேன்!'' என்று அவன் பதில் அளித்தான்.

பூதம் சிரித்தது. ''நல்லது. உனக்கு நான் வேலை தருகிறேன். இப்பொழுது நான் வெளியே கிளம்பிக் கொண்டிருக்கிறேன். நான் திரும்புவதற்குள் வீட்டு முகப்பைக் கூட்டிச் சுத்தப் படுத்தி வை. ஆனால், நீ வீட்டினுள் நுழையக்கூடாது!'' என்றுகூறிவிட்டுக் கிளம்பி விட்டது.

பூதம் புறப்பட்டுப் போனதும் இளவரசன் வீட்டிற்குள் நுழைந்தான். அவனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. எங்கு பார்த்தாலும் தங்கமும் வெள்ளியும் குவிந்து கிடந்தன. ஒவ்வொரு அறையையும் சுற்றிப் பார்த்து மலைத்துப் போனவன், சமையல் அறைக்கு அருகில் வந்தான்.

அங்கே ஓர் அழகி அமர்ந்திருந்தாள். அருகில் வந்தான் ஷா ஆசம். அந்தப் பெண் தங்கத்தை உருக்கிக் காசு தயாரித்துக் கொண்டிருந்தாள்.

''பெண்ணே, நீ யார்?'' என்று அவன் கேட்டான்.

அவள் வியப்போடு திரும்பிப் பார்த்தாள்.

அவன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதை அந்தப் பெண் உணர்ந்து கொண்டாள்.

''நான் ஓர் இளவரசி. என் பெயர் மெலோர் திவான். ஏரிக்கு அப்பால் எங்கள் நாடு இருக்கிறது. தோழிகளுடன் ஏரிக்கரைக்கு ஒருநாள் விளையாட வந்தேன். அப்பொழுது இந்தப் பூதம் என்னைத் தூக்கி வந்து விட்டது!'' என்று சொன்னாள். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

''உன் தோழிகள் என்னவானார்கள்?'' என்றான் இளவரசன்.

''அவ்வளவு பேரையும் இந்தப் பூதம் விழுங்கி விட்டது. நான் மட்டும் தான் மீதி...''

''கவலைப்பட வேண்டாம் இளவரசி. இங்கிருந்து தப்பிச்சென்றுவிட



லாம். இப்பொழுதே புறப்படலாம் என்று அவசரப்படுத்தினான் ஷா ஆசம்.

"அது முடியாத காரியம். நாம் ஓடிப் போனாலும் பூதம் பின்னால் வந்து பிடித்துவிடும். சுற்றுப்புறத்தில் நடப்பதெல்லாம் அதற்குத் தெரியும். ஆனால் ஒரு வழி மட்டும் இருக்கிறது. அது தூங்கும் நேரத்தில் மட்டும் நடப்பது அதற்குத் தெரியாது. அப்போது நாம் கிளம்பி விடலாம்!"

இளவரசி மெலோரின் யோசனையை அவன் ஏற்றுக் கொண்டான். பூதம் சொன்னபடி மாளிகை வாசலைக் கூட்டிச் சுத்தப்படுத்தச் சென்றான்.

"உங்களால் கூட்டிச் சுத்தம் செய்ய முடியாது. இது மர்மமான இடம். அதனால் வார்க்கோலை தலைகீழாகத் திருப்பிக் கூட்டினால்தான் இடம் சுத்தமடையும்..." என்று இளவரசி சொன்னாள்.

ஷா ஆசம் அப்படியே செய்யத் தூசியும் குப்பையும் அகன்றுவிட்டன.

அதற்குப் பிறகு இருவரும் பூதத்திடமிருந்து தப்பிச் செல்லும் திட்டத்தை விவாதித்தார்கள். அன்றிரவு பூதம் உறங்கும் போது இரண்டு குதிரைகளில் புறப்படலாம் என்பது அவர்கள் திட்டம். மாளிகைக்குப் பின்னால் இருந்த குதிரை லாயத்தையும் இளவரசி காட்டினாள்.

இருவரும் பேசிக் கொண்டிருந்த சமயம் பூதம் திரும்பி வரும் சத்தம் கேட்டது. சந்தடியில்லாமல் விலகிக் கொண்டார்கள். பூதம் சின்னஞ்சிறு யானைக் குட்டியைக் கொண்டு வந்தது. மாளிகை வாசல் துப்புரவாக இருந்ததைப் பார்த்த பூதம் இளவரசனைப் பார்த்துச் சிரித்தது.

"நன்றாக வேலை பார்த்திருக்கிறாய்.. நல்ல புத்திசாலிதான் நீ... நாளைக்கு வேறுவிதமான வேலை தரப் போகிறேன்," என்றது.

குதிரை லாயத்தில் அவனைத் தங்கச் சொல்லிவிட்டு யானைக்குட்டிக் கறி சமைப்பதற்காகப் பூதம் அடுக்களைக்கு அதைக் கொண்டு சென்றது.

நள்ளிரவு. அமைதியான நேரம். இளவரசி மெலோர் சத்தமில்லாமல் எழுந்து வந்தாள். ஷா ஆசம் தயாராகக் காத்திருந்தான்.

இருவரும் இரண்டு குதிரைகளில் ஏறி அமர்ந்தார்கள் வெகுவேகமாக அங்கிருந்து புறப்பட்டார்கள்.

விடியும் நேரத்தில் **ஏரிக் கரைக்கு** வந்து சேர்ந்தனர். தன் படகைக் கண்டு பிடித்தான் இளவரசன். அதில் அமர்ந்து கொள்ளச் சொன்னான், மெலோர் இளவரசியை.

விரைவாகப் படகைச் செலுத்தினான் ஷா ஆசம்.

ஆனால் ஆபத்து நெருங்கி வந்தது. பூதம் அவர்கள் தப்பிச் செல்வதை அறிந்து வெகுவேகமாகப் பின் தொடர்ந்து வந்தது.

ஏரிக்கரைக்கு வந்ததும் ஒரு பெரிய பாறையை எடுத்துப் படகை நோக்கி வீசியது. நல்லவேளை, அது படகில் விழவில்லை. பூதம் ஏரியில் பாய்ந்து ஆவேசத்தோடு நீச்சலடித்தது. அப்பொழுது அந்த ஏரியே கொந்தளித்தது. படகு கவிழ்ந்து விடுமோ என்று இருவரும் அஞ்சினார்கள்.

எப்படித் தப்புவது என்பது புரியாமல் ஷா ஆசம் தவித்தான். திடீரென்று அவனுக்கு யோசனை வந்தது. சக்தி வாய்ந்த முத்து இருப்பதை நினைத்துக் கொண்டான். அடுத்த வினாடியே அதை எடுத்துத் தேய்த்தான்.


உடனே கொந்தளிப்பு தணிந்து படகு நிலைக்கு வந்தது. சுறாமீன் அங்கே தோன்றியது. பூதத்திடமிருந்து காப்பாற்றும்படி அதைக் கேட்டுக்கொண்டான் இளவரசன்.

சுறாமீன் ஒருமுறை துள்ளிப் பாய்ந்தது. அவ்வளவுதான். பூதம் அதன் வாயில் இருந்தது. சிறிதுநேரத்தில் பூதம் போன இடம் தெரியவில்லை. அதை விழுங்கிவிட்டது சுறாமீன்.

தன்னைச் சமயத்தில் காப்பாற்றிய சுறாமீனுக்கு ஷா ஆசம் நன்றி சொன்னான். அவனும், இளவரசியும் மறுபடி பூதத்தின் மாளிகைக்கு வந்து பொன்னையும், பொருளையும் எடுத்துக் கொண்டு இந்திர காஞ்சனபுரிக்குப் புறப்பட்டார்கள்.

நாடு திரும்பிய தம்பியையும், பக்கத்து நாட்டு இளவரசியையும் வரவேற்ற அரசன், அவர்களின் திருமணத்தையும் நடத்தி வைத்தான்.

—இது ஒரு மலேசியக் கதை.



டல்

''இட்லி தோசை எல்லாம் நல்லாவே இல்லேடா. இந்த ஹோட்டல்லே.''

''அதான் கூட்டமே இல்லே. ஹோட்'டல்'லா இருக்குடா!''

கருத்தும் படமும்: கீதா



கம்பம்

பூகம்பத்திலே என்ன ஆச்சு தெரியுமா ''

''கம்ப'ங்கள் இடிந்து விழுந் திருக்கும்!''

டல், கம்பம், கை, பாய்

கை

''கையைத் தூக்கவே முடிய லேடா. என்னன்னே தெரிய லேடா?!'',

'' 'வேடிக்'கை' யாயிருக்கே!'



பாய்

''பம்பாய்லே நான் எதுலே படுத்து உறங்குவேன் தெரியு முங்களா !''

''தெரியுமுங்க. 'பா யி' லே படுத்து உறங்கியிருப்பீங்க!!





-செல்லூர் கணேசன்-

ரஷ்யாவின் புகழ்பெற்ற சக்கரவர்த்தியான மகா பீட்டரின் அவையில் பாலகிரெய் என்ற விகடகவி ஒருவன் இருந்தான். அவனுடைய வேடிக்கையையும் விவேகத்தையும் கண்ட மன்னர் அவனிடம் மிகவும் அன்புடன் இருந்தார்.

ஒருமுறை பாலகிரெய் சக்கரவர்த்தியிடம் சென்று, தான் அரண்மனையின் காவற்படையில் ஒரு சிப்பாயாகச் சேர விரும்புவதாகத் தெரிவித்தான். இதில் ஏதோ வேடிக்கை இருக்கிறது என்று எண்ணிச் சக்கரவர்த்தி அதற்கு அனுமதி கொடுத்தார். அப்போது அவர், "பாலா! காவல் வேலை மிகவும் பொறுப்பானது. குறித்த இடத்தில் நிற்காமல் போனாலும், உன்னிடம் இப்போது ஒப்படைக்கும் உடைவாளை நீ பறிகொடுத்தாலும் உனக்கு மரண தண்டனை விதிக்கப்படும்!" என்று எச்சரித்தார். பாலன் தன்னால் முடிந்தவரை முறையாகக் காவல் காப்பதாக உறுதி சொல்லி, வேலையை மேற்கொண்டான்.

அன்றிரவு பீட்டர் தமது விகடகவியின் வீட்டிற்கு உயர்ந்த திராட்சை மதுப் புட்டிகளை ஏராளமாக அனுப்பி வைத்தார். அவன் தான் புதுப் பதவி பெற்றதற்காகப் பரிசுகளாக அனுப்பப்பட்டவை என்று நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். ஒரு புட்டியைத் திறந்து மதுவைக் குடித்தான். அதன் சுவை அவனை மேலும் மேலும் குடிக்கவைத்தது. சிலபுட்டிகளை உடைத்துக் குடித்துவிட்டு, அரண்மனைக்காவலுக்கும் சென்றான். அங்கே அவன் சென்றதும் மதுவின் மயக்கம் அவனை ஆட்கொண்டுவிட்டது. போதை அதிகமானதால் ஓர் அறையில் படுத்தவன், அப்படியே தூங்கி விட்டான்.

அவன் நன்றாக உறங்கும் நேரம் பார்த்து, அந்த அறைக்குச் சென்ற மன்னர், அவனுடைய உடைவாளை உறையிலிருந்து உருவி எடுத்துக் கொண்டு போய்விட்டார்.

மறுநாள் காலையில் கண்விழித்த பாலா, வாளின் உறையைக் கவனித்தான். உறை காலியாக இருந்தது. வாளைச் சுற்றும் முற்றும் தேடினான். கிடைக்கவில்லை. மனம் மிகவும் பதை

பதைத்தது. இதன் விளைவு என்னவாகும் என்று எண்ணியதும் அவன் உள்ளம் கலங்கியது.


காவல் சிப்பாய்கள் களத்தில் கூடி அணிவகுத்து நிற்கும் நேரமும் நெருங்கிவிட்டது. என்ன செய்வது என்று அறியாமல் திகைப்புடன் நின்று கொண்டிருந்த பாலவுக்குத் திடீரென ஒரு யோசனை தோன்றியது. ஆஸ்தான விகடகவியாக இருந்ததால், அவனுக்கு அந்தப் பதவிக்குரிய மரப்பட்டையால் செய்த உடைவாள் ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வாள்தான் மரமே தவிர அதன் பிடியெல்லாம் மற்ற வீரர்களின் வாளைப் போல் அமைந்திருக்கும். பார்க்கும் போது வித்தியாசமே தெரியாது! அந்த மர வாளை உறையில் போட்டுக் கொண்டு, அவசர அவசரமாக அணிவகுப்பில்போய்நின்றான். உறைக்குள் இருக்கும்வாளை எவரும்பார்க்கமாட்டார்கள் என்பது அவன் நினைவு.

சிறிதுநேரத்தில் சக்கரவர்த்தி அணி வகுப்பைக் காண அங்கு வந்தார். வரிசையாக ஒவ்வொரு சிப்பாயாக அவர் கவனித்து வரும்போது, ஒரு சிப்பாய் அசுத்தமான ஆடையுடன் பாமரனைப் போல் நின்று கொண்டிருப்பதைக் கண்டார். உடனே அணிவகுப்பில் நின்றுகொண்டிருந்த பாலகிரெய்யை அழைத்து, "உன் வாளால் இவனை வெட்டித் தள்ளு!" என்று ஆணையிட்டார்.


உடனே பால, தன் வாளின் பிடியை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, "தெய்வமே! என்னோடு சேர்ந்த ஒரு தோழனை வதைக்கவா என் வாள் பயன்பட வேண்டும்? அப்படி நேராதபடி என் வாளை மரப்பட்டையாக நீதான் மாற்ற வேண்டும், ஆண்டவனே!" என்று உரக்கக் கூவிக் கொண்டே தன் வாளை வெளியே உருவினான். மரவாளைக் கண்டதும், அங்கிருந்த சிப்பாய்களும், அதிகாரிகளும், சக்கரவர்த்தி இருப்பதைக் கூடப் பொருட்படுத்தாமல் வாய்விட்டுச் சிரித்தனர். மன்னருக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

மன்னர், பாலகிரெய்க்கு மரண தண்டனை விதிக்காமல், மன்னித்துவிட்டார். "எனக்கு இனிமேல் பட்டாள வேலை ஒத்து வராது. எப்போதும் போல விகடகவியாகவே இருக்கிறேன்" என்று அவன் மன்னனிடம் வேண்டினான். மன்னரும் அதை ஏற்றுக் கொண்டார்.

ஓவியமாகலாம்



பிருந்தாவனம்



எத்தனை இட்லி?

"காலியான வயிற்றிலே உன்னாலே எத்தனை இட்லி தின்ன முடியும்?"

"ஆறு இட்லி."

"உன்னாலே முடியாது."

"ஏன்?"

"ஒரு இட்லி வயிற்றுக்குள்ளே போனதும், வயிறு அப்புறம் காலியாக இருக்காதே!"

சி. ஷீத்தல் (69), பம்பாய்—71.

காலை உணவு

காலை உணவை ஆங்கிலத்தில் **Break-fast** என்கிறோம். இதற்கு இப்பெயர் வரக் காரணம்?

இரவு உணவிற்குப் பிறகு நீண்ட நேரம் அதாவது காலை வரை உண்ணாமல் இருக்கிறோம். அதை முறிக்கக் காலை உணவை உட்கொள்ளுகிறோம்.

Fast = உண்ணாமலிருப்பது;
Break = முறித்தல்.

—த. அருள்சிவபாலன் (47), செங்கல்பட்டு.



ஊர்களைக் கண்டுபிடியுங்கள்

கீழே சில ஊர்ப் பெயர்களைக் கண்டுபிடிக்க, ஒவ்வொரு ஊரின் பெயரையும் குறிக்கும் இரு குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை வைத்து ஊர்களைக் கண்டுபிடியுங்கள்:

1. ஒரு நிறம் — உயரமானது
2. சாப்பாட்டுக்கு உதவுவது — பாதுகாப்புக்குத் தேவையானது
3. ஒரு கடவுளின் பெயர் — வட இந்தியாவில் உள்ள ஒரு நதி
4. ஒரு திசை — ஒரு யாத்திரை ஸ்தலம்
5. ஒரு மிருகம் — ஆற்றின் ஒரு பகுதி
6. ஒரு ஜாதியார் — இது இல்லாத ஊர் உண்டா?



விடை: 1. நீலகிரி, 2. நெய்வேலி, 3. சிவகங்கை, 4. தென்காசி, 5. ஆடுதுறை, 6. நாகர் கோயில்.

—கே. முரளி (3405), சென்னை—45.



நெடுநாள் வடை!

கல்லூரி வகுப்பு ஒன்றின் கரும்பலகையில் 'நெடுநல் வாடை' என்ற தமிழ் நூலின் பெயரை 'Nedunal Vadai' என்று பேராசிரியர் ஆங்கிலத்தில் எழுதினார். பிறகு, ஒரு மாணவனிடம் அதைப் படிக்கும்படி கூறினார். மாணவன் படித்தான்; எப்படி?


'நெடுநாள் வடை.'


—இரா. சுந்தர் (644), விக்கிரவாண்டியம்.

எத்தனை மாணவர்கள்?

வரிசைக்கு 5 பேர் வீதம் 6 வரிசைகளில் மாணவர்களை நிற்க வைத்தால், மொத்தம் எத்தனை மாணவர்கள் நிற்பார்கள்? 5 X 6 = 30 என்று தானே நினைப்பீர்கள்? இல்லை; 24 தான் சரியான விடை. கீழே பாருங்கள், தெரியும்.

—ஏ. அந்தோணிராஜன் (8060), கோவை—9.





யானையும் எறும்பும்

ஒரு யானையும், அதன் முதுகில் ஏறியிருந்த ஓர் எறும்பும் ஒரு மரப்பாலத்தின் மூலம் ஆற்றைக் கடந்தன. மறு கரைக்குப் போய்ச் சேர்ந்ததும், எறும்பு சொன்னது:

"அப்பாடா! இந்தப் பாலம் எவ்வளவு மோசமாயிருக்கிறது! இதன் நடு மத்தியில் நாம் வரும்போது, அது நம் இருவருடைய பாரத்தையும் தாங்க முடியாமல், எப்படி வளைந்தது, எப்படி ஆடியது! கவனித்தாயா?"

—இ. திருநாவுக்கரசு (7522), திருநெல்வேலி—6.

பல நாட்டுப் பழமொழிகள்

* அற்பப் பொருளுக்கும் மதிப்பு உண்டு; சிறு ஊசிதான் தையற்காரருக்கு உணவு அளிக்கிறது.
—ஜெர்மன் பழமொழி.
* கூடாரங்களைத் தனித்தனியாக அமையுங்கள். ஆனால், இதயங்கள் சேர்ந்து கிடக்கட்டும்.
—அரேபியப் பழமொழி.
* இளமையில் ரோஜா மலர்கள் மீது படுக்க விரும்பினால், முதுமையில் நீங்கள் முட்களின் மீது படுக்க வேண்டி வரும்.
—இங்கிலாந்துப் பழமொழி.
* கீழே விழுந்தவனைப் பார்த்துச் சிரிக்காதீர்கள். உங்கள் வாழ்க்கைப் பாதையும் வழுக்கல் நிறைந்தவைதான்.
—ஜப்பானியப் பழமொழி.

தொகுப்பு : ஸ்ரீலட்சுமிதேவி (6022), சென்னை—19.





எழுத்தில் தாத்தா!

மேலே உள்ள தாத்தாவின் தலையில் பல தமிழ் எழுத்துக்கள் இருக்கின்றன. அந்த எழுத்துக்களை ஒன்று சேர்த்தால் ஒரு வார்த்தை உருவாகும். அந்த வார்த்தை என்ன?

விடை: அம்பி பயல்


—ஆர். பாஸ்கரன் (882), பெருமகளூர்.

உதவி எப்படி?

ஆற்றுக்குள் தவறி விழுந்தவர்: ஐயோ! எனக்கு நீச்சல் தெரியாதே! நீச்சல் தெரியாதே!

கரையில் இருப்பவர்: ஏண்டா இப்படிக் கத்தறே! எனக்குக் கூடத்தான் நீச்சல் தெரியாது. நான் உன் மாதிரி கத்திக்கிட்டா இருக்கேன்?

—இரா. ஸ்ரீதரன் (7894), அந்தியூர்.



கடைசியில் 'தி'

கீழே சில குறிப்புக்கள் உள்ளன. ஒவ்வொரு குறிப்புக்கும் ஒரு விடை கூற வேண்டும். அந்த விடையின் கடைசியில் 'தி' என்ற எழுத்து வர வேண்டும்:

1. நாம் கடவுளிடம் காட்டுவது
2. இந்திய நதிகளில் ஒன்று
3. 'மோட்சம்' — இப்படியும் அழைக்கலாம்.
4. இது இருந்தால்தான் நாம் இயங்க முடியும்.
5. அனுமனின் மறுபெயர்



6. மழையினால் சில இடங்கள் இதுவாகிவிடும்.
7. இதற்கு 'வேகமாக' என்ற பொருளும் உண்டு.

விடை: 1. பக்தி, 2. தபதி, 3. முக்தி, 4. சக்தி, 5. மாருதி, 6. சகதி, 7. சடுதி.

—எம். சிவகுமார் (7158), மதுரை—6.

என்னைக் கவர்ந்தது

19.10.84 அன்று சாலையில் சென்ற பொழுது ஒரு லாரியின் பின்னால் கீழ்க்கண்ட வாசகம் இருந்தது.

Don't sit like a Rock;
But, work as a Clock.



(தமிழில்): பாறை போல உட்கார்ந்திருக்காதே. கடிகாரம் போல வேலை செய்.

இந்த வாசகம் என்னை மிகவும் கவர்ந்தது.

—தி. கிருஷ்ணகுமார் (6662), கோவை—1.



அடுக்குங்கள்; பார்க்கலாம்

பாரதியாரை அவருடைய தந்தை "என்னடா விழிக்கிறாய்?" என்று கேட்டதும், பாரதியார் விழி, பழி, குழி, வழி, பிழி என்று மனத்திற்குள் அடுக்கிக் கொண்டே போனாராம். உங்களில் எத்தனை பேரால் அப்படி அடுக்க முடியும்? கீழே சில சொற்கள் இருக்கின்றன. குறைந்தது 5 சொற்களால் அடுக்குங்கள்; பார்க்கலாம்:

1. நெல் . . . .
2. காசி . . . .
3. கால் . . . .
4. நாய் . . . .
5. பருப்பு . . . .
6. நிலம் . . . .

விடை:

1. புல், கல், சொல், வில், பல்.
2. மாசி, பாசி, நாசி, வாசி, ஊசி
3. பால், வால், நூல், வேல், தோல்
4. வாய், பாய், காய், தாய், சேய்.
5. நெருப்பு, செருப்பு, கறுப்பு, வெறுப்பு, மறுப்பு.
6. பாலம், காலம், ஏலம், சூலம், ஓலம்.

—எஸ். பாலாஜி (5838), சென்னை—4.



என்ன வயது?

"உங்கள் வயது என்ன?" என்று ஒருவரைக் கேட்க, அவர், "மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் ஆகும் என் வயதை மூன்றால் பெருக்க வேண்டும். பிறகு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்த என் வயதையும் மூன்றால் பெருக்க வேண்டும். முன்பு பெருக்கிய போது வந்த வயதிலிருந்து பின்பு பெருக்கிய போது வந்த வயதைக் கழித்தால், அதுதான் என் வயது" என்றார். அப்படியானால், அவர் வயது என்ன?

விடை: 18.

—இ. அபிராமி (6957), வேலூர்—632001.

கோயிலுக்கு வாசல்

என் 3 வயதுத் தங்கை மணலில் கோயில் கட்டி விளையாடிக் கொண்டிருந்தாள். கோயிலுக்கு வாசல் வைக்க மறந்துவிட்ட அவள், எல்லோரையும் சாமி கும்பிட வருமாறு அழைத்தாள். அப்பா வேலையாக இருந்ததால், தாமதமாக வந்தார். "என்ன இது, கோயிலுக்கு வாசலே இல்லையே! எப்படி உள்ளே போவது?" என்று வேடிக்கையாகக் கேட்டார் அப்பா. உடனே என் தங்கை "நீங்கள் இவ்வளவு தாமதமாக வருகிறீர்களே! நேரமாகி விட்டதால் கோயிலை மூடி விட்டார்கள். அதற்கு நான் என்ன செய்வேன்?" என்று போட்டாளே ஒரு போடு, நாங்கள் அசந்து விட்டோம்.

—ஹ. பிரசித்கன்னா (8507), பட்டுக்கோட்டை.



ஒரு பூனை புலியாகிறது!



டாக்டர் பூவண்ணன்

6

வேலூர் வள்ளல்கள்

ஜாக்கி தன் வீட்டுக்குள் சென்று தொலைபேசியில் சென்னையில் உள்ள அவனுடைய கூட்டத்தாரோடு தொடர்பு கொண்டு பேசிக் கொண்டிருக்கும் போதும் அவன் மனம், 'சேரன் எங்கே?' என்று கேட்டுக் கொண்டிருந்தது.

அப்போது அவனுக்கு அருகே, இருபது மீட்டர் தூரத்தில் சேரன் இருந்தான் என்பதை அறிந்தால் அதிர்ந்து போவான். காவேரி மின் நகரிலிருந்து அவன் வேலூரை அடையும்வரை சேரன் அவனுக்கு இரண்டு மீட்டர் தூரத்தில்தான் இருந்தான் என்பதை அறிந்தால் மூர்ச்சையாகிவிடுவான்.

சேரனை இப்போது நாம் சந்திக்கலாம்.

கோட்டைப் பிள்ளையார் கோவில் தெரு சென்று சேரும் சாலையில் ஜாக்கியின் வெள்ளை அம்பாசிடர் கார் நின்றிருந்தது. சாலையில் ஆள் நடமாட்டமே இல்லை. அம்பாசிடர் காரின் பின்னேயுள்ள டிக்கி மெல்லத் திறந்தது. டிக்கிக்குள் சேரன் இருந்தான். அவன் நாயும் இருந்தது.

சேரன் பார்வையைச் சுழற்றினான். பார்வை படிந்த வரையில் யாரும் தென்படவில்லை. அவன் மெதுவாகக் காரிலிருந்து இறங்கினான். டாலரையும் இறக்கிவிட்டான். பிறகு டிக்கியின் கதவை மூடினான். நின்ற நிலையில் சேரன் கலங்கரை விளக்குப் போலத் தன்னைச் சுற்றிப் பார்த்துக் கொண்டான். யாரும் கண்ணில் படவில்லை.

'ஜாக்கி நம்மைப் பார்ப்பதற்குள் இங்கிருந்து போய்விட வேண்டும்' என்று நினைத்தான். ஜாக்கி எந்த வீட்டில் நுழைந்தான் என்பது அவனுக்குத் தெரியாது. அதனால் அம்பாசிடர் வந்த வழியே நடந்தான். டாலரும் அமைதியாக அவனைப் பின் தொடர்ந்தது. சிறிதுநேரத்தில் ஒரு சாலை குறுக்கிட்டது. அதைக் குறுக்கே கடந்து எதிரே தெரிந்த குறுகலான சந்திலே நடந்தான். அங்கே எந்த வீட்டுக்கும் திண்ணை இல்லை. சட்டென்று ஒரு வீட்டின் முன் நின்றான். அது ஒரு ஓட்டு வீடு. அதிலே இரண்டு முழம் அகலத்தில் ஒரு திண்ணை இருந்தது. சேரன் அந்தத் திண்ணையில் ஏறிப் படுத்துக் கொண்டான். டாலரும் அவன் அருகே படுத்துக் கொண்டது. சேரன், 'டாலர்! இதுவரை சத்தம் போடாம இருந்தே. இப்பவும் சத்தம் போடாமத் தூங்கு' என்று கூறினான். டாலரை ஒரு கையால் தழுவிக் கொண்டே அவன் தூங்கினான்.

சேரன் எப்படிக் காருக்கு வந்தான்?

டாலரைத் தூக்கிக் கொண்டு, கரும்புத் தோட்டத்தில் நுழைந்து கொஞ்ச தூரம் ஓடினான், சேரன் அங்கே, தோட்டத்தின் நடுவே, கரும்புகளுக்கு இடையே ஒரு பத்து வயசுப் பையன் உட்கார்ந்து கரும்பைக் கடித்



நிற்கும் காரணம்?

"ஏன் அந்த ஆளு ஏறுகிற இடத்திலே நின்னுக்கிட்டிருக்காரு? உள்ளேதான் நிறைய இடமிருக்கே!"

"அவன் ஏதாவது ஒரு கம்பெனியிலே கேட் கீப்பராக இருப்பான் போலிருக்கு'

— சிவ சக்தி

துத் துப்பிக் கொண்டிருந்தான், கரும்பைத் திருடித் தின்ன, கரும்புத் தோட்டமே ஏற்ற இடம் என்பது அவன் கருத்து. திடீரென்று தோட்டத்துக்குள் சேரன் நுழையவே, தோட்டத்தைச் சேர்ந்த யாரோ தனது திருட்டைத் தெரிந்து கொண்டு பிடிக்க வருவதாக நினைத்த பையன் அந்த இடத்தை விட்டு மின்னல் வேகத்தில் ஓடினான்.

அதைச் சேரன் பார்த்த போதே தனக்குப் பின்னே யாரோ வருவதை உணர்ந்தான். உடனே, பக்கவாட்டில் மெல்ல விலகி, டாலரைப் பிடித்த படியே உட்கார்ந்து விட்டான். சேரனைப் பிடிக்கக் கரும்புத் தோட்டத்தில் புகுந்த பாபு, முன்னே பையன் ஓடும் அசைவைக் கண்டு, அந்தத் திசையில் ஓடினான். பையன் கரும்புத் தோட்டத்தில் ஓடிப் பழக்கப்பட்டவன். அதனால் பாபுவின் கையில் சிக்காமல் ஓடி விட்டான்.

சேரன் மெல்ல நகர்ந்து, கரும்புத் தோட்டத்தின் விளிம்புக்கு, சாலையைத் தொடும் விளிம்புக்கு வந்தான். ஜாக்கி அப்போதுதான் காரை சாலை ஓரத்தில் நிறுத்திவிட்டு, கரும்புத் தோட்ட வரப்பில் நடந்து சென்றான். அதைப் பார்த்த போது சேரனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அந்த இடத்தில் அவர்களிடமிருந்து தற்காலிகமாகத் தப்பித்துக் கொள்ள, அவர்களது காரே சரியான இடம் என்று நினைத்தான். உடனே சாலைக்கு வந்தான். காரின் டிக்கியை இழுத்துப் பார்த்தான். அது பூட்டப்படவில்லை. அதனால் அவன் டாலருடன் அதில் ஏறிக் கொண்டு, டிக்கியை மூடிக் கொண்டான்.

ஜாக்கி, இப்படி நடக்கும் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. சேரன் ஏதோ ஒரு லாரியில் ஏறிப் போய் விட்டதாக நினைத்து ஏமாந்து விட்டான்.

* * * * *

'லொள் லொள்' என்னும் டாலரின் குரைப்புச் சத்தம் தூக்கத்தைக் கலைக்கக் கண்ணைத் திறந்தான், சேரன்.

டாலர் அவனுக்குப் பக்கத்திலே இருந்தது. அது யாரையோ பார்த்துக் குரைத்துக் கொண்டிருந்தது. சேரன் பார்த்தான். திண்ணை அருகே சுமார் பத்து வயதுள்ள ஒரு சிறுமி நின்றிருந்தாள். பொழுது நன்றாக விடிந்திருந்தது. சேரன் எழுந்து உட்கார்ந்தான்.

"நாய் உன்னதா? ரொம்ப அழகா இருக்கு!" என்றாள், அந்தப் பெண்.

"ஆமாம் பா ப் பா! இது உன் வீடா?" — சேரன் கேட்டான்.

"அட, என் பேரு உனக்கு எப்படித் தெரியும்? பார்வதகுமாரின்னு எனக்குப் பேரு வச்சாங்களாம். ஆனா பாப்பான்னு எங்கம்மா கூப்பிட்டதாலே, அதுவே பேராயிடுச்சு. பள்ளிக்கூடத்திலே கூடப் பாப்பான்னுதான் பேர் கொடுத்தாங்க. உம் பேரு என்னண்ணா?"

அரை நிமிடத்தில் தன்னை அண்ணனாக்கிக் கொண்ட அந்தத் திமர்த் தங்கையை அன்போடு பார்த்து அதிசயித்த அவன், "சேரன்" என்றான்.

"தெரியுமே!"

பாப்பா சொன்னதைக் கேட்டுத் திகைத்த சேரன் "தெரியுமா? என் பெயர் சேரன்னு உனக்குத் தெரி

யுமா?'' என்று கேட்டான்.

''இல்லேண்ணா. சேரன் என்கிற பேரைத் தெரியும். நான் பள்ளிக்கூடத்திலே படிச்சுக்கிட்டிருக்கிறப்போ, பாடத்திலே படிச்சேன். சேரன் கணைக்கால் இரும்பொறை! இவன் மானம் மிக்க சேரன்! காவலாளிங்க இழிவு செஞ்சதாலே, தண்ணீர் குடிக்காமே மானத்தோடு செத்துட்டான்.''

பாப்பா சொன்ன சேரன் கதை அவன் கவனத்தைக் கவரவில்லை. ஆனால், ''நான் பள்ளிக்கூடத்திலே படிச்சுக்கிட்டிருக்கிறப்போ...'' என்று சொன்னது, அவன் மனத்தைத் தொட்டது.

''தங்கச்சி, நீ இப்போ பள்ளிக்கூடத்திலே படிக்கலையா?''

பாப்பாவின் மலர்ந்த முகம் திடீரென்று குவிந்தது. இல்லை என்பதைத் தலை அசைவின் மூலம் தெரிவித்தாள்

''ஏன்? படிப்பிலே விருப்பம் இல்லையா?''


''பள்ளிக்கூடம் பிடிக்கும்! பாடம் படிக்கிறதும் பிடிக்கும். ஐஞ்சாவது வரை படிச்சேன். போன வருஷம் எங்கப்பா செத்துட்டார். அப்புறம் எங்கம்மா சாலை ஓரத்திலே காய்கறி விக்கிறாங்க. அவங்களுக்கு உதவியா கடையைப் பாத்துக்க, என் படிப்பை நிறுத்திட்டாங்க.''

பாப்பா சொன்னதைக் கேட்டதும் சேரன் மனம் கலங்கியது; கண்களும் கலங்கின. 'மலைவாழை அல்லவோ கல்வி, அதை வாயார உண்பாய், போ என் புதல்வி' என்னும் பாரதிதாசன் பாடல் நினைவுக்கு வந்தது. 'இதோ ஒரு சிறுமி படிக்க விரும்புகிறாள்! ஏழ்மை அவள் படிப்பைத் தடுக்கிறதே? அவன் சிந்தனையை டாலரின் குரல் தடுத்தது.

டாலர் குரைத்ததும், ''இது ஏன் இப்படிக் கத்துது? ஒருவேளை பசிக்குதோ?'' என்று கேட்டாள் பாப்பா.

சேரன் திடுக்கிட்டான்.

நேற்றுப் பகலிலிருந்து டாலருக்கு உணவில்லை. சொகுசாக வளர்ந்த டாலருக்குப் பசித் துன்பம் புதுசாக இருக்கும். டாலருக்கும் பசிக்கும் என்பதைச் சேரன் உணரவில்லை. ஆனால் சிறுமி உணர்கிறாளே! பெண் மனந்



தான், வயது வித்தியாசம் இல்லாமல் பிறர் பசியை நினைக்குமோ?

''ஆமாம் பாப்பா. பசிதான்!''

''வீட்டிலே பழையது இருக்கு. கொண்டு வரட்டுமா?''

சேரன் சிரித்தான்.

''இது பழையது சாப்பிடற ஏழை வர்க்கம் அல்ல! பணக்காரவர்க்கம்!''

''பின்னே, இது என்ன சாப்பிடும்?''

''காலேலே நல்ல பாலிலே ஓட்ஸ் போட்டுக் காய்ச்சி, அதிலே ரெண்டு முட்டையைஉடைச்சிஊத்திக்கொடுக்கணும். இதுதான் டிபன்.''

''உம்... அப்புறம் சாப்பாடு?''

''கால் கிலோ கறியைக் கொத்தி அதை அரிசியோடு ஒண்ணு வேக வச்சிப் பகல் சாப்பாடாய்க் கொடுக்கணும்.''

''அம்மாடி! இதைப் பார்த்ததும் இது மாதிரி நாயை வளர்க்கணும்னு ஆசை வந்துது. இதோட சாப்பாட்டைக்கேட்டதும், அது போயிடுச்சு.''

சேரன் சிரித்தான்.

''இப்போ இதுக்கு எப்படி ஆகாரம் தரப் போறே?''

சேரனுக்கும் கவலைதான். சட்டைப் பையில் கைவைத்துப் பார்த்தான். விஜய் கொடுத்த பணத்தில், பஸ்ஸுக்கும், நேற்றுப் பகல் லாரி கம்பெனி அருகே சாப்பிட்ட பகலுணவுக்கும் போக மீதி ஆறு ரூபாய் ஐம்பது காசு சட்டைப் பையில் போட்டிருந்தான். ஒன்றாக மடித்த ஐந்து ரூபாயும், ஒரு ரூபாயும் கிடைத்தன. ஐம்பது காசைக் காணோம். ஐந்து ரூபாயைப் பாப்பாவிடம் கொடுத்து, ''தங்கச்சி, உனக்குச் சிரமம் இல்லேன்னு, ஆழாக்குப் பாலும் ரெண்டு முட்டையும் வாங்கிவா. அதோடே எனக்கும் சாப்பிட ஐஞ்சாறு இட்லி வாங்கி வா.''

''சரி'' என்று பணத்தை வாங்கிக் கொண்ட பாப்பா, வெறுமனே மூடியிருந்த வீட்டின் கதவைத் திறந்து, உள்ளே போய், ஒரு கையில் ஒரு ஹார்லிக்ஸ் பாட்டிலும், ஒரு மூடியில்லாத கிண்ணமுமாக வெளியே வந்தாள்.

''வீட்டைப் பார்த்துக்கோ'' என்றபடி இறங்கிய பாப்பாவிடம், ''தங்கச்சி, இது என்ன ஊர்?'' என்று கேட்டான்.

''வேலூர். சேலம் வேலூரில்லே; ராயவேலூர்! ஆர்க்காட்டு வேலூர். இது எந்த ஊருன்னு தெரியாம, இங்கே எப்படிண்ணு வந்தே?''

பாப்பா கேட்டாள்.

''தங்கச்சி! ஒரே பசி! முதல்லே டிபன்! அப்புறம் நான் வேலூர் வந்த கதை. சரியா?''

''சரி.''

பாப்பா இறங்கி, சந்திலே ஒரு பந்தைப் போலத் துள்ளிச் சென்றாள்.

அரைமணி நேரத்தில் பாப்பா திரும்பி வந்தாள். அவளே பாலைக் காய்ச்சிக் கொடுத்தாள். அதில் முட்டை உடைத்து ஊற்றிக் கலக்கி டாலருக்குக் கொடுத்தான். அவனும் பல் விளக்கி, முகம் கழுவிக் கொண்டு, இட்லி சாப்பிட்டான். சாப்பிட்ட



மண்டையில் ஏறுதல்

''உங்க பையன் மண்டையிலே ஒண்ணுமே ஏற மாட்டேங்குது. பெயிலாயிட்டான்.''

''என்ன சார் இப்படிச் சொல்றீங்க? நல்லாப் பாருங்க. இப்போது கூட இவன் மண்டையிலே எறும்பு ஏறிக்கிட்டிருக்கு''.

— கடலூர் கன்னியப்பன்

படியே தான் வேலூர் வந்த விதத்தைச் சொல்லி, ஒரு முக்கியமான — நாட்டுக்குப் பயன்படும் ஒரு நல்ல செயலுக்காகச் சென்னைக்குப் போக வேண்டும் — அதுவும் அன்றைக்கே போக வேண்டும் என்பதையும் சொன்னான். ஆனால் தன்னிடம் பணம் இல்லை என்பதையும் எப்படியாவது சென்னைக்குப் போயே தீர வேண்டும் என்பதையும், அழுத்தமாகக் கூறினான்.

"பாப்பா! நீ ரொம்ப நல்லவ. கடவுள் உன்னைப் போல இருக்கிறவங்களிடம் பணம் கொடுத்திருந்தா நீயே எனக்கு உதவி செஞ்சிருப்பே! இம்... இப்ப என்ன செய்யறது?"

சேரன் பெருமூச்சு விட்டான்.

"அண்ணா நீங்க இங்கேயே இருங்க. நான் இப்பவே வரேன்" என்று கூறிவிட்டுப் பாப்பா மீண்டும் அந்தச் சந்திலே ஓடினாள்.

அரைமணி நேரம் ஆனது. பாப்பா வரவில்லை. பாப்பாவுக்குப் பதில் ஒரு அம்மா வந்தாள். திண்ணையிலிருந்த சேரனைப் பார்த்து, "நீதானே சேரன்! உள்ளே வாப்பா!" என்றபடி வீட்டுக்குள்ளே சென்றாள்.

முகச்சாடையிலிருந்தே அவள் பாப்பாவின் தாய் என்பதைத் தெரிந்து கொண்டான், சேரன். முகத்தில் திருநீறு என்றாலும் அதிலே ஒரு பிரகாசம்! பேரொளி! அதுதான் அருள் ஒளியோ?

சேரன் உள்ளே போனான்.

"தம்பி, பாப்பா வந்து விஷயத்தைச் சொன்னா. அவங்கப்பா இருந்தப்போ, அவரு அதுக்குக் காசு தருவாரு. அதிலே இருபத்தைஞ்சு காசு, ஐம்பது காசு நாணயங்களை ஒரு உண்டியில் போட்டு வந்தா. பாதி நிறைஞ்சப்போ அவரு போயிட்டாரு. உண்டிக் காசு அவளுடையது. அதனாலே எனக்குக் கஷ்டம் வந்தப்போ கூட அதைத் தொடலே. அதை உடைச்சி அதிலேயிருக்கிற பணத்தை உனக்குக் கொடுக்கச் சொல்லிட்டா. அவளைக் கடையிலே விட்டுட்டு வந்திருக்கேன்."

அந்த அம்மாள் பேசிக்கொண்டே, மாடத்திலிருந்த உண்டியை எடுத்தாள். அதை உடைக்க முயன்றபோது, சேரன் தடுத்தான்.

"அம்மா, வேண்டாம்மா"

அழுகை கலந்த குரலில் கூறினன்.

"நீ நாட்டுக்கு ஏதோ நன்மை செய்யும் செயலுக்காகச் சென்னைக்குப் போகணும் இல்லையா?"

"ஆமாம்."

"அதற்குப் பணம் வேணும் இல்லையா?"

"ஆமாம்."

"அப்போ தடுக்காதே. நீ எவ்வளவு தீரமா லாரியிலே ஏறி — கரும்புத் தோட்டத்திலே மறைஞ்சு — உன்னைப் பிடிக்க வந்தவங்க காரிலேயே தப்பிச்சு வந்தே! உனக்குப் பாப்பா உதவணும்னு நினைச்சதே எனக்குப் பெருமைதான். அவங்கப்பா மனசு அதுக்கு. நான் தப்பா நினைக்க மாட்டேன். பாப்பாவின் பணம் நல்லதுக்குப் பயன்பட்டாச் சரிதான்."

பாப்பாவின் அம்மா மண் சட்டியை உடைத்தாள். சிதறிய காசுகளை ஒன்று திரட்டி எண்ணிப் பார்த்தாள்.

"பதிமூன்று ரூபாய் ஐம்பது காசு இருக்கு. சென்னைக்குப் பஸ் சார்ஜ் பத்துப் பதினேரு ரூபாய் இருக்கும். எடுத்துக்கோப்பா."

சேரன் கைநிறைய அந்தக் காசுகளை வாங்கினன். அவன் பாடத்தில் படித்த பாரியைக் காட்டிலும் பாப்பா சிறந்த வள்ளலாக, அதிகமானைக் காட்டிலும் அந்த அம்மாள் பெரிய வள்ளலாக அவன் மனம் நினைத்துப் பாராட்டியது.

அம்மா போன அரைமணி கழித்துப் பாப்பா வந்தாள். பரவசத்தோடு வந்தாள். "அண்ணு, இப்ப நீங்க சென்னைக்குப் புறப்படலாம், பஸ் ஸ்டாண்டுக்கு நான் வழிகாட்டறேன்" என்றபடி வீட்டைப் பூட்டால் பூட்டிக் கொண்டாள். அடுத்த அரை மணி நேரத்தில் இருவரும் பேருந்து நிலையத்தை அடைந்தனர்.

சென்னை புறப்படத் தயாராய் ஒரு பஸ் நின்றிருந்தது. பாப்பாவிடம் குரல் தழுதழுக்க விடைபெற்றுக் கொண்டு, டாலருடன் பஸ்ஸுக்குள்ளே ஏறினன், சேரன். இரண்டு நிமிஷத்தில் டாலரும் அவனுமாகக் கீழே இறங்கிவிட்டனர்.

"என்னண்ணு?"

பாப்பா கேட்டாள்.

"நாயை வச்சுக்கிட்டு பஸ்ஸிலே வரக்கூடாதுன்னு கண்டக்டர் சொல்ருர்."

சொல்லிலேயே சேரனின் சோகம் தெரிந்தது.

"நாயை என்னிடம் விட்டுட்டுப் போண்ணு."

"பாப்பா! சென்னைக்கு நானும் போகணும்! நாயும் போகணும்! ரெண்டு பேரிலே ஒருத்தர் போனுப் பலனில்லை!"

சேரனின் சோகம் அதிகமானது.

'இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்று தெரியாமல் திகைத்தான், சேரன்.

(தொடரும்)

என்ன அவசரம்?

ஒரு ரயில் விபத்துக்குள்ளாகிச் சிலர் இறந்தனர்; பலர் காயமடைந்தனர். சிறிது நேரத்தில் டாக்டர்கள் வந்தார்கள். அச்சமயத்தில் கால் போயிருந்த ஒரு பிரயாணி ஒரு டாக்டரைப் பார்த்து, "டாக்டர் சார், என் கால் துண்டாகி விட்டது. உடனே காப்பாற்றுங்கள்" என்று அலறினர்.



அதற்கு அந்த டாக்டர், "உமக்கு என்னய்யா அவசரம்? ஏன் இப்படிக் கத்துகிறீர்? தலைபோனவங்களே பேசாமல் படுத்துக் கிடக்கிருங்க" என்ருர் நிதானமாக.

—சி.காமாட்சி ப்ரியா (7365),
திருவையாறு.

அது சிலேட்டா? இல்லை; வரலாற்றுச் சின்னம்

* முத்தமிழ்க் காவலரின் குழந்தைப் பருவம் வளரும் தலைமுறைக்கு வரலாற்றுப் பாடமாக இருக்கிறது. 77 வருடங்களாகச் சிலேட்டை உடைக்காமல் வைத்திருக்கும் செய்தி என்னை வியப்படைய வைத்தது. அது சிலேட்டன்று; வரலாற்றுச் சின்னம்!
—வீ. குமணன் (3284), திருக்கழுக்குன்றம்.

* பள்ளி செல்லாத முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், இன்றைய உயர் படிப்பாளர்களின் அறிவைவிட, உயர்ந்த அறிவாற்றல் பெற்றுத் திகழ்கிறார். குறள் காட்டும் நெறியில் வந்த அவரின் இளமைப் பருவம் எங்களுக்கு ஒரு பாடம்.
—பொன். கல்கிவாணன், இராஜபாளையம்.

* என் பெண்ணுக்குக் கோகுலம் வாங்கிக் கொடுத்த பின்னர், தமிழில் ஆர்வம் அதிகமாகவே உள்ளது.
—என். திலகா கிருஷ்ணன், சென்னை—78.

* இதுவரை வெளியிட்ட படக் கதைகளிலே 'ஃபிலிகா என் நண்பன்' முற்றிலும் வேறுபட்டு, குதிரைக்கும் கென்னுக்கும் உள்ள நட்பை அருமையாக விளக்குகிறது.
—கா. சேட்டு முகம்மது (3048), விருத்தாசலம்.

* 'ஆகாய விமானத்தில் அப்பாவுடன் போனேன்' பேட்டிக் கட்டுரை நன்கு புரியும் வண்ணம் விளக்கமாகத் தந்திருப்பது அருமையாக இருந்தது.
—தேரழுந்தூர் சி. சுப்பு.

* நாங்களும் விமானத்தில் பறப்பது போல் இருந்தது.
—அ. நடராஜன், அண்ணாமலைநகர்.

* 'விளையும் பயிர்' தீபக்கைப் பார்த்து நாங்கள் திகைப்புற்றோம். ஐந்து வயதில் இத்தனை சாதனைகளா?
—த. அருள்சிவபாலன், செங்கற்பட்டு.

* 'ஒரு பூனை புலியாகிறது' தொடர் மிகவும் திரில்லாகவும், சஸ்பென்சாகவும் செல்கிறது.
—ல. ஸ்ரீஹரி, கோவை—9.

* 'அவர்கள் மணம் நடைபெற, நாங்கள் மரணம் அடைய வேண்டுமாம்!' என்ற ஒட்டைச் சிவிங்கியின் குரலிலும் நியாயம் உள்ளதல்லவா? சரி, இத்தொடரை எழுதுபவர் யார்?
—ஹெச். பரூக் (2467), இலால்குடி.

* 'திப்பிலி ராஜாவின் தூக்கத் தொழிற்சாலை' என்ற கதையைப் படித்ததும், அதற்குச் 'சிரிப்புத் தொழிற்சாலை' என்று பெயர் வைத்திருக்கலாமோ என்று நினைத்தேன். அப்படிச் சிரிப்பு வரவழைத்தது அக்கதை.
—எஸ். விஜயநந்தினி (7431), திருச்சி—20.

* சென்ற இதழ் 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதியில் திருச்சி பாரதன் படத்திற்குக் கீழே கூத்தபிரான் என்றும் கூத்தபிரான் படத்திற்குக் கீழே திருச்சி பாரதன் என்றும் இருக்கிறதே! இது தவறுதானே!
—பி. ராம்நாத் சேகர் (2675), பட்டுக்கோட்டை.

(தவறுதான்; இதற்காக வருந்துகிறோம்.
—ஆசிரியர்.)

* வீணாகச் செலவு செய்து வயிற்றைக் கெடுத்துக் கொள்வதைவிட, கோகுலத்தின் மூலம் என் அறிவை வளர்த்துக் கொள்வேன்.
—ஆர். கோவிந்தராஜ் (4503), அம்பல்.

* 'மாலியும் ஜூலியும்' மாணவர்களுக்கு நல்ல கருத்துக்களைப் போதிக்கிறது.
—எஸ். சிவராஜ் (22), மன்னார்குடி.

* புலவர் தணிகை உலகநாதர் எழுதிய 'ஆயிரம் பேரைக் கொன்றவன்' கட்டுரை சிரிக்கவும் வைக்கிறது; சிந்திக்கவும் வைக்கிறது. பழமொழிகள் எப்படி எப்படியெல்லாம் மாறிவிட்டன!
—என். கே. ராமானுஜம், கொருக்குப்பேட்டை.

* டாக்டர் அழகப்ப செட்டியார் பிறந்த தேதியிலே மறைந்தார் என்று 13—ஆம் பக்கத்தில் உள்ளது. ஆனால், 2—வது அட்டையிலுள்ள படத்தின் கீழ் பிறந்த நாள் 6—ஆம் தேதி என்றும் மறைந்தநாள் 5—ஆம் தேதி என்றும் இருக்கிறதே. உண்மையான தேதி எது?
—வி. ராஜேஷ்கண்ணா (4200), சென்னை—71.
எஸ். அமீர் அலி (7577), நாகூர்.
ச. ஆழ்வார் ராஜா (4601), காளி அஞ்சல்.

(பிறந்த நாளும், மறைந்த நாளும் 6—ஆம் தேதிதான். 5 எனத் தவறாக அச்சாகியுள்ளது. படத்தின் அடியில் தயவு செய்து திருத்திக் கொள்ளுங்கள். —ஆசிரியர்.)

* குழந்தைக் கவிஞரின் 'தூங்கு மூஞ்சிகளும் வண்டிமாடுகளும்' பாடல் மிகமிக அருமை. தொடர்ந்து பழைய கதை; புதிய பாடலை எதிர்பார்க்கிறோம்!
—எஸ். கலையரசி, திருப்பூர்.

சார், தபால்!

பிருந்தாவனக் கவியரங்கம்

என் ஆசை



பட்டுச் சிறகைக் கட்டிக் கொண்டு
பறக்கத் தானே ஆசை!

பரந்தி ருக்கும் உலகைச் சுற்றிப்
பார்க்கத் தானே ஆசை!

அள்ளி அள்ளி ஏழை கட்கு
அளிக்கத் தானே ஆசை!

அறிவி னாலே பஞ்சம் யாவும்
அழிக்கத் தானே ஆசை!

ஊரை ஏய்த்து வாழ்வோர் தம்மை
ஒழிக்கத் தானே ஆசை!

உலகம் போற்றப் பார தத்தை
உயர்த்தத் தானே ஆசை!

—பி. ஆர். ரேணுகா (8664), சென்னை—5.

குப்பனும் கழுதையும்

குப்பன் ஒருநாள் சாலையில்
குறுக்கே செல்லும் வேளையில்.

ஆடி அசைந்து கழுதையார்
அங்கு வரவே கண்டனன்.


குப்பன் கழுதை வாலையே
குறும்பாய்ப் பிடித்து இழுக்கவே

ஓங்கிப் பின்னங் காலினால்
உதை கொடுத்தார் கழுதையார்.


காது நீண்ட கழுதையார்
காலும் வாயில் பட்டதால்

முன்னம் பற்கள் இரண்டுமே
விழுந்து விட்ட தய்யகோ!

—வெ. கணபதி சுப்பிரமணியன் (2665),
கோவை—5.



என் விருப்பம்



கோழிக் குஞ்சு நடக்குதே.
நானும் நடந்து பழகினேன்.

குயிலுக் குஞ்சு பாடுதே.
நானும் பாடப் பழகினேன்.

மீனுக் குஞ்சு நீந்துதே.
நானும் நீந்தப் பழகினேன்.

பறவை வானில் பறக்குதே.
நானும் பறக்க விரும்பினேன்.

இறக்கை எனக்கு இல்லையே!
பறக்க என்றால் முடியுமோ!

—எஸ். ராம்குமார் (8709), பொங்கலூர்.

பலூன்

பலூன், பலூன், பலூன்பார்.
பணம் கொடுத்து வாங்கிப் பார்.
பச்சை, மஞ்சள் சிவப்பிலே
பந்து போன்ற உருவிலே

பந்துப் பலூன் வேணுமா?
பாம்புப் பலூன் வேணுமா?
எந்தப் பலூன் வேணுங்கோ?
இஷ்டப் பட்டதைக் கேளுங்கோ.

உதட்டில் வைத்து ஊதினால்
உப்பும் பலூன் பாருங்கோ.
அதிக மாக ஊதினால்,
ஐயோ, டப்னு வெடிக்குங்கோ!

—டி. பாஸ்கர் (4977), இராஜபாளையம்.



கிரிக்கெட் பந்து எங்கே?



பாலன் வேலன் இருவர் சேர்ந்து
கிரிக்கெட் ஆடினர்.
பந்தை மிகவும் வேக மாகப்
பாலன் அடிக்கவே
உருண்டு, உருண்டு ஓடிச் சென்ற
பந்தை எடுக்கவே
ஓடி ஓடித் தொடர்ந்து சென்றான்
வேலன் விரைந்துமே.
ஒன்று, இரண்டு, மூன்று என்று
பாலன் ரன்களை

ஓடி ஓடி எடுத்துக் கொண்டே
தொடர்ந்து எண்ணினான்.
பத்து எண்ணி முடித்த பிறகும்
வேலன் வரவில்லை.
பாலன் உடனே ஓடிச் சென்று
தேடிப் பார்த்தனன்.
குறுக்குச் சந்தில் ஐஸ் வண்டிக்
கார னிடத்திலே
கோப்பை ஐஸை வாங்கி மெதுவாய்ச்
சுவைக்கக் கண்டனன்.
"பத்து ரன்கள் எடுத்து விட்டேன்
என்று எண்ணினேன்.
பாவி, நீயும் திரும்பி டாமல்
இங்கே தின்கிறாய்.
பந்து எங்கே? எங்கே பந்து?"
என்று கேட்கவே,
"பந்தைக் கொடுத்தே ஐஸ் கிரீமை
வாங்கித் தின்கிறேன்,
பணத்துக்கு நான் எங்கே போவேன்?"
என்றான் வேலனே!

—ஏ. எல். ராமு, மதுரை—2.


இப்படித்தான் வாழவேண்டும்

அன்பினைப் போற்றிடுவாய் — கண்ணே
ஆன்றோர் சொல் கேட்டிடுவாய்.
இன்பமும் துன்பமுமே — வாழ்வில்
இருந்திடும்; மனந்துணிவாய்.

எப்படி யும்வாழலாம் — என்ற
தப்பெண்ணம் போக்கிடுவாய்.
இப்படித்தான் வாழ்வேன் — என்ற
இலட்சியம் கொண்டிடுவாய்.

இப்புவி மீதினிலே — மக்கள்
யாவரும் ஒன்றெனவே
செப்பிடும் ஆசிரியர் — சொல்லைச்
செய்கையில் காட்டிடுவாய்.

—பொன்னிதாசன் (5892), அக்கரைப்பட்டி.



பிருந்தாவனக் கதையரங்கம்

தங்கத் தவளை —————— ப. விஜயகுமார் (241)

சின்னலூர் என்ற ஓர் ஊரில் செல்வநாயகம் பெரிய பணக்காரர். வியாபாரம் செய்து நிறையப் பொருள் ஈட்டினார். அவருக்கு கோதண்டராமன் என்னும் ஒரு பிள்ளை இருந்தான். அவனுக்குப் படிப்பு ஏற வில்லை.

பணக்காரச் செல்வநாயகம் அவனுக்குத் தனிக் கடை வைத்துக் கொடுத்தார். தந்தை தொழிலை மகன் வளர்க்கவில்லை. அவன் கெட்ட சகவாசத்தால் கடையைக் கவனிக்காமல், விரைவில் கடையை மூடிவிட்டான். அதனால் அவனுக்கு ஆயிரக் கணக்கில் பண நஷ்டம். மறு படியும் தகப்பனாரிடம் வந்து பணம் கேட்டான், மீண்டும் தொழில் நடத்த வேண்டும் என்று. அவரோ கோபத் துடன், ''ஏண்டா, தண்டம். பத் தாயிரம் நஷ்டம் உண்டாக்கியது போதாது என்று மறுபடியுமா கேட் கிறாய்?'' என்று சீறினார்.

''அப்பா, ஏதோ போதாத வேளை எனக்கு. அதனால்தான் அப்படி ஆகிப் போச்சு''என்றான் மகன்.



''போடா தறுதலை, நீ ஊதாரி. கண்ட தடிராமன்களுடன் சேர்ந்து பணத்தை வீணாக்கிவிட்டாய். உன க்குச் சுயமாய்ச் சம்பாதிக்கத் திறமை யிருந்தால், அதோ தெருவில் கிடக் கும் செத்த தவளையை முதலாகக் கொண்டு வியாபாரம் செய்து பிழைக் கலாம். வல்லவனுக்குப் புல்லும் ஆயு தம்'' என்று கூறி, பணம் கொடுக்க மறுத்துவிட்டார்.''

''செத்த தவளையை நீங்களே வறுத்துச் சாப்பிடுங்கள்'' என்று கோதண்டராமன் கோபமாகச் சொல்லி வெளியேறினான்.

செல்வநாயகம் மகனைக் கோப மாகப்பேசிக் கொண்டிருக்கும் வேளை யில், அவரைப் பணம் கேட்க வந் தான் ஒரு ஏழை வாலிபன். அவன் காதுகளில் 'செத்த தவளையை முத லாக வைத்து வியாபாரம் செய்து பிழைத்துக் கொள்ளலாம்'- என்ற சொற்கள் எதிரொலித்தன. அவன் மனத்தில் பளிச்சென்று ஓர் எண்ணம் உருவாகியது. செத்த தவளையை எடுத்துக் கொண்டு வீதி வழியாகச் சென்றான்.

வழியில் ஒரு மருத்துவக் கல்லூரி இருந்தது. கல்லூரி வாசலில் இருந்த ஒரு மாணவன் தவளையை விலைக்குக் கேட்டான், பரிசோதனை செய்ய. தவ ளையை விற்றான். கிடைத்த பணத் தில் பலூன் வாங்கி விற்றான். பலூ னில் கிடைத்த பணத்தைக் கொண்டு பழைய பேப்பர் வாங்கி விற்றான். பழைய பேப்பர் வாங்கி விற்றதில் கிடைத்த பணத்தைக் கொண்டு பிளாஸ்டிக் கடையை வைத்தான். அதில் பலவிதமான சாமான்கள் வாங்கி வியாபாரம் செய்தான்.

இரண்டு வருடங்களில் பெரிய பணக்காரன் ஆனான்.

ஒருநாள் அவன் செல்வநாயகத்தைத் தேடிச் சென்றான். அவரைப் பார்த்ததும் வணங்கி, தன் கைப் பையிலிருந்த தங்கத்தினால் செய்த தவளையை எடுத்துக் கொடுத்தான். ''ஐயா! இந்தப் பொன் தவளையைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான் அடக்கத்துடன்.

''நீ யார், எனக்கு எதற்குப் பொன் தவளை?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார், செல்வ நாயகம்.

''ஐயா! இரண்டு வருடங்களுக்கு முன் வியாபாரம் செய்வதற்காகத் தங்களிடம் சிறு உதவி கேட்க வந்தேன். அந்தச் சமயத்தில் தாங்கள் தங்கள் மகனுக்கு, ''செத்த தவளையை வைத்துப் பிழைத்துக் கொள்'' என்று அறிவுரை கூறினீர்கள். அதைத் தங்கள் மகன் மறுத்தான்.—

''நீ என்ன செய்தாய்?''

''அந்தத் தவளையை முதலாக வைத்து இன்று பணக்காரன் ஆனேன்'' என்று அவன் தன் கதையை விளக்கமாய்ச் சொன்னான்.

''சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்பவனே மனிதன். உன் நம்பிக்கை உன்னைக் கை விடவில்லை. நீ இன்னும் வளமாக வாழ வேண்டும்'' என்று அவர் ஆசீர்வதித்தார்.

செத்த தவளையை முதலாக வைத்துப் பணக்காரன் ஆன கதையைக் கேட்டதும் ஊதாரி மகன் வெட்கத்தால் தலை குனிந்தான். ''நானும் இன்று முதல் உண்மையாக உழைத்து முன்னேறுவேன்.'' என்று தந்தையிடம் சபதம் செய்து விட்டு வெளியேறிப் பிழைத்துக் கொண்டான்.

வேலனும் பாலனும் — கே. நரசிம்மன் (7378)

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் மிகவும் நல்லவர். அவர் ஆட்சி செய்த நாட்டில் ஏழைகளே இல்லை. மக்கள் அந்த ராஜாவைத் தெய்வமாக மதித்தனர். அந்த ராஜாவுக்குப் பிள்ளைச் செல்வம் இல்லை. ''எனக்குப் பிறகு இந்த நாட்டை யார் ஆட்சி செய்வது?' என்பதுதான் ராஜாவின் ஒரே ஒரு கவலை.

இப்படிப்பட்ட ராஜாவுக்கு ஒரு சமயம் தீராத நோய் கண்டது. வெளி நாட்டில் உள்ள மருத்துவர்கள் எல்லோரும் வந்து பரிசோதித்தும் வியாதியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒருநாள் ஓர் ஏழை வைத்தியர் ராஜாவைக் காண வந்தார். அவர் ராஜாவின் உடலை நன்கு பரிசோதித்துப் பார்த்துச் சொன்னார்:

''மகாராஜாவின் நோய்க்கு நம் நாட்டில் இருந்து நூறு கல் தொலைவிலுள்ள செண்பக மலையில்தான் ஒரு மூலிகை உள்ளது. அதை இந்த நாட்டிலுள்ள வீரர்கள் எவராவது பறித்து வந்து கொடுத்தால் நோய் குணமாகும்.''

வைத்தியர் இப்படிச் சொன்னதும், உடனே ராஜா சேவகர்களை அழைத்து, ''இச்செய்தியை உடனே நாடெங்கும் பறை சாற்றுங்கள். மூலிகையைக் கொண்டு வருபவர்களுக்கு மிகப் பெரிய பரிசு வழங்கப்படும் என்றும் அறிவிக்க வேண்டும்'' என்று உத்தரவிட்டார். வீரர்களும் அவ்வாறே செய்தனர்.

* * * * *

வேலனும், பாலனும் பள்ளிக் கூடத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பிக்



கொண்டிருந்தனர். அப்போது வழியில் ராஜாவின் அறிவிப்பைக் கேட்டனர். அவர்கள் இருவருமாகச் சேர்ந்து அம்மூலிகையைப் பறித்து வந்து ராஜாவிடம் ஒப்படைப்பதென்று முடிவு செய்தனர். அவர்கள் இருவரும் தத்தம் தாய் தந்தையரிடமிருந்து அனுமதி பெற்று, ராஜாவின் அரண்மனைக்குச் சென்றனர். ராஜா அவர்களைப் பார்த்து, ''யாரும் இதுவரை அம்மூலிகையைக் கொண்டுவர முன்வரவில்லை. உங்களால் முடியுமா?'' என்று கேட்டார்.

''எப்பாடு பட்டாயினும் அம்மூலிகையைக் கொண்டு வருவோம்'' என்று இருவரும் உறுதியளித்தனர். உடனே ராஜா தளபதியை அழைத்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருமாறு கட்டளையிட்டார். தளபதியும் 'சரி' என்றான்.

அந்தத் தளபதி மிகவும் கொடியவன். அந்தச் சிறுவர்கள் கொண்டு வரும் மூலிகையை அவர்களுக்குத் தெரியாமல் திருடிக் கொண்டு வந்து ராஜாவிடம் தந்து அவர் மதிப்பையும் நாட்டையும்பெற்றுவிடலாம்என்பது அவன் எண்ணம்.

சிறுவர்கள் இருவரும் செண்பக மலையை நோக்கிப் பயணம் செய்தனர். அவர்கள் பல ஆபத்துக்களைச் சந்தித்து அம்மலையில் ஏறி மூலிகையைப் பறித்துக் கொண்டு, வந்து கொண்டிருந்தனர். அவ்வாறு வரும் வழியில் ஒரு சத்திரம் இருந்தது. அவர்கள் இருவரும் அங்கு இரவு தங்கி, காலையில்செல்வதென்று முடிவு செய்தனர். அவ்வாறே சத்திரத்தில் தங்கினர். வேலன் ஒரு சிறிய பெட்டியில் அம்மூலிகையை வைத்து மூடி அதைத் தன் அருகில் வைத்தவாறு தூங்கிக் கொண்டிருந்தான்.

இதை ரகசியமாக அறிந்த தளபதி உடனே அவர்கள் தங்கியிருக்கும் சத்திரத்திற்குச் சென்று அவர்களுக்குத் தெரியாமல் அப்பெட்டியைத் திருடிக் கொண்டு வந்து ராஜாவிடம் ஒப்படைத்தான். ''தன்னந்தனியாக நானே சென்று மூலிகையைக் கொண்டு வந்தேன். உள்ளே இருக்கிறது மூலிகை. திறந்து பாருங்கள்'' என்றான்.

ராஜா ஆவலுடன் அப்பெட்டியைத் திறந்து பார்த்தார். உள்ளே மூலிகை இல்லை! உடனே ராஜாவுக்கு வந்ததே கோபம்! ஏதோ சொல்ல வாயெடுத்தார். அப்போது வேலனும், பாலனும் உள்ளே நுழைந்தனர். வேலன், தன் மடியில் பத்திரமாக வைத்திருந்தமூலிகையைராஜாவிடம் கொடுத்தான்.

''நாங்கள் இருவரும் சத்திரத்தில் தூங்கிக் கொண்டிருக்கும்போது தளபதி பெட்டியைத் திருடிக் கொண்டு போய் விடுவாரோ என்று சந்தேகம் வந்தது. ஆகையால்,மூலிகையை என் மடியில்கட்டிக்கொண்டேன்.வெறும் பெட்டியை அருகில் வைத்துக் கொண்டுதூங்குவதுபோல்பாசாங்கு செய்தோம், நாங்கள் சந்தேகப்பட்ட படியே தளபதி வந்தார். பெட்டியைத் தூக்கிக் கொண்டு இங்கு வந்தார். நாங்களும் அவரைத் தொடர்ந்து வந்தோம்'' என்றான் வேலன்.

ராஜாவும் ஒரு ரகசியத்தை அவர்கள் இருவரிடமும் கூறினார். அது இது தான்:

''எனக்கு வியாதியும் இல்லை; ஒன்றும் இல்லை. நம் மந்திரி கூறிய யோசனைப்படி யாரிடம் ஆட்சியை ஒப்படைப்பது என்பதற்காகவே இச்சோதனையை நடத்தினேன்.மந்திரிசோதனையில் வெற்றி பெற்று ஆட்சியைப்பெற நினைத்தார். அது நடக்கவில்லை. உங்களின் மதிநுட்பத்தால் என்னை ஏமாற்ற நினைத்த மந்திரி உங்களிடம் ஏமாந்தார். இன்றே வேலனிடம் அரசாட்சியை ஒப்படைக்கிறேன். பாலனைத் தளபதியாக நியமிக்கிறேன்,'' என்றார்.

பழைய கொடிய தளபதி என்ன ஆனான் தெரியுமா? அவனை இறக்கும் வரை , சிறையில் அடைக்குமாறு வேலன் தீர்ப்புக் கூறினான்.

❀ ❀ ❀

நல்ல செய்தி —— மீனா ராமச்சந்திரன் (15)

"அப்பா! உங்களுக்கு ஒரு நல்ல செய்தி!" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்த சுந்தரம் அங்கு புதிதாக ஒரு பையனைப் பார்த்தான். உடனே, தன் தந்தையிடம், "யாரப்பா இவன்? ரொம்பச்சுறுசுறுப்பாக இருக்கிறானே!" என்றான்.

"அதுவா, சொல்கிறேன். முதலில் நீ குளித்து, சாப்பிட்டு ஓய்வெடுத்துக் கொள்," என்றார்.

"சரிப்பா," என்றபடி சுந்தரம் தன் அறையை நோக்கிச் சென்றான். அங்கே அவன் ஆச்சரியப்படும்வகையில் அவனுக்குத் தேவையானவையெல்லாம் கச்சிதமாகச் செய்யப்பட்டிருந்தன.

"இதெல்லாம் அந்தப் பையன் செய்ததாகத்தான் இருக்கும். யார் அவன்? இங்கு எப்படி வந்தான்?" இப்படி அவன் மனத்தில் எழும்பிய கேள்விகளுக்கு விடையறிய அவசரமும் ஆவலுமாக இருந்தபோதிலும், 'சற்று நேரம் ஓய்வெடுத்த பிறகு அப்பாவே சொல்வார்' என்றெண்ணித் தன் ஆவலைக்கட்டுப்படுத்திக்கொண்டான்.


சற்றுநேரம் ஓய்வெடுத்தபின், தன் அறையை விட்டு வெளியே வந்தான் சுந்தரம். அவன் தந்தையார், "சுந்தரம்! நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டாயா? ஒரு மாதமாக நீ இல்லாமல் வீடு எப்படியோ இருந்தது. இப்பொழுதுதான் நிம்மதியாக இருக்கிறது," என்றார்.

பதிலுக்கு அவனும், "ஆமாம்ப்பா! எனக்கும் இன்றுதான் சந்தோஷமாக இருக்கிறது. அதைவிட ஆச்சரியம், இந்த வீட்டில் ஒரு மாதத்திற்குள் ஏற்பட்ட மாற்றம்தானப்பா! வீடே புது வீடு மாதிரி இருக்கிறதே! எப்பொழுதும்ஏதாவதுசெய்துகொண்டுஇருக்கும் நீங்கள்கூட ஓய்வாக இருப்பது போல் தெரிகிறது. இதற்கெல்லாம் காரணம் இந்தப் பையன் தான் என்று நினைக்கிறேன். 'யாரப்பா இவன்? எப்படி இங்கு வந்தான்?" என்று ஆவலோடு கேட்டான்.

அவன் தந்தையார் சொல்லத் தொடங்கினார்: "தம்பி! இந்தப் பையனைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் உன்னைப் பற்றிச் சில விஷயங்கள் சொல்ல வேண்டும். நீ என் வளர்ப்பு மகன் என்பதைத் தவிர, உன்னை நான் எப்படிக் கண்டெடுத்தேன் என்பதை உனக்குச் சொன்னதில்லையல்லவா? சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன், நானும்என் மனைவியும்பல ஊர்களைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோம். வழியில் ஒரு நாள் சிதம்பரத்தில் தங்கினோம். சுவாமி தரிசனம் செய்துவிட்டு ஒரு தெருவில் வரும்போது அங்கே கூட்டமாக நிறையப் பேர் நின்று கொண்டிருந்தார்கள். நடுவில் ஒரு சிறு பையன் அழுது கொண்டிருந்தான். விசாரித்ததில் அவன் தந்தை ஒரு



கொலைக் குற்றவாளி என்றும், அவன் தாய் இறந்துவிட்டதாகவும், அவன் அங்குஇருப்பதையாரும்விரும்பவில்லை என்றும் சொன்னார்கள். "அப்பா செய்த தவறுக்கு இந்தப் பச்சைக் குழந்தை என்ன செய்யும்? நீங்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒரு நாள் சாப்பாடு கொடுத்தால்கூட இந்தப் பையன் பிழைத்துக் கொள்வானே!" என்றேன். அதற்குள் கூட்டத்தில் இருந்த ஒருவர், "ஏன், அந்த நல்ல காரியத்தை நீங்களே செய்யலாமே!" என்றார்கிண்டலாக. இதைக்



முயற்சியால் வெல்வோம்


சீமைச் சமர்த்த ராகி விட்ட
சிறந்த மனிதர் ஆயினும்
ஆமை யைப்போல் அடங்க வேண்டும்
அடங்கும் வேளை வந்திடில்.

வலிமை ஆன எதிர்ப்பைக் கூட
மனத்தில் சலனம் இன்றியே
தெளிந்த புத்திக் கூர்மை யாலே
ஜெயிக்க முடியும் யாருமே.

முயலைக் கூட வெற்றி காண
முடியு மென்றே ஆமையும்
முயற்சி யாலே வென்ற கதையில்
முனைப்பி னால்தான் சாதனை!

', பயந்த கோழை வெற்றி தேடும்
பாதை காண முடியுமா?
உயர்ந்த நிலைக்குப் போவ தென்றால்
ஊக்கம் வேண்டும் வாழ்விலே!

• செல்லகணபதி •



கேட்டதும் என் மனைவி, "ஓ, செய்து காட்டுகிறோம். இன்றிலிருந்து இவன் எங்கள் மகன். போகுமுன் ஒன்று மட்டும் சொல்கிறோம். யாரும் நல்லவர்களாகவோ, தீயவர்களாகவோ பிறப்பதில்லை. சந்தர்ப்பச் சூழ்நிலைதான் இதற்குக்காரணம். இந்தப்பிள்ளையை நல்ல முறையில் வளர்த்து ஒருநாள் உங்கள் ஊருக்கே அழைத்து வருகிறோம்," என்று சொல்லி உன்னையும் அழைத்துக் கொண்டு வந்துவிட்டோம்.

நாங்கள் நினைத்தபடி நீயும் இன்று நல்ல நிலையில் இருக்கிறாய். உயர்ந்த உத்தியோகம் பார்க்கிறாய். நீ வெளியூருக்குப் போய் இரண்டு தினங்கள் கழித்து ஒருநாள் இந்தச் சிறுவனை 'பார்க்' பக்கம் சென்ற போது சந்தித்தேன். விசாரித்ததில், இவன் ஓர் அனாதை என்றும், "எப்படியாவது படித்து முன்னுக்கு வர வேண்டும்' என்று விரும்புவதாகவும், அதற்காக எந்த வேலையும் செய்யத் தயார் என்றும் சொன்னான். அன்று நான் உனக்குச் செய்ததை இன்று நீ இன்னொருவனுக்குச் செய்வாய் என்ற நம்பிக்கையில்தான் இவனை அழைத்து வந்தேன்," என்றார். அவரது கால்களைத் தன் கண்ணீரால் கழுவினான் சுந்தரம்.

"அப்பா! நீங்கள் என்னை ஆளாக்கியது போல் இந்தப் பையனை எப்பாடு பட்டாவது படிக்க வைத்து, அவன் விருப்பத்தையும், உங்கள் விருப்பத்தையும் பூர்த்தி செய்வேன்," என்று உறுதியோடு சொன்னான் சுந்தரம்.

"ஆமாம், ஏதோ நல்ல செய்தி என்றாயே, என்னப்பா?" என்ற தன் தந்தையிடம், "பார்த்தீர்களா அப்பா ஆண்டவனின் லீலையை! எந்த ஊர் மக்களிடம் அம்மா என்னை நல்லமுறையில் வளர்த்து, ஆளாக்கிக் கூட்டிவருகிறேன் என்று சபதம் போட்டார்களோ, அதே சிதம்பரத்திற்கே என்னைப் பதவி உயர்வு கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அம்மாவிடம் இந்தச் செய்தியைச் சொல்லிவிட்டு வருகிறேன்," என்றபடி உள்ளே சென்றவனை மனநிறைவோடு தொடர்ந்தார் அவன் தந்தை.

உணவும் உழைப்பும்

ஸரோஜா ரங்கராஜன்



கந்தன் ஏழைச் சிறுவன். அப்பா சாதாரணக் கூலி வேலை செய்பவர். அம்மாவும் கந்தனின் அப்பாவுடன் கூலி வேலை செய்கிறாள். தினமும் காலை ஆறு மணிக்கே வீட்டை விட்டுக் கிளம்ப வேண்டும்.

இருட்டு நீங்குவதற்கு முன்பே கந்தனின் அம்மா காத்தாயி எழுந்துவிடுவாள். கேழ்வரகுக் கூழைக் காய்ச்சி தானும் குடித்துவிட்டுக் கந்தனின் அப்பாவுக்கும் கந்தனுக்கும் கொடுப்பாள். பிற்பகல் உணவுக்குச் சமைத்துத் தானும் எடுத்துக் கொண்டு, கந்தனைப் பள்ளிக்குப் போகச் சொல்லுவாள்.

கந்தனுக்குப் பிற்பகல் உணவு, பள்ளிக் கூடத்தில் கிடைத்துவிடுகிறது. கந்தனுக்கு அந்த உணவைச் சாப்பிடும் போது மனசு கஷ்டமாக இருக்கும். என்னதான் ஏழைகள் என்ற இரக்கத்தில் போட்டாலும், அந்த உணவை உண்ணும்போது வேதனைப்படுவான்.

கொஞ்ச நாளாகக் கந்தன் பள்ளிக் கூடம் விட்டதும் நேராக வீட்டுக்கு வருவதில்லை. அரை மணி தாமதமாகவே வருகிறான்

கிராமத்துப் பள்ளிக்கூடமாக அந்தப் பள்ளி இருப்பதால் பள்ளிக் கூடத்துக்குக் கூரை போட்டிருக்கிறார்கள். பின்னால் பெரிய தோட்டம் போடலாம். அப்படி இடம் இருந்தும் சும்மா விட்டிருந்தார்கள்.

அந்த இடத்தில் பொதுக் கிணறு ஒன்று இருந்தது. பள்ளிக்கு வெளியே இருந்ததால் வழிப் போக்கர்கள் தண்ணீர் குடிக்க வசதியாக இருந்தது. எப்போதும் தண்ணீர் எடுக்கும்படி ராட்டினமும், கயிறும் அதோடு இருந்தன.

கந்தன் தினம் அரைமணி கிணற்றுக்குப் பக்கத்தில் உள்ள கருங்கல்லில் உட்காருவான். தண்ணீர் குடிக்க வருபவர்களுக்குத் தண்ணீர் எடுத்துக் கொடுப்பான். அவர்கள் ஏதாவது சில்லறை கொடுத்தால் வாங்கிக் கொள்வான்.

கந்தனின் தாய், வீட்டிற்கு வேலை முடிந்ததும் சரியாக ஐந்து மணிக்கெல்லாம் வந்து விடுவாள். தினம் தினம் கந்தன் நேரம் தவறி வீடு வருவதும், சட்டைப் பையில் காசு இருப்பதும் அவளுக்குக் கவலையை அளித்தது.

ஒருநாள், கந்தன் தண்ணீர் எடுத்துக் கொடுத்து விட்டுக் காசு வாங்குவதைப் பார்த்தாள். கந்தனின் தாய் காத்தாயி கூலி வேலை செய்கிறாளே தவிர, 'எந்தெந்த வேலைகளுக்குப் பணம் வாங்கலாம்' என்று தெரிந்தவள்; மிகவும் நல்லவள்.

வழிப்போக்கர்களுக்குத் தண்ணீர் கொடுப்பது தரும காரியம். இதற்குப் போய் கந்தன் காசு வாங்குகிறானே என்று நினைத்தாள்.

கந்தனிடம் அவளுக்கு ஆசை மட்டுமல்ல; நம்பிக்கையும் உண்டு. ஏதாவது காரணம் இன்றிச் செய்ய மாட்டான் என்று நினைத்தாள்.

கந்தன் தன்னிடமிருந்த காசுகளைக் கணக்குப் பார்த்தான். சரியாகப் பத்து ரூபாய். அவன் லட்சியம் கடைத்தேற வழி இருந்தது.

மறுநாள், மெள்ள மெள்ளத் தலைமை ஆசிரியரை அணுகினான். கந்தனிடம் தலைமை ஆசிரியருக்கு அன்பு அதிகம். பொய் பேச மாட்டான்; நல்ல 'மார்க்' வாங்குகிறான் என்ற எண்ணம் கொண்டவர். கந்தன் தலை குனிந்து ஏதோ சொல்ல முற்படுவதைப் பார்த்தார்.

"என்ன கந்தா! ஏதோ சொல்ல நினைக்கிறாய் போலத் தெரிகிறதே!" என்றார்.

கந்தனுக்கு முகமெல்லாம் சிவந்து போயிற்று. ஆனாலும், தைரியமாக, "ஆமாம் ஐயா! எனக்கு ஒரு ஆசை. தாங்கள் நிறைவேற்றவேண்டும்" என்றான்.

மெள்ள ஆசிரியர் அவன் முதுகை வருடினார். "தைரியமாகச் சொல்லப்பா."

கந்தன் தைரியமாகத் தன்னிடமிருந்த பத்து ரூபாய்ச் சில்லறையை மேஜை மீது வைத்தான். "ஐயா! பள்ளிக்குப் பின்னால் இருக்கும் காலி மனையைக் கொஞ்ச நாட்கள் எனக்குக் கொடுங்கள்" என்று சொன்னான்.

'இவன் என்ன சொல்கிறான்!' என்பதே புரியாமல் விழித்த ஆசிரியரிடம் விளக்கமாகச் சொன்னான்.

"ஐயா! பள்ளியைச் சுற்றி இருக்கும் மனையில் காய்கறித் தோட்டம் போடலாம். தண்ணீர் வசதியும் இருக்கிறது. மதிய உணவு, வேலை செய்யாமலேயே கிடைப்பதால் என் மனசு ஏற்கவில்லை ஐயா. தினமும் அரை மணி பள்ளிக்கூட மனையில் பயிர்த்தொழில் செய்யலாம் அல்லவா! அதில் கிடைக்கும் காய்கறி வருமானம் பள்ளியின் வளர்ச்சிக்கு உதவுமே! அதற்காக நான், வழிப்போக்கர்களுக்குத் தண்ணீர் கொடுத்துச் சம்பாதித்தேன்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழுந்து சம்பாதித்தால் மனத்துக்குத் திருப்தி ஆக இருக்கிறது. கொஞ்ச நாளாக இலவச மதிய உணவு எனக்குச் சாப்பிடவே பிடிக்கவில்லை ஐயா! ஏதாவது சின்ன வேலையாவது பள்ளிக்கூடத்தின் வளர்ச்சிக்குச் செய்ய விடுங்கள்." கந்தன் முடிப்பதற்குள் அவனுக்குக் கண்ணீரே வந்துவிட்டது.

தலைமை ஆசிரியர் பொறுப்பாகக் கந்தனுக்கு உதவ, சின்னஞ்சிறிய வேலி போட்டு, விதைகள் வாங்கிக் கொடுத்தார். அவனோடு ஊக்கமாக அவரும் கொஞ்சம் உழைத்தார். நாளடைவில் பள்ளிக்கூடப் பையன்கள் அனைவரும் படிப்பு முடிந்ததும் அரை மணி வேலை செய்தனர்.

அதோ தெரிகிறதே பச்சைப் பசேல் என்று ஒரு தோட்டம், அதுதான் கந்தனின் உழைப்பில் துவங்கி காயும், பூவும் பிஞ்சுமாக நிற்கிறது. காத்தாயிக்குப் பரம சந்தோஷம். இனி யாரும் அவனை இலவசச் சாப்பாடு சாப்பிடுவதாக நினைக்க மாட்டார்கள். அவனுக்கும் மதிய உணவு இனிப்பாக ஆகி விட்டது!



1. மகாபலிபுரம்.
2. ஆம்ஸ்ட்ராங்.
3. இரண்டாவது மீன் (கண்).
4. ஏழு பொருள்கள் 1. பாக்குவெட்டி 2. சுத்தியல், 3. பாட்டரி விளக்கு. 4. நிப். 5. மூக்குக் கண்ணாடி. 6. பிரஷ். 7. கத்தரிக்கோல்.
5. ஆப்பிரிக்கா.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543) Editor: K. Rajendran



எட்வர்டு ஜென்னர்

பிறந்த நாள்: 17.5.1749 மறைந்த நாள்: 25.1.1823

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

